# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 07 வெள்ளிக்கிழமை (23.07.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 239


# ஐ.நா. நிபுணர் குழு தன்னிச்சையாகவே நியமிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர்குழு, முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படாமலேயே நியமிக்கப்பட்டுள்ளது. பான் கீ-மூன் அதனைத் தன்னிச்சையாகவே அமைத்துள்ளார். இதுகுறித்து நாம் ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் பல நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகிறோம்.

முன்னர் எமது நாட்டுக்கு - எமக்கு - எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோல்வியுற்றது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்; ஏன் எல்லோருக்குமே ஞாபகமிருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

தகவல் திணைக்களத்தில் அமைச் சரவை முடிவுகளை வெளி யிடும் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்ற வேளை அமைச்சர் இதனைச் சொன்னார்.



பாதுகாப்புச்சபை அல்லது மனித உரிமைகள் தொடர்பான ஆணையம் போன்ற ஐ.நா. அமைப்புகளின் சிபார்சு, முறைப்பாடுகளின் பேரில் ஐ.நா. செயலாளர் நாயகம் இதுபோன்ற குழுவை நியமிக்கலாம். சிபார்சு, முறைப்பாடுகள் எதுவுமின்றி அவர் தன்னிச்சையாகவே இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அரசு ஐக்கியநாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளுடன் பேச்சு நடத்தி வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் எமக்கு எதிராக ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானமும் தோல்வியுற்றது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர் குழு தொடர்பாக அரசு எல்லை மீறி எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை; உரியமுறையிலேயே எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. இது விடயத்தில் அரசு எல்லை மீறிச் செயற்படவில்லை என்பதை இங்கு ஆணித்தரமாகக் கூறவேண்டும்.

இலங்கையின் யுத்தக்குற்றம் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்துள்ள மூவர் அடங்கிய நிபுணர் குழுவுக்கு மேலதிகமாக எட்டுப்பேரைக் கொண்ட மற்றும் ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ-சி)

## ஐ.நாவின் செயலர் பான் கீ மூன் இலங்கையிடம் மண்டியிடுவார்!

### மேர்வின் சில்வா இறுமாப்பு



கொழும்பு,ஜூலை 23

ஐ.நா. செயலர் பான் கீ மூன், இலங் கைக்கு எதிராகச் செயற்பட்டு வருவதால் அவருக்கு தகுந்த பாடம் கற்பிக்கச் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அவர் இலங்கையிடம் மண்டியிடுவார் என்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கண்டியில் மேம்பாலம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயிரிழக்கும்போது, தானும் உயிரிழந்து விடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது சகோதரர் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் தைரியத்தை இழக்காத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திடமாக நின்று செயற்பட்டார் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் நாட்டின் வெற்றியை ஒருபோதும் காட்டிக்கொடுத்தில்லை. இவ்வாறான

(24 ஆம் பக்கம் பார்க்க)

## டெங்குநோயால் பீடிக்கப்பட்டவரை அரச வைத்தியசாலையில் சேர்க்குக!

கொழும்பு, ஜூலை 23

டெங்குநோயால் பீடிக்கப்பட்டவரை அரச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதே சிறந்தது - என்று அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களை தனியார் வைத்தியசாலைகளில் அனுமதிக்காமல் அரச வைத்தியசாலைகளில் உடனடியாக அனுமதிக்கவேண்டும் என்ற தகவலை ஊடகங்கள் பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

டெங்குநோய் தீவிரமடைவதற்கு சுகாதார அமைச்சரை மட்டும் குற்றம் கூற முடியாது. டெங்கு நோய் பீடிக்கப்பட்ட பின்னர் தான் நோயாளி வைத்தியசாலைக்கு வருகின்றார். டெங்குநோய் பரவுவதற்கு உள்ளு

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மக்களின் நிலையைக் காட்டி சர்வதேச உதவி; ஆனால் அவர்களுக்கு இன்னமும் துன்பமான வாழ்க்கையே

கொழும்பு, ஜூலை 23

வட பகுதியிலுள்ள பொதுமக்களின் நிலையைக் காட்டி அரசு சர்வதேச ரீதியில் உதவிகளைப் பெற்றுக்கொண்ட போதிலும் அந்த உதவிகளை வடபகுதியின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதில்லை - என்று ஜே.வி.பி. குற்றம்சுமத்தியுள்ளது.

இங்கு வாழும் பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் காரணமாக அவதிக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களைக் காட்டி அரசு சர்வதேசத்திடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்று வருகிறது என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் அந்த நிதியை அந்தப் பகுதியின் அபிவிருத்திக்கு அரசு பயன்படுத்துவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜே.வி.பியின் சமவுடமைவாத இளைஞர் சங்கத்தினர் நேற்று கொழும்பில் நடத்திய ஊடவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜே.வி.பியின் பிரதிநிதிகள் அண்மையில்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## சுழல் வீச்சு மன்னன் முரளிக்கு சாதனை விருது

கெகொழும்பு, ஜூலை 23




சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுகளைப் பெற்ற சாதனையுடன் டெஸ்ட்போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றுச் சென்றார் 'சாதனை மன்னன்' முத்தையா முரளிதரன்.

கிரிக்கெட் உலகிலேயே 18 வருடங்களாகத் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைத் தக்கவைத்துக்கொண்ட முரளி பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி உள்ளார்.

டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அதிகூடிய (1,315) விக்கெட்டுகளைக் கைப் பற்றிய ஒரே சாதனை வீரர் முரளி ஆவார்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் நியூயோர்க் புறப்பட்டார் புஹ்னே

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னே நேற்று அதிகாலை நியூயோர்க் புறப்பட்டுச் சென்றார்.

இவர் மூன்று நாள்களுக்கு முன் நியூ

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 17ஆவது திருத்தம் தொடர்பாக பீரிஸுடன் ஐ.தே.கவினர் பேச்சு

கொழும்பு, ஜூலை 23

அரசமைப்புத் திருத்தத்தின் 17 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள் குழுவுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

17ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி முடிவெடுத்துள்ள யோசனைகள் குறித்துப் பேசுவதற்காகவே இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அரசின் அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என்று ஐ.தே. கட்சி எம்.பி. ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

இந்தப் பேச்சின்போது ஐ.தே.க. முன்வைத்த 17ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான யோசனைகளில் காணப்பட்ட சில சந்தேகங்கள் மற்றும் தெளிவற்ற விடயங்கள் பற்றிப் பேசித் தீர்க்கப்பட்டன என்று ஜோஸப் மைக்கல் பெரேரா கூறினார்.

நாட்டின் பல முக்கிய பிரச்சினைகளுக்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல்களில் வாக்குகளைப் பயன்படுத்தாவிடினும் கூட வாக்காளர்களாக பதிவுசெய்து கொள்வது அவசியம்

### தமிழ் மக்களை அறிவுறுத்துகிறது 'பவ்ரல்' அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை23

தமிழ் மக்கள் தேர்தல் காலங்களில் தங்களுடைய வாக்குகளைப் பயன்படுத்துவதும் பயன்படுத்தாதிருப்பதும் அவரவர் விருப்பம் ஆனால் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு 'பவ்ரல்' அமைப்பினர் பேராசிரியர் இரா.சிவச்சந் திரனின் இல்லத் தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளருடனான சந்திப்பின் போது தெளிவுபடுத்தினர்.

கடந்த 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தின் பின்னர் தமிழ் பிரதேசங்களில்

(24 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சேக்கிழார் மன்றத்தால் நூல் வெளியீட்டு விழா

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தால் ''மகியம்பதி அங்கணாமைக் கடவை கண்ணகி கோயில் வரலாற்றுச் சிறப்பு'' என்ற நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வு அகில இலங்கை சேக்கிழார் மன்றத் தலைவர் ச.கா.சபாநாதன் தலைமையில் நடைபெறும். சிறப்பு விருந்தினராக செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் கலந்துகொள்வார்.

நிகழ்வின் அறிமுக உரையை அ.இ.சே.மன்றச் செயலாளர் இ.சிவசுப்பிரமணியமும், சிறப்புரையை கிளிநொச்சி முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சோதிநாதனும் ஆற்றுவார். (ஒ-323)

## கண்ணீர் அஞ்சலிகள்



எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி வதனி பிறேம கோணேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நாகேஸ்வரி சிவஞானசுந்தரம்**

அவர்கள் 14.07.2010 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/குடத்தனை
அ.த.க.பாடசாலை, குடத்தனை. அதிபர், ஆசிரியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பார்வதியம்மா செல்வராசா



நல்லூர் அரசவீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதியம்மா (பரமேஸ்) கடந்த (18.07.2010) ஞாயிற்றுகிழமை காலமானார்.

அன்னார் செல்வராசாவின் (நல்லூர் பிரதேச சபை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரவணமுத்து- அன்னலக்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பசுபதி -சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகளும், குமுதினி (ரொறான்ரோ), வதனி (வன்கூவர்), சுபாஜினி (வன்கூவர்), சதீசன் (வன்கூவர்), பிரதீபன் (வன்கூவர்) ஆகியோரின் அன்புத் தாயும் உதயகுமார் (ரொறான்ரோ), பிரபாகரன் (வன்கூவர்), அனீஸ், கிருத்திகா, சுசன் ஆகியோரின் அன்பு மாமியும் சகானா, சரன், உஷாணி, பிரியங்கா, விஷ்ணு, பரதன், ஆகாஷ், சுவேத்தா, லக்கிஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அரசபிள்ளை, கணேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி, யோகேஸ்வரி, மல்லிகா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.07.2010 வியாழக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9.00 மணிவரை 2035 WESTON ROAD, (WESTON LAWRENCE) இல் அமைந்துள்ள WARD FUNERAL HOME இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. நாளை (24.07.2010) சனிக்கிழமை 12 மணிக்கு இறுதிக்கிரியை நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்-
உதயன்-(கனடா) 647 349 7094
647 808 7193
பிரதீபன்- 604 726 5064
சதீஸ் - 604 437 8432

கனடா. (100834)

### திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை

உடுவிலைப்பிறப்பிடமாகவும் மலேசியா, லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்பொழுது உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (22.07.2010) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

காளிகோயிலடி,
அம்பலவாணர் வீதி,
உடுவில். (100844)

தகவல்:
பிள்ளைகள்.

## வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானம் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம்



நாளை (24.07.2010) சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை. முற்பகல் 10.35 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணம்

அனைவரும் வருக! அம்பாள் அருள் பெறுக!

வட்டு.கிழக்கு, வட்டுக்கோட்டை. (சி/569397) அம்பாள் அடியார்கள்.

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் 'பிளாஸ்ரிக்' சத்திர சிகிச்சை

கிளிநொச்சி, ஜூலை 23

கிளிநொச்சி வைத்தியசாலையில் வெளிநாட்டு வைத்தியர்களின் 'பிளாஸ்ரிக்' சத்திரசிகிச்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இச்சத்திர சிகிச்சைக்கான பதிவுகளை உடனடியாக வைத்தியசாலையில் மேற்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.பத்மநாதன் கேட்டுள்ளார். (ஒ-1)

## தொழில் முயற்சி கூட்டுறவு சங்கம் அமைப்பது தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் என நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வடமாகாண மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் முதல் நடவடிக்கையாக பிரதேச செயலக மட்டத்தில் சங்கம் அமைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதை அறிந்தே இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-323)

## மத்தியஸ்தர் தின விழா

சண்டிலிப்பாய் , ஜூலை 23

சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் சபையின் மத்தியஸ்தர் தினவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் மத்தியஸ்தர் சபை தவிசாளர் கு.ஜெகநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மல்லாம் நீதிமன்ற நீதிபதி க.அரியநாயகம் கலந்துகொள்வார். (ஒ-323)

* * *

வேலணை, ஜூலை 23

வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபையின் தேசிய மத்திஸ்தர் தின விழா நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு வேலணை மத்திஸ்தர் சபை தவிசாளர் எஸ்.கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்

இந்த நிகழ்வு புங்குடுதீவு, வட இலங்கை சர்வோதய புஸ்பா மணி மண்டத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனனும், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபனும் கலந்து கொள்கின்றனர். (ஒ-323)


## JOB Guaranteed "Certified Medical Assistant"

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை **லாவா வைத்தியசாலையில்** சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகப் பெற்றிடுங்கள்.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி

கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகத் தேர்வு மூலம் அனுமதி.

July 2010 Intake

M.B.B.S வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.



KU Creating Ideals

உள்ளகப்பயிற்சி வழங்குவோர்: Lava Hospitals
சான்றிதழை இணைந்து வழங்குவோர்: KNOWLEDGE UNIVERSE® Malaysian Soft Skills and ICT Development Centre

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



துளிர்களின் 6ஆவது ஆண்டு நிறைவு விழாவும் 'மின்மினி' குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வும் 20.07.2010 நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த பாரம்பரிய கைத்தொழில், சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரான கௌரவ

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்கள் துளிர்கள் வளர்ச்சிக்காக ஒரு லட்சம் ரூபாவை முதற்கட்ட நன்கொடையாக வழங்கி எமது சேவையைத் தொடர உதவிக்கரம் நீட்டி எம்மை அரவணைத்துக் கொண்டமைக்காக துளிர்களின் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நன்றியுடன்: **துளிர்கள் நிறுவன குடும்பத்தினர்.**
30, கம்பஸ் லேன், திருநெல்வேலி.

(சி/569101)

## வேலையாள்கள் தேவை

வவுனியாவில் இயங்கும் கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்கு வவுனியா அலுவலகம் மற்றும் அதனைச் சார்ந்த பிரதேசங்களில் பணியாற்றக்கூடிய பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)
2. அளவையியலாளர் (Quantity Surveyor)
3. திட்ட முகாமையாளர் (Project Manager)

தொடர்புகளுக்கு: 0777739312
077 0257177

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (சி/569108)

## 36ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



திருமதி
**சிவசாம்பவி சிவதாசன்**

மண்ணுக்காக 19.10.1975 — விண்ணுக்காக 18.06.2010

18.06.2010 அன்று இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு திருமதி சிவசாம்பவி சிவதாசன் அவர்களின் 36ஆம் நாள் நினைவும் சபிண்டீகரண கிரியையும் இன்று (23.07.2010) வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் (மாமனார் இல்லத்தில் முல்லை, கரணவாய் தெற்கு, கரவெட்டி) இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு- இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்- தகப்பன், தாய், கணவர், பிள்ளைகள்
சகோதரர்கள்- சிவதேவி, சிவசுதன், திருமதி சிவசோதி ஜெகநாதன்.

வரணி வடக்கு, வரணி. (இ/569112)

## கண்ணீர் அஞ்சலி



எமது விவசாயபீடத்தின் விவசாய உயிரியல் துறையில் கடமையாற்றிய அமரர்

**ஜ.பாலச்சந்திரன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் மறைவுக்காக எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

விவசாய பீட நலன்புரி சங்கம்,
விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம். (100841)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஓ பிளேக் சொன்னது காதில் ஏறுமா?

இலங்கையில் நிலையான சமாதானத்தை உண்டாக்குவதற்கான அரிய வாய்ப்பு இப்போது கிடைத்துள்ளது. நீண்டகாலமாக நாட்டில் நடைபெற்றுள்ள போர் முடிவுக்கு வந்துவிட்டது. அதனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இங்கு வாழும் இனங்களுக்கிடையில் சமாதானத்தைக் கொண்டு வர இயலும்.

கொழும்புக்கு ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயமாக நேற்றுமுன்தினம் விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான உதவி அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இனங்களுக்கிடையேயான நல்லிணக்கமே முக்கிய சக்தியாக விளங்க வேண்டும் என்பது அவரது கருத்து. அது மெத்தவும் சரியானதுமாகும்.

நல்லிணக்கத்துக்குரிய அம்சங்களாக அவர் பின்வருவனவற்றைத் தெரிவித்திருக்கிறார்;

* போரின்போது இடம்பெயர்ந்து அகதிகளானவர்களை முடியுமான எண்ணிக்கையில் விரைந்து மீளக் குடியமர்த்தி, அவர்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கி, தொழில் வாய்ப்புக்களை உண்டாக்க வேண்டும்.
* நல்லிணக்கத்தின் இரண்டாவது பிரதான தேவை, தவறுகள் சீர்செய்யப்படுவதற்கான பொறுப்பை உறுதிப்படுத்தவேண்டும். அதற்கான வாக்குறுதிகள் வழங்கப்படவேண்டும்.
* மாகாணங்களுக்கிடையே அதிகாரத்தைப் பகிர்தல், 17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, மனித உரிமைகளைப் பேணி, ஊடக சுதந்திரத்தைப் பாதுகாத்து இலங்கை மக்களிடையே நம்பிக்கையை உருவாக்கவேண்டும். இது பிளேக் வரிசைப்படுத்தியவற்றுள் மூன்றாவது.

கொழும்பில் சுமார் நான்கு வருடங்கள் அமெரிக்காவின் தூதுவராகப் பணியாற்றியவர் றொபேர்ட் ஓ பிளேக். 2009ஆம் ஆண்டு மே மாதம் வரை இங்கு கடமையாற்றியவர். அதனால், அவருக்கு இலங்கை அரசாங்கத்தின் போக்கும் உள்ளார்ந்த நோக்கும் நன்றாகவே தெரியும்.

அதனால், அவர் எடுத்துக்கூறியுள்ள வழிகாட்டுதல்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால், அவை நாட்டில் சமாதா னத்தையும் அதன் மூலம் அபிவிருத்தியையும் உண்டாக்கத் துணைசெய்யும் என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதே.

ஆனால் இலங்கை அரசு இந்த வழிகாட்டுதல்களை உரிய அளவில் உகந்த வகையில் நடைமுறைப்படுத்த மனங்கொள்ளுமா என்பது கேள்விக்குரிய, சந்தேகத்துக்குட்பட்ட ஒன்றாகும்.

அவர் சுட்டிக்காட்டிய போரினால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றும் பணி (கண்ணிவெடி அகற்றுதல் உட்பட) முழுவீச்சில் நடைபெறவில்லை என்பது களநிலை. நாளாந்தம் ஊடகங்களில் வெளிவரும் செய்திகளும், புகைப்படங்களும் இடம்பெயர்ந்தோர் மீளக்குடியேற்றம் ஆரம்பமாகி 8 மாதங்களாகியும் அது மந்த கதியிலேயே நடைபெறுவதை எடுத்துக்காட்டுகின்றன.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு றொபேர்ட் ஓ பிளேக் அடுத்ததாக சுட்டிக்காட்டியுள்ள விடயம் ஏற்கனவே இழைக்கபட்ட தவறுகள் சீர்செய்யப்படுவதற்கான பொறுப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பதாகும்.

இலங்கை அரசாங்கம் உருவாக்கியுள்ள நல்லிணக்க ஆணைக்குழு இப்போதுதான் ஆயத்த வேலைகளில் ஈடுபடத்தொடங்கியுள்ளது. அநேகமாக போர் நடைபெற்ற வன்னியில் தேடிச் சென்று சாட்சியங்களைச் சேகரிக்கும் புதிய வித, புதுமையான் நடைமுறை அடுத்த மாதம் பிற்பகுதியிலேயே ஆரம்பமாகும் என்று அனுமானிக்கலாம். இந்த அளவு மந்தகதியிலேயே இலங்கையில் அலுவல்கள் நடைபெறும் என்பதற்கான இரண்டாவது முன் உதாரணம் இது.

மாகாணங்களிடையே அதிகாரத்தைப் பகிரும் நடவடிக்கை என்று பிளேக் மொட்டையாகக் கூறுவது இனப்பிரச்சினைக்கான தீர்வு. இந்தியா வலியுறுத்தியும் கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரம் உடனடியாகச் செய்யக்கூடிய ஒன்றல்ல என்று கூறிவிட்டு அதனை ஆற அமரப் போட்டுள்ள அரசு - ஆட்சி முறையை மாற்றுவது குறித்து முன்னுரிமை கொடுத்துச்செயற்படுகிறது.

ஆகையால் இந்தியா என்ன, அமெரிக்கா என்ன, எந்தக் கொம்பன் சொன்னாலும் எமது நிகழ்ச்சி நிரலை நாம் எங்கள் வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்றவாறுதான் செய்வோம் என்ற போக்கில் இன்றைய அரசு செயற்படுகிறது. நீங்கள் சொல்வதைச் சொல்லி விட்டுப் போங்கள். ஒரு காதினால் அதனைக் கேட்டு, அடுத்த காதினால் விட்டு எமது நிகழ்ச்சி நிரலை நாம் செயற்படுத்துவோம் என்ற போக்கே இந்த நாட்டில் தொடர்கிறது.

இலங்கைக்கு இப்போது தலையிடியைக் கொடுத்திருக்கும் முதன்மைப் பிரச்சினை, இந்த நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான்-கீ மூன் நிபுணர் குழு ஒன்றை நியமித்தமை, அந்தக் குழுவுக்கு மற்றும் ஐ.நாவின் ஐந்து உயரதிகாரிகளைப் பணிக்கு அமர்த்தியமை என்பன. எல்லாவற்றுக்கும் கூடுதலாக ஆப்பு வைத்தது போன்று, கொழும்புக்கு கண்ணிலும் காட்ட முடியாத ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையை, நிபுணர் குழுவின் மேற்பார்வையாளராக பான்-கீ மூன் ஆகப்பிந்தி நியமித்திருப்பது.

இதுகுறித்து இலங்கை அரசு வெப்பியாரத்தில் அனல் அருகே நிற்கும் சூழ்நிலையில், பிளேக்கின் புத்திமதிகளும் யோசனைகளும் குப்பைக் கூடைக்குள் போடப்படும் சாத்தியமே பெரிதும் உண்டு!

# தாண்டிக்குளம் - காங்கேசன்துறை இடையிலான ரயில் பாதைப் புனரமைப்பு பணி துரித கதியில்

## போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம தகவல்

கொழும்பு, ஜூலை 23

தாண்டிக்குளத்திலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் மற்றும் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரைக்குமான ரயில் பாதைகளைப் புனரமைக்கும் வேலைகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இப்பாதை வேலைகளை அண்மையில் பார்வையிட்ட போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம விடுத்த பணிப்புரையின் பேரில் இப்பாதைகளைப் புனரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

வடபகுதியில் மீள்கட்டுமானம் மற்றும் மீள் குடியேற்றங்கள் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தியா 425 மில்லியன் அமெரிக்க டொலரை வடபகுதி ரயில் பாதை அமைப்புக்கெனக் கொடுத்துதவியுள்ளது.

தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரையிலான ரயில்வே பாதைப் புனரமைப்பை அண்மையில் பார்வையிட்ட அமைச்சர் குமார் வெல்கம மன்னார் மற்றும் காங்கேசன்துறை ரயில்வே பாதைகள் புனரமைக்கும் திட்டம் குறித்த திகதியில் முடிவடைந்துவிடும் என்று கருத்து வெளியிட்டார்.

ஓமந்தை ரயில்வே நிலையப் புனரமைப்பு வேலைகள் சமீபகாலமாகத் தடைப்பட்டிருந்த போதிலும் இப்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ரயில்வே ஊழியர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்த அமைச்சர் வடபகுதி ரயில்வே பாதையில் பணிபுரியும் ஊழியர்களின் தடைப்பட்டுள்ள கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளைப் பணித்தார்.

159 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்ட வடபகுதியின் பாதையில் 35 பாலங்கள் காணப்படுகின்றன. 16 ரயில் நிலையங்களும் 12 உப நிலையங்களும் காணப்படுகின்றன. இவை அனைத்துமே மீளத்திருத்திக் கட்டவேண்டியவைகளாக இருக்கின்றன. வடபகுதி ரயில்வே பாதையைப் புனரமைப்புச் செய்வதற்கு அரச நிறுவனங்களுடன் பல தனியார் நிறுவனங்களும் முன்வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. (ப)

# செல்வச் சந்நிதிக்கு வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்

## ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்

வடமராட்சி , ஜூலை23

சரித்திரப்பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவிற்கு வருகைதரும் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பெருந்திருவிழா தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் க.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பக்தர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர் உள்ளிட்ட சகல வசதிகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்வதென்றும் இவற்றை அங்கு தற்காலிகமாக அமையும் பிரதேச செயலக தற்காலிக அலுவலகம் கண்காணிக்கும் எனவும் தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர், வல்வெட்டித்துறை பொலிஸ் அதிகாரியின் பிரதிநிதி, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தலைமை பொது சுகாதாரப் பரிசோதகர், ஆலயப் பரிபாலகர் பிரதிநிதி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்வச் சந்நிதி முருகன் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும். (236)

# கொழும்பிலிருந்து ஓமந்தை வரையான பரீட்சார்த்த ரயில்சேவை 31ஆம் திகதி

கொழும்பு, ஜூலை 23

கொழும்பிலிருந்து ஓமந்தைக்கான ரயில் பாதையினுடாகப் பரீட்சார்த்த ரயில் பயணம் இம் மாதம் 31ஆம் திகதி நடைபெறும் என்று ரயில்வே அதிகாரி தெரிவித்துள்ளதாக இப்பாதை இன்னும் சில தினங்களில் பூர்த்தியடைந்து விடும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஓமந்தைக்கான ரயில்பாதை செப்பனிடப்பட்டு விட்டதாகவும் அங்கு ரயில் நிலையம் மட்டுமே இன்னும் முற்றுப் பெறாமல் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலைய அமைப்பு ஒரு மாதத்தில் முடிவடைந்துவிடும் என்றும் திறப்பு விழாவுக்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என்றும் 'உதுகு மிகுது' திட்ட மேலாளர் கே.எம் பிரேம திலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஓமந்தை ரயில் பாதை 25 வருடங்களின் பின்னர் திறக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# சுயதொழில் உதவிக்கான காசோலைகள் வந்து சேர்ந்தன

கைதடி, ஜூலை23

கோப்பாய் பிரதேச செயலகம் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஆகியவற்றினூடாக வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்திற்கு சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்தோரில் சிலருக்குக் கொடுப்பனவுக்கான காசோலைகள் மேற்படி பிரதேச செயலகங்களுக்கு கிடைத்துள்ளன.

கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, சிறுகடை மற்றும் தையல் உள்ளிட்ட சுயதொழில்களை மேற்கொள்வதற்கு 7500 ரூபா வீதம் முதலாம் கட்ட உதவித் தொகையாகவும் சிலருக்கு இரண்டாம் கட்ட உதவித் தொகையாகவும் இவை வழங்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ந.விக்ரோரியா (கோப்பாய் தெற்கு), அ.வயூரன் (ஆவரங்கால் மேற்கு), சு.குமுதினி (செல்வபுரம், உரும்பிராய்), அ.பவளரஞ்சினி (தோப்பு, அச்சுவேலி), தே.சாந்தகுமார் (வளலாய் கிழக்கு), அ.பத்மாவதி (உரும்பிராய் கிழக்கு), பி.வனிதா (கதிரிப்பாய், அச்சுவேலி), சி.இன்பமலர் (தோப்பு, அச்சுவேலி), கு.அகிலன் (புத்தூர் வடக்கு) ஆகியோர் முதலாம் கட்டக் கொடுப்பனவுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சி.றெஜினா (ரி.சி. லேன், மானிப்பாய்), ர.ஜெயராணி (பெரிய விளான், இளவாலை) ஆகியோர் முதலாம் கட்ட கொடுப்பனவுக்காகவும் அ.தர்மினி (ஆனந்தாவீதி, மானிப்பாய்), சி.சைலகுமாரி (மாசியப்பிட்டி), பு.ஜசிதா (பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய்) ஆகியோர் இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்காகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என சமூக சேவைத் திணைக்களத்தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார். (50-288)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 08 | : 24.07.2010 |
| | : சனிக்கிழமை |
| திதி | : சதுர்த்தசி முழுவதும் |
| நட்சத்திரம் | : மூலம் காலை 06.23 வரை |
| சுபநேரம் | : 03.02 - 04.32 |
| ராகுகாலம் | : 09.02 - 10.32 |

# ஊடகத்துறையை வளர்ப்பதற்கு அதிகாரசபை உருவாக்கப்படும்

## கண்டியில் அமைச்சர் ஹெகலிய அறிவிப்பு

கொழும்பு, ஜூலை23

பத்திரிகையாளர்களும் ஊடகத்துறையும் ஆதரவும் அபிவிருத்தியும் காணும்வகையிலான ஒரு ஊடக அதிகாரசபையை உருவாக்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இத்துறைகளில் இருப்போரின் ஆக்கத்திறனை வளர்ச்சியடையச் செய்வதே இதன் நோக்கமாகும். இத்தகவலை ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பான சட்ட மூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. ஊடகத் துறையில் தலையீடு செய்வதோ ஊடக சுதந்திரத்தை ஒடுக்குவதோ இதன் நோக்கமல்ல என்று கூறினார் அமைச்சர்.

கடந்த திங்கட்கிழமை கண்டியில் பத்திரிகையாளர் சங்கத்தில் உரையாற்றும்போது அமைச்சர் இதனை வெளியிட்டார். பத்திரிகையாளர்களின் ஆக்கத்திறனை அபிவிருத்தி செய்வது தமது அமைச்சின் நோக்கம் என்று கூறிய அமைச்சர் இத்துறையில் முன்னேற விரும்பும் பத்திரிகையாளர்களுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது தமது நோக்கம் என்றார்.

சகல ஊடகங்களையும் அவைகளின் முழு தரத்திற்கு வளர்த்தெடுப்பது புதிய ஊடக அதிகார சபையின் நோக்கமாகவிருக்கும் என்று அமைச்சர் மேலும் கூறினார். (ப)

# 'புரோட்பான்ட்' இணையச் சேவை யாழ்.மாவட்டத்தில் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

'ஒப்ரிக்கல் பைபர் கேபிள்' மூலம் தரைக்கு கீழான 'புரோட்பான்ட்' இணையத்தள சேவைகள் யாழ். குடாநாட்டுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பணிகள் கடந்த வருடம் சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகள் தற்போது நிறைவடைந்ததைத் தொடர்ந்து சகல தகவல் பரிமாற்றங்களும் இச்சேவை மூலம் பரிமாற்றப்படுகின்றது.

இதனால் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சித்தன்கேணி, கோப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய பரிவர்த்தனை நிலையங்கள் மூலம் இச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே இதுவரை நிலவிய இணைய வசதிகளுக்கான நெருக்கடிகள் நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-16)

## கணனி கிளை நிறுவனங்கள் திறக்கப்பட்டன

'ஈசொப்ற்' கணனிக்கற்கை நிறுவனம் இரண்டு புதிய கற்கை நிறுவனங்களைத் திறந்துள்ளது. யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள இவ்நிறுவனத்தின் புதிய கிளைகளை சாவகச்சேரியில் தென்மராட்சிப்பிரதேச செயலர் ஸ்ரீனிவாசனும், கிளிநொச்சியில் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசாவும் திறந்து வைத்தனர். (எ-313)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் மரியநாயகம் அலோசியஸ்

மலர்வு
05.07.1981

உதிர்வு
23.07.2007



எம் கண்மணியே, எம் செல்வமே
நீயின்றி எம் இதயம் வெந்தே
சிதறுதடா
உனைக் காண எம் விழிகள் ஏங்கியே
தவிக்குதடா
உன்நினைவே எம் வாழ்வாய்
என்றும் உன் நினைவுகளுடன்

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு. (98219)

உன்
மகன், மனைவி, பெற்றோர்.

## Calling for Tender
## Teaching Hospital, Jaffna.

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00 am on 05.08.2010. Tender form may be collected from Director,Teaching Hospital, Jaffna up to 01.08.2010 on payment on non refundable deposit.

| No | Nature of Work | Non Refundable Deposit |
|---|---|---|
| 01. | 750KVA Generator Building | Rs. 4,000 |
| 02. | Repairs to Roof of Ward 24 | Rs. 3,000 |
| 03. | Construction of Vehicle Park | Rs. 2,000 |

2. Tenders will be opened immediately after closing, at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representative are requested to be present at the opening Tenders.

3. Tender forms are issued only to the contractor who has valid registration in Grade "M7" and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

4. Sealed Tenders may be dispatched either by registered post or be hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00am on 05.08.2010.

5. Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

6. For further details please contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
Divisional Tender Board,
Teaching Hospital, Jaffna.

(C/569398)

# SPOT ADMISSION

## இறுதிச்சந்தர்ப்பம்!

## IELTS தேவையில்லை

## Study in the United Kingdom
## Sep/ Oct Intakes in Progress

2011ல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறைகளுக்கு முன்னர்
உங்கள் Student Visa ஐ உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

பல கல்லூரிகளின் பல பிரதிநிதிகள் வருகைதந்து
IELTS இல்லாமல் ஒரே நாளில் அனுமதிகள் தரவுள்ளனர்.

உங்கள் கல்விசார் ஆவணங்கள், சுயவிபரக்கோவையுடன்
சமூகமளித்து இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்

**இடம் :** Cosy Hotel and Restaurant
இல 15, சிறாம்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**காலம் :** 25July 2010 (Sunday)
காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை

## Eisc EXPRESS
### INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935
Web: www.expresslanka.com

FLEX Graphic

# படித்தவர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்த தமிழ்ச் சமூகம் இன்று கடத்தல்காரர்களை அனுப்பும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்கா சொல்கிறார்

யாழ்ப்பாணம்,ஜூலை 23



நாம் தலை நிமிர்ந்து நிற்க கல்வியில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்திருக்கின்றது. படித்தவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பிய தமிழ் பேசும் சமூகம், இன்று கடத்தல்காரர்களையும், கப்பக்காரர்களையும் ஆயுத துணைப் படைக்காரர்களையும் அனுப்பும் துர்ப்பாக்கிய நிலைக்கு இந்த நாடு தள்ளப் பட்டுள்ளது. இதனை மாற்ற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ர.ஸ்ரீரங்கா.

சக்தி எவ்.எம் வானொலி கடந்த ஞாயிற்றுக்கிழமை புலமைப்பரிசில் மாணவர்களுக்காக யாழ்.மத்திய கல்லூரியில் நடத்திய 'சக்தியின் புலமைத்துளிகள்' கருத்தரங்கில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொண்டு உரையாற்றி போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்;

'பிறப்பு அன்னையால்; சிறப்பு கல்வியால்' என்ற தாரக மந்திரம் தமிழ் மக்களின் மனதில் வேரூன்றிப் பதிந்துள் ளது. இத னாலேயே தமிழ் பேசும் மக்கள் கல்வியில் முக்கிய கவனம் செலுத்தினார்கள். அதி லும் குறிப்பாக வடக்கு மக்கள் அதிகூடிய கவனத்தைக் கொடுத்தனர்.

அழியாச் செல்வமான கல்வியைக் கொடுக்கக் கொடுக்க வளர்கின்ற கல்வியில் வடமாகாண மக்கள் அதிக கவனத்தைச் செலுத்தி வந்ததை வரலாற்று புள்ளி விவரங்கள் எடுத்தியம்புகின்றன. எழுத் தறிவிலும், பல்கலைக்கழக நுழைவிலும் அதிகூடிய விகிதத்தினை வடக்கு கொண்டிருந்தது.

இதனை சகித்துக் கொள்ளாத - ஜீர ணிக்க முடியாத சில தீய சக்திகள் வடக்கில் கல்வி நிலை உயர்ந்ததற்கு காரணம் வெள்ளைக்காரரின் ஆட்சியில் அவர்களுடன் சேர்ந்து சோரம்போகும் இனமாக இருந்ததாலேயே ஆங்கிலேயர் கள் பல பாடசாலைகளைக் கட்டியதாக முழங்கால்களில் முடிச்சுப் போட முயல் கின்றனர்.

இது இயலாமையின் வெளிப்பாடு என்பதை வரலாற்று ஆய்வாளர்களால் உணர முடியும். இந்துமதத்தை ஆங்கிலேயர்கள் அங்கீகரிக்காத போது வாழை இலையில் சாப்பிட்ட யாழ்.மக்கள் வாழை இலையை கூரையில் செருகியும் தமது கலாசாரத்தைக் கைவிடவில்லை.

இன்று பல்கலைக்கழகம் நுழையும் விகிதத்தில் யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி எனப் பல இந்துக் கல்லூரிகள் இன்றும் சிறந்து விளங்குகின்றன. யாழ்ப்பாணம் ஆங்கிலேயர்களால் முன்னேறியது என்றால் அவர்களின் காலத்தில் அழிக்க முற்பட்ட இந்து மதத்தின் பெயர்களில் உள்ள பாட சாலைகள் இன்றும் மிளிரும் விளக்குகள் போல் ஒளி விட்டுக் கொண்டு எப்படியிருக்க முடியும்.

இப்படியெல்லாம் மூதாதையரால் கட்டி வளர்க்கப்பட்ட அழியாச் சொத் தான கல்வி, இடப்பெயர்வுகளாலும் அகதி வாழ்க்கையினாலும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்ததை யாரும் மறுக்க முடியாது. எனவே மீண் டும் தலை நிமிர்ந்து நிற்க கல்வியில் தீவிர கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்திருக்கின்றது.

படித்தவர்கள் நிறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை அனுப்பிய தமிழ்பேசும் சமூகம் இன்று கடத்தல்காரர்களையும், கப்பக்காரர்களையும், ஆயுத துணைப் படைகளையும் அனுப்பும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலைமாற வேண்டும் - என்றார்.

(6)




## கலட்டுக் காணிகளில் கற்களை அகற்ற தென்பகுதியிலிருந்து இயந்திரங்கள்

நாவற்குழி,ஜூலை 23

யாழ்.மாவட்டத்தில் கற்கள் வெளிக் கிளம்பிக் காணப்படும் கலட்டுக் காணிகளின் கற்களைக் கிளறியகற்றும் வேலைக்கு தென்பகுதியிலிருந்து வந்துள்ள இயந்திரங்கள் ஈடுபட்டுள்ளதனைக் காண முடிகின்றது.

'பைகோ' என அழைக்கப்படும் எக்ஸ வேற்றர்களின் உரிமையாளர்கள் இதனை எடுத்து வந்துள்ளனர். பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த சாரதிகள் இதனை இயக்குகின்றனர்.

மணித்தியாலம் ஒன்றுக்கு கல்லை அகற்ற 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் கட்டணம் அறவிட்டு இவ் வேலையில் ஈடுபடுகின்றனர். கட்டட நிர்மாண வேலைகள் மிகத் துரிதமாக நடைபெறுவதால் சென்ற வருடம் இதே காலப் பகுதியில் ஆயிரத்து 200 ரூபா விற்ற ஒரு ட்ராக்ரர் சுமை கற்கள் தற்போது 2 ஆயிரத்து 500 வரை விலை போகின்றது.

இதனால் 3 ஆயிரத்து 500 ரூபா மணித் தியாலக் கூலியாகக் கொடுத்து கற்களை அகற்றும் போது தழக்கு லாபம் கிடைப்பதாகவும் காணி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

காணிகளிலிருந்து கற்களை அகற்றி வீடு கட்டுதல், தோட்டநிலம் அமைத்தல், வளவுகளைத் துப்புரவாக் குதல் போன்ற பணிகளை காணி உரிமையாளர்கள் மேற்கொண்டு வருகின்றதைக் காணமுடிகின்றது. (50-121)

## கால்நடைகளின் தங்குமிடமாகியுள்ள ஆனைக்கோட்டை சனசமூக நிலையம்



நவாலி,ஜூலை 23

ஆனைக்கோட்டை 3ஆம் கட்டையடியிலுள்ள உதயதாரகை சனசமூக நிலையம் கால்நடைகளின் உறைவிடமாகக் காட்சியளிக்கின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டின் பின்னர் முற்றாகச் செயற்படாமல் இருக்கும் இந்த நிலையத்தின் கூரைச் சீற்றுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இதிலுள்ள கதவுகளின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு திறந்த நிலையில் உள்ளது. மேலும் இது பிரதான வீதியோரம் அமைந்துள்ளதால் வேலிகள் இன்றி திறந்த வெளியாகக் காட்சியளிக்கின்றது.

2009 ஆம் ஆண்டுக்கு முன் சிறந்த முறையில் இயங்கி வந்த இந்த நிலையத்தில் விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகள், சமய நிகழ்வுகள் கருத்தரங்குகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்று முன்னணியில் திகழ்ந்து வந்தது.

தற்போது பத்திரிகைகள், நூல்கள் இன்றி அநாதரவாக இருக்கும் இந்த நிலையத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் மீளவும் செயற்பட வைத்து பத்திரிகைகள், சிறந்த நூல்கள் என்பவற்றை வைத்து எதிர்கால சந்ததியினரின் அறிவைப் பெருக்க முன்வர வேண்டுமென்று மக்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (50-100)

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி பல்வேறு செயற்றிட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி பிரதேசசபை கைதடி பொது நூலகத்தினாலும், உப அலுவலகத்தினாலும் பொதுமக்கள் மத்தியில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

கைதடி பொது நூலகத்தால் நூலகர் க.மகேஸ்வரனின் மேற்பார்வையில் கைதடி மேற்கு பாரதி சனசமூக நிலையத்தில் நூல் கண்காட்சியொன்று கடந்த வெள்ளிக்கிழமை கைதடி உப பணி மனைப் பொறுப்பதிகாரி கி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக் கண்காட்சியில் புதிய நூல்கள், பழைய நூல்கள் அடங்கிய சிறுவர் முதல் பெரியோர்கள் வரை பயன்படுத்தக் கூடிய புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இந்த நிகழ்வில் புதிய அங்கத்துவ வாசகர்கள் நூலகத்துக்குச் சேர்க்கப்பட்டனர். இந்நிகழ்வில் பெருமளவு பொது மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வையொட்டி பாரதி சனசமூக நிலையம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

(50-131)

## மீளக்குடியமர்ந்தோருக்கு வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 23

உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட வளலாய் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னியில் தங்கியிருந்து மீண்டும் தமது சொந்த இடமான வளலாய் கிராமத்தில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு வீட்டுத் திட்டத்தின் மூலம் வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(6-319)

## தேவபாகவதம் தொடர் சொற்பொழிவு

வடமராட்சி,ஜூலை 23

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு 'தேவபாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (6-236)

## யாழ்.மத்தியஸ்தர் தின விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 23

யாழ்.மத்தியஸ்தர்தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் மத்தியஸ்தர் சபை தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிரேம் சங்கர், பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டத் தலைமை பொலிஸ் அதிகாரி சாமர சிகுவேரா, 512 ஆவது கட்டளைத் தளபதி கேணல் அஜித் பலகல்ல, யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(50-323)






வல்லை சிவகுரு வித்தியாசாலையின் ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ரோகினி கருணேஸ்வரன் கண்காட்சியை நாடா வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன் நிற்பதையும் முதலாவது படத்தில் காண்க.

ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தமது ஆக்கங்களுடன் அமர்ந்திருப்பதை அடுத்த படத்தில் காணலாம்.

*(படங்கள்: எஸ்.மூர்த்தி)*





'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பின் ஏற்பாட்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கடந்தவாரம் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

'இளைஞர்களுக்கான நாளை' அமைப்பைச் சேர்ந்த எஸ்.புஸ்பகுமார, யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பகல்வி) பு.குகதாசன், பாடசாலை அதிபர் எஸ்.தியாகலிங்கம் ஆகியோர் பான்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும் வழிகாட்டல் கல்வி உபகரணத்தை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர், மாணவன் ஒருவருக்கு வழங்குவதை இரண்டாம் படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நந்தன்)

# கொள்கலனுக்குள் ஒளிந்திருந்து பல்கேரியா செல்ல முயற்சித்த இலங்கையர்கள் கைது

கொழும்பு, ஜூலை 23

இலங்கையர்கள் உட்பட்ட ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த 73 பேர் பல்கேரியா எல்லையின் ஊடாக ஹங்கேரிக்குச் செல்ல முற்பட்ட போது கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் குளிரூட்டப்பட்ட கொள்கலன் ஒன்றில் ஒளிந்த நிலையிலேயே ஹங்கேரிக்குச் செல்ல முயற்சித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பயணித்த கொள்கலன், பல்கேரியாவில் பதிவு செய்யப்பட்டது என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பல்கேரியா ஐரோப்பிய ஒன்றியத்தின் வறுமையான நாடாகும். இந்தநிலையில் எல்லையற்ற வலயத்துக்கு உள்வரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் 22 நாடுகளுக்கும், சுவிட்ஸர்லாந்து, நோர்வே மற்றும் ஐஸ்லாந்துக்கும் செல்வதற்கு பல்கேரியாவின் எல்லைப்பகுதி பயன்படுத்தப்பட்டு வருவதால் அதன் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர், மெக்சிக்கோவிலும் இவ்வாறு கொள்கலனில் ஒளிந்த நிலையில் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க முயற்சித்த இலங்கையர்கள் உட்பட்டபலர் கைது செய்யப்பட்டிருந்தனர். (சி)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நல்லூர் மூத்த விநாயகர் வீதி, கடுக்காயடி லேன் சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணியில் அமைந்த மூன்று அறை, குசினி மற்றும் தண்ணீர் வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0777200083, 0213007562 (101183)


# ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி, ஜூலை 23

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்று வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'தேகா பாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் இச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

(50-236)


## G.C.E (A/L) 2010 பரீட்சை

பரீட்சைக்கு உதவும் விசாகா, றோயல், கண்டி Chemistry Biology வினாத்தாள்கள் முழு விடைகளுடன் வீடு வந்து கற்பித்தல். அழையுங்கள் வித்யா, சுழற்றுங்கள் 0777730838 (100777)

## கமலக் கண்ணன் திருமண சேவை

- 1976இல் பிறந்த 12இல் சூரிய னும் செவ்வாயும் 20¾ பாவமுடைய கனடா மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
- 1979இல் பிறந்த 2இல் செவ்வாய் 29½ பாவமுடைய லண்டன் B.B.A முடித்த லண்டன் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
- 1974இல் பிறந்த செவ்வாய் இல் லாமல் 11½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை.
- 1977இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 48 பாவமுடைய கனடா மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
- 1981இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 38 பாவம் உடைய B.C.A Computer Science முடித்த கனடா மணமகனுக்கு I/T, CIMA முடித்த அழகான மணமகள் தேவை.
- 1982இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 33½ பாவமுடைய MBBS டாக்டருக்கு அழகான, பட்டதாரி மணமகள் தேவை.
- 1980இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 25¼ பாவமுடைய MBBS டாக்டருக்கு அழகான பட்டதாரி மணமகள் தேவை.
- 1972இல் பிறந்த 2இல் செவ்வாய் 11½ பாவமுடைய MBBS டாக்டருக்கு Banking CIMA முடித்த மணமகள் தேவை.
- 1980இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் 42 பாவமுடைய MBBS டாக்டருக்கு அழகான படித்த மணமகள் தேவை. 1968இல் பிறந்த செவ்வாய்க் குற்றமுள்ள 25¼ பாவமுடைய சைவ போசனமுள்ள MBBS டாக்டருக்கு சைவ போசனமுள்ள படித்த அழகான மணமகள் தேவை.
- மேலும் டாக்டர்கள் சாட்டற் எக்கவுண்டன், சீமா எக்கவுண்டன், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், சைவ போசனமுள்ள அரச உத்தியோகத்தர்கள், செவ்வாய் பாவமுள்ள செவ்வாய் பாவமில்லாத அரச உத்தியோகத்தர்களும், வர்த்தகர்களும், வெளிநாட்டில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர். பாவம் கூடிய பிரஜா உரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:
171/7, மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர் வடக்கு வீதி, நல்லூர்.
தொ.பே.: 077 6070862, 021 4920266 (100827)


# சைவ சமயப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 23

அகில இலங்கை ரீதியில் கொழும்பு விவேகானந்த சபை நடத்தும் சைவ சமயப் பரீட்சைக்குத் தோற்ற பாடசாலை மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இந்த மாதம் 30ஆம் திகதியாகும். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி நடைபெறும் இப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களுக்கு 0112422646 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.


## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 40
திகதி - 21.07.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: R — அதிர்ஷ்ட இலக்கம்: 02 — வெற்றி இலக்கம்: 4 0 5 9 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | R 02 4 0 5 9 9 | ரூ. 13,683,272.00 | பரிசு - |
| 1 பரிசு | 02 4 0 5 9 9 | ரூ. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | 4 0 5 9 9 | ரூ. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | 0 5 9 9 | ரூ. 10,000.00 | பரிசு 24 |
| 4 பரிசு | 5 9 9 | ரூ. 1,000.00 | பரிசு 262 |
| 5 பரிசு | 9 9 | ரூ. 50.00 | பரிசு 2570 |
| 6 பரிசு | 9 | ரூ. 20.00 | பரிசு 24729 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 0 5 9 | ரூ. 1,000.00 | பரிசு 27 |
| 8 பரிசு | 4 0 5 | ரூ. 100.00 | பரிசு 260 |
| 9 பரிசு | 4 0 | ரூ. 50.00 | பரிசு 2577 |
| 10 பரிசு | R | ரூ. 20.00 | பரிசு 10123 |
| 11 பரிசு | R 02 | ரூ. 100.00 | பரிசு 1166 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,925,990.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
இணையத்தளம் www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 14,077,966.00



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2140 திகதி 21-07-2010

ஆங்கில எழுத்திற்கும் O

வெற்றி எண்கள்: 06 11 32 50 — போனஸ் இல: 52

ஜக்பொட் பரிசு ரூ. 14,368,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 189227 | 20/- | 3,784,540/- |
| 2 இல | 13535 | 100/- | 1,353,500/- |
| 3 இல | 275 | 1,000/- | 275,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7534 | 40/- | 301,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 506 | 1,000/- | 506,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,368,975/- | - |
| 1 இல + போனஸ் இல | 8966 | 100/- | 896,600/- |
| 2 இல + போனஸ் இல | 424 | 500/- | 212,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 339 | 200/- | 67,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 16 | 1,500/- | 24,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,890,800/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 220844 | | 9,490,800/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 202107546-0-12 |
| கொழும்பு | 202107513-0-36 |
| நுவரேலியா | 202105268-6-19 |
| களுத்துறை | 202106547-9-20 |
| திருகோணமலை | 202104826-0-14 |
| அம்பாறை | 202107429-7-19 |
| அம்பாந்தோட்டை | 202105848-4-31 |
| குருநாகல் | 202102405-6-46 |
| கண்டி | 202105205-7-00 |
| கம்பஹா | 202107648-5-41 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 14,884,925/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜூலை 24 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 06 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



# 31ஆம் நாள் ஆத்மசாந்தி பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 ★ 12 ★ 1938



மறைவு 25 ★ 06 ★ 2010

## அமரர் பொன்னையா சுந்தரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற அதிபர்)

தந்தை எனும் தலைவனாய் தலைமை வழிகாட்டி
ஆசானாய் நின்று அறிவு வழிகாட்டி
அன்பின் இருப்பிடமாய் வாழவழிகாட்டி
கனிவு கூர்ந்து காலமெல்லாம் எமைச் சுமந்து
அழகியதோர் வாழ்வுதனை இவ்வுலகில் எமக்களித்து
மறுவுலகம் நீர் சென்றீர் காலனின் அழைப்பறிந்து
எங்குநீர் சென்றாலும் எம் அன்பு குறையாது
குற்றமில்லா உங்கள் ஆத்மா இறையடி சேரவே.

எமது இல்லத்தில் 25.07.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'பூந்தோட்டம்',
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (101166)

குடும்பத்தினர்.

# வாழைச்சேனையில் கடதாசி உற்பத்தியை அதிகரிக்க வடமாகாண மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## தொழிற்சாலையின் ஆய்வுகூட உத்தியோகத்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை23

வாழைச்சேனை தேசிய கடதாசித் தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரித்து சந்தை வாய்ப்பைக் கூட்டுவதற்கு வடமாகாண மக்களின் ஒத்துழைப்பு அவசியம்.

இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்துள்ளார் வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையின் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் சபாரத்தினம் நமசிவாயம்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

தற்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் காகிதாதிகளின் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது.இதனால் எமது தாய் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அதாவது வாழைச்சேனை தேசிய கடதாசித் தொழிற்சாலையின் உற்பத்திகள் வீழ்ச்சி கண்டு செல்கிறது. இதனால் இத்தொழிற்சாலையை மூடப்படும் அபாயம் கூட உள்ளது.

எனவே எமது மக்களாகிய நீங்கள் எமது உற்பத்தியைக் கொள்வனவு செய்வதன் மூலம் இத்தொழிற்சாலையின் உற்பத்திகளை அதிகரிக்க உதவ முடியும்.

எனவே இங்குள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களும் தமது காகிதாதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எமது உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

அது மட்டுமல்லாமல் இங்குள்ள தேவையற்ற கடதாசிகளை அதாவது கழிவுக் கடதாசிகளை நாம் உங்களிடமிருந்து விலைக்குப் பெற்று அவற்றின் மூலம் மீள் உற்பத்தி செய்வதற்கும் தயாராகவுள்ளோம்.

எனவே இக்கழிவுக் கடதாசிகளை சேகரித்து எவராவது முகவர்களாக செயற்பட முன்வந்து எமக்குத் தரமுடியும்.

இதற்கென வெகு விரைவில் முகவர்களை யாழ்ப்பாணம் உள்ளிட்ட இடங்களில் நியமிக்கவுள்ளோம்.

யாராவது முகவர்களாக செயற்பட விரும்பினாலோ அல்லது மேலதிக விவரங்களுக்கோ தேசிய கடதாசி கம்பனி லிமிட்டெட், வாழைச்சேனை என்ற முகவரியூடாகவும், 065 2257108 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொள்ள முடியும்- என்றார். (50-16)

## பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ,ஜூலை23

அகில இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர்கள், விநியோகிப்போர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலைய முகவர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். (50-224)

## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

கொழும்புத்துறை ,ஜூலை23

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயப் பகுதியில் சைக்கிள் திருட்டு தொடர்ந்து நடைபெறுவதாக பக்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 21 ஆம் திகதி மாலை பூஜை வேளையில் பூட்டிய நிலையில் விட்டுச் சென்ற புதிய லூமாலா பெண்கள் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது. ஆனைப் பந்தியைச் சேர்ந்த சி. வெஸ்மிலா என்பவருடைய சைக்கிளே இவ்வாறு திருட்டுப் போயுள்ளது.

கடந்த சில மாதங்களில் மட்டும் இந்த ஆலயத்தல் 10 இற்கும் மேற்பட்ட சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

பக்தர்களின் நடமாட்டத்தை அவதானித்துத் திட்டமிட்டு ஒரு திருட்டுக் கும்பல் தொடர்ச்சியாக இந்தக் கைங்கரியத்தை புரிவதாக கூறப்படுகிறது. (50-135)

## வவுனியா, மன்னார் பகுதிகளுக்கு யாழ்ப்பாணத்துப் போத்தல் கள்

இணுவில் ,ஜூலை23

வவுனியா, மன்னார் பகுதிகளில் பனங் கள்ளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து போத்தலில் அடைக்கப்பட்ட பனங் கள்ளை அங்கு கொண்டுசென்று சந்தைப் படுத்துவதற்கு பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் ப. சீவரத்தினம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணச் சங்கங்கள் பருவ காலங்களில் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் கள்ளை போத்தலில் அடைத்து தட்டுப்பாடான காலங்களில் அவற்றைச் சந்தைப்படுத்துவது வழக்கமாகும்.

இவ்வாறு போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு பண்டத்தரிப்பு பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் போத்தல் வரை தேங்கி உள்ளதாகவும், ஏனைய சங்கங்களிலும் இவ்வாறு தேங்கிக் கிடப்பதாகவும் அவற்றை யாழ். மாவட்டத்துக்கு வெளியே எடுத்துச்சென்று சந்தை வாய்ப்பை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ப. சீவரத்தினம் தெரிவித்தார். (50-45)

### ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தின்

## கீழைத்தேய கல்விக் கல்லூரியில் விரைவில் மொழி ஆய்வு நூலகம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கம் தமது கல்லூரியான கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் மொழி ஆய்வு நூலகம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கான முன் ஆயத்தங்களைச் செய்துவருகின்றது.

அதனையொட்டி சங்கத்தின் பண்டிதர்கள் சான்றோர்கள், வித்துவான்கள், புலவர்கள் சைவ,கிறிஸ்தவ, இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் , பௌத்த அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து அவர்கள் பயன்படுத்திய நூல்கள் ஆவணங்களை பெறும் முயற்சியில் சங்கம் ஈடுபட்டுள்ளது.

கிடைக்கக் கூடிய நூல்கள் ஆவணங்கள் சங்கக் காப்பகத்தில் தகுந்த முறையில் பேணுவதற்கான ஒழுங்குகளைச் சங்கம் செய்துள்ளது. நூல்கள் சேர்த்துக் கொள்ளப்படும் போது அவரவர் நினைவுகளைப்புலப்படுத்தும் வகையில் அந் நூல்கள் பேணப்படும். விரைவில் நூற்றாண்டு விழாவினைக் காணவுள்ள இவ்வமைப்பு முன்பு வெள்ளிவிழா மலரினை வெளியிட்டது போன்று நூற்றாண்டு மலர் ஒன்றையும் சங்கத்தின் அரச பதிவு பெற்ற சஞ்சிகையான ''கலாநிதி '' பத்திரிகையையும் மீண்டும் வெளிக்கொணரவுள்ளது. சங்கத்தின் சான்றோர்கள், பண்டிதர் பட்டம் பெற்றோர், வரலாறுகள் விரைவில் நூலாக வெளிவரவுள்ளது.

மேற்படி சங்கத்தின் பத்திரிகைகள் ஆவணங்கள், துண்டுப் பிரசுரங்கள் வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவுமாறும் சங்கம் கேட்டுள்ளது.

சங்கம் தொடங்கிய நாளிலிருந்து பண்டிதர் பட்டம் பெற்றோர், பால பண்டிதரானோர் விவரங்களையும் சங்கம் தனது சஞ்சிகையில் வெளியிடவுள்ளது.

மரபு சார்பான கட்டுரைகளையும் மொழியியல் சார்ந்த கட்டுரைகளையும் புலமையாளர்களிடமிருந்து சங்கம் எதிர்பார்க்கிறது.

நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், ஏனைய விவரங்கள் என்பவற்றைக் கொடுத்து உதவ விரும்புவோர் சங்கத் தலைவரும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளருமான வே.தி. செல்வரத்தினத்துடனோ, ம.ந. கடம்பேசுவரன், செயலாளர் கீழைத்தேயக் கல்விக்கல்லூரி, 223, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ (07769 13333) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.




## கலை இலக்கியப் போட்டி

கொழும்புத்துறை,ஜூலை23

அரியாலை சனசமூக நிலைய 91 ஆவது விழாவையொட்டி மாணவர்களுக்கான கலை இலக்கியப் போட்டிகள் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆங்கிலக் கட்டுரை, பொதுஅறிவு, சிறுகதை, கணனி அறிவு போட்டிகள் மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

கீழ்ப்பிரிவு தரம் 6-8 மத்திய பிரிவு 9-11 மேற்பிரிவு 17 வயதுக்கு மேல் என்ற அடிப்படையில் நடைபெறும் போட்டிகளில் அரியாலைப் பிரதேச மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (50-135)

## உயர்தர மாணவருக்கு இலவச கருத்தரங்கு

நவாலி,ஜூலை 23

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுதுமலை தெற்கு அம்பாள் விளையாட்டுக்கழகமும் அம்பாள் சனசமூக நிலையமும் இணைந்து 'ஈ.சொப்ற்' கணனி நிறுவனத்தின் அனுசரணையுடன் உயர்தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கொன்றை மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் கடந்த 19 ஆம் திகதி முதல் யாழ்.நகரிலுள்ள முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் நடத்திவருகின்றனர்.

அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் இ.மனோகரன் தலைமையில் காலை 9 மணி முதல் நண்பகல் ஒரு மணிவரை நடைபெறும் இலவச கருத்தரங்கில் யாழ். நகரிலுள்ள சுமார் 600 மாணவர்களுக்கு மேல் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றனர். (50-100)

## 'யாழ்கோ'வின் தலைவர் இராஜினாமா

இணுவில் ,ஜூலை23

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஆ. செல்லத்துரை தனது பதவியை கடந்தவாரம் இராஜினாமாச் செய்தார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளரினால் கடந்த ஆண்டு பிற்பகுதியில் குறித்த சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட இவர் சங்கத்தில் பல நெருக்கடிகளை சந்தித்ததைத் தொடர்ந்து தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்போது பால் உற்பத்தி துரிதமாக அபிவிருத்தி கண்டு வருவதாகவும் அதை முழுமையாகக் கொள்வனவு செய்து உற்பத்தியாளரை ஊக்குவிக்க சங்கத்தால் முடியாதிருப்பதாகவும் அதை முன்னேற்ற எடுக்கும் நடவடிக்கைகளுக்கு சங்கச் செயற்பாடுகள் முட்டுக்கட்டையாக இருப்பதாவும் அவர் தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டு மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கு தனது பதவி விலகலைச் சமர்ப்பித்துள்ளார். (50-45)

## கியூமெடிக்கா பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா

நவாலி ,ஜூலை23

மானிப்பாய் கியூமெடிக்கா மருத்துவ பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கியூமெடிக்கா முகாமையாளர் அருட்போதகர் சாம் இராஜசூரியர் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக அருட் போதகர் வா. ராஜ்குமார் கலந்துகொள்வார். (50-100 )




வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தால் கோப்பாய் பிரதேச புற்று நோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு நேற்று கோப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் , கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்ராஸ் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் , பயனாளி ஒருவருக்கு அரச அதிபர் இமெல்டா சுகுமார் அன்பளிப்பு வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்:டிலீப்)

# அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.02.1993

* இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சர்வமதங்களின் பிரமுகர்கள் கூட்டாக ஈடுபடவேண்டும் என அங்கி லிக்கன் ஆயர் அதிவண. கெனத் பெர்ணாண்டோ விடுத்த வேண்டுகோளுக்கு அனைத்து மதங்களின் தலைவர்களி டம் இருந்து சாதகமான வரவேற்புக் கிடைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

* வடக்கில், வன்னிப் பகுதியில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ள தாகத் தெரிவிப்பு.

02.02.1993

* வவுனியாவில் இராணுவத்தினரால் ஆரம் பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக 400 தமிழ்க்குடும்பங்களைச் சேர்ந்த வவுனியா மேற்குப் பகுதி பொது மக்கள் படையினரிடம் அகப்பட்டுள்ளதா கத் தெரிவிப்பு.

* மன்னார் - பூநகரி பிரதான வீதி பொது மக்களின் பாவனைக்காக நேற்றுமுதல் திறந்து விடப்பட்டுள்ளதாக கூட்டுப் படைகளின் தலைமையகம் தெரிவிப்பு.

03.02.1993

* மாதகலில் நேற்றுக்காலை முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலி கள் மேற்கொண்ட ஒரு தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட பத்துக்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தாகத் தெரிவிப்பு.

* பதவியாவில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று சிங்கள மீனவர்கள் விடுதலைப் புலிக ளால் கடத்தப்பட்டதாக வெளிவந்த செய்தியை அடுத்து அப்பகுதியில் பரபரப்பு நிலவுவதாகத் தெரிவிப்பு.

04.02.1993

* யாழ்.குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கான தட்டுப்பாடு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதால் பஞ்சம் ஏற்படும்நிலை உருவாகி உள்ளதாக யாழ்.அரச அதிபர் அரசுக்குத் தெரிவிப்பு.

* சுதந்திர தினமான இன்று விடு தலைப் புலிகள் அரச படையினர் மீது தாக்குதல் நடத்தலாம் என பாதுகாப்புப் படையி னர் எச்சரிக்கைக் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிப்பு.

05.02.1993

* யாழ்.குடாநாட்டுக்கானபோக்குவரத்தை இலகுபடுத்துவதற்காக கேரதீவு - சங்குப்பிட்டி ஊடான பூநகரிப் பாதை அடுத்த வாரம் திறக்கப்படலாம் என ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிப்பு.

* வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நாம் விரைவில் தீர்வுகண்டாகவேண்டும் என ஜனாதிபதி பிரேமதாஸ சுதந்திர தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு உரை யாற்றும் போது தெரிவிப்பு.

06.02.1993

* அரசை விமர்சித்து வரும் அனைத்துப் பத் திரிகைகளுக்கும் எதிராக கடும் போக்கைக் கடைப்பிடிக்கப்போவதாக ஜனாதி பதி பிரேமதாஸ தலைமையிலான அரசு அறிவிப்பு.

* பலாலி இராணுவ முகாமில் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்த 19 பேர் உட்பட 22 கைதிகள் விடுதலை செய்யப் பட்டதாகத் தெரிவிப்பு.

07.02.1993

* தேர்தல் ஒன்றை கூட்டாகச் சந்திக்க முடியாத பிளவு நிலை எதிர்க்கட்சிகள் மத் தியில் நிலவுவதால் ஜனாதிபதி பிரேமதாஸ அதனை வாய்ப்பாகப் பயன் படுத்தி பொதுத் தேர்தல் ஒன்றை உடனடியாக நடத்தக்கூடும் எனத் தெரி விப்பு.

* அரசுக்கு எதிராக எழுதிவரும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ள அரசு அதன் முதல் நடவடிக்கையாக மூத்த செய்தியாளர்களைக் கைதுசெய்யக் கூடும் என 'ராவய' பத்திரிகையின் ஆசிரி யர் எச்சரிக்கை விடுப்பு.

08.02.1993

* இலங்கை இரு நாடுகளாகத் துண்டாப் படுவதை இந்தியா விரும்பவில்லை என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அறிவிப்பு.

* பர்மா தலைநகர் ரங்கூன் கடலோரப் பகுதி ஊடாக விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 6 கப்பல்களில் நவீன ஆயுதங்கள் வட பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிப்பு.

09.02.1993

* வடபகுதி மீதான பொருளாதாரத் தடையை நீக்கக் கோரி வடமராட்சி மக்கள் நேற்று பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியதாகத் தெரிவிப்பு.

* நிச்சயமாக இந்திய அரசு இலங்கைத் தமிழருக்கு எதிராக சதி வேலை எதிலும் ஈடுபடவில்லை என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவிப்பு.

10.02.1993

* கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பது தொடர்பான இறுதி முடிவுகளை மேற்கொள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவிருப்பதாகத் தெரிவிப்பு.

* பருத்தித்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை ஒன்றை நடத்த நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினர் முன்வந்திருப்பதாகத் தெரிவிப்பு.

11.02.1993

* இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான குற்றச்சாட்டு ஜெனீவாவில் நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படவிருப்பதாகத் தெரிவிப்பு.

* விடுதலைப் புலிகளிடம் 16 விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இருப்பதாக இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை தகவல் பிரசுரிப்பு.

12.02.1993

* ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் தனக்கு எதிராக மேற்கொள்ளப்படத்தக்க குற்றச்சாட்டுகளை சமாளிப்பதற்காக இலங்கை அரசு அவசரகாலச் சட்டவிதிகள் பலவற்றை தளர்த்துவதாக அறிவித்திருப்பதாகத் தெரிவிப்பு.

* குடாநாட்டில் எழுந்துள்ள உணவுத் தட்டுப்பாட்டு நெருக்கடி காரணமாக இங்குள்ள 236 அகதி முகாம்களில் தங்கியுள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள் பாதிப்புக்கு உட்பட்டிருப்பதாக தெரிவிப்பு.

13.02.1993

* வங்கக் கடலில் கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் உயிரிழக்கக் காரணமான இந்திய அரசின் நடவடிக்கை குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் ஐ.நா.சபையிடம் முறையீடு.

* இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவிப்பு.

14.02.1993

* கிளாலி நீரேரி ஊடாக போக்குவரத்துச் செய்ய அரசு விதித்திருக்கும் தடையை நீக்குமாறு கோரி அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பிரதிநிதி உடாக விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கு வேண்டுகோள்.

* நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்த அகதிகளுக்கான ஐ.நா.தூதரக ஆலோசகர் யாழ். நிலைமை குறித்து அரச அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிப்பு.

15.02.1993

* அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை குறித்து பொது விவாதம் ஒன்றில் கலந்து கொள்ள நான் சம்மதிக்கவேண்டுமானால் முதலில் ஜனாதிபதி பிரேமதாஸ பதவி விலகி விடவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ தெரிவிப்பு.

* 36 கோடி ரூபா பெறுமதியான - பிரான்ஸ் நாட்டுத் தயாரிப்பான இரு அதிவேகப் படகுகள் இலங்கைக் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாக தெரிவிப்பு.



# சமய சந்நிதிகளில்



யாழ்ப்பாணம், ஜூலை 23

அச்சுவேலிப்பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'விநாயகர் பெருமை' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

நாளை சனிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23

அரியாலை, பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23

தாவடி தெற்கு, கொக்குவில் ஆதிகாளி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23

சரவணை, தேவபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

*எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (50-204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23

அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழாக் காலங்களில் மாலை 6 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை.அருளானந்தத்தினால் தொடர் தெய்வீகச் சொற்பொழிவு நிகழ்த்தப்படுகிறது. (50-204)

* * *

சங்கானை, ஜூலை 23

சண்டிலிப்பாய் வடக்கு, இரட்டைப்புலஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக் கிழமை சங்காபிஷேகம் நடைபெறும். (50-204-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23

சாவகச்சேரி வாரிவள சிவன் ஆலய அமிர்தபாஷினி அம்பிகையின் ஆடிப்பூர அலங்கார உற்சவம் எதிர்வரும் மூன்றாம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக் கிழமை ஆடிப்பூரத் தினத்தன்று 108 சங்காபிஷேகத்துடன் உற்சவம் நிறைவு பெறும். (50-204-207)

* * *

# வாசகர் திருமுகம்

## இப்படியும் இருக்கிறார்கள்!

யாழ்ப்பாணத்தில் இப்போதும் ஒரு சில நல்ல மனம் படைத்தவர்கள் வாழ்ந்து வருவதால்தான் இடைக்கிடை மழைத்துளிகள் இங்கு வீழ்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துவரும் நல்ல உள்ளம் படைத்த ஒருவர் கோழி உரித்த கழிவுகளைக் கொண்டு வந்து யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பின்புறக் கேற்றடியில் போட்டுவிட்டுச் சென்றிருந்தார். இப்படியும் மனிதர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள்.

இதனால் இரண்டு தினங்கள் பாடசாலைக்குச் சென்ற சின்னஞ்சிறுசுகள் மூக்கைப் பொத்தியபடியே பாடசாலைக்குச் சென்று வந்தனர். எங்கோ இருந்து உரப்பையில் கோழி உரித்த கழிவுகளைக் கட்டிக்காவிச் சுமந்துவந்து பாரம்பரியம் மிக்க ஓர் இந்துப்பாடசாலை வாசலில் அதுவும் பாலர்கள் கல்விக்கூட வாசலில் போட்டுவிட்டுச் சென்ற நல்ல உள்ளங்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

ந.பரமேஸ்வரன்.

## இவ் வீதியையும் திருத்தித் தருவார்களா?

கோண்டாவில் கிழக்குக் கிராமத்தில் ''கொட்டைக்காட்டு வீதி'' 30 வருடங்களுக்கு மேலாக மிகவும் மோசமாகச் சேதமடைந்து கவனிப்பார் இன்றி இருக்கிறது. இவ்வீதி பலாலி வீதியையும் இராஜவீதியையும் இணைக்கும் ஒரு பழைமையான வீதி ஆகும். இந்த வீதியை அதிகமாக மாணவர்களும் விவசாயிகளும் பயன்படுத்துகின்றார்கள். விவசாயிகள் தமது விவசாய உபகரணங்களையும் தமது விளைபொருள்களையும் இவ்வீதி ஊடாகக்கொண்டு செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். அண்மையில் கனரக வாகனங்களின் பாவனை குடாநாடு முழுவதும் அதிகரித்துக் காணப்படுகின்றமையால், வீதி ஒழுங்குப் பொலிஸார் ''பெருந்தெருப் பாவனையினை'' குறைக்குமாறு வழங்கி வரும் ஆலோசனைக்கமைய இவ்வீதியின் பாவனை பன்மடங்காக அதிகரிக்கிறது.

இவ்வீதியின் நிலையினை பலமுறை சுட்டிக்காட்டியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வீதியை 5 வருடங்களுக்கு முன் செப்பனிடுவதற்காக அளந்தார்கள். பின்பு அம் முயற்சி எதுவித முன்னேற்றமும் இன்றி கைவிடப்பட்டது. இதற்கு மேலதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணமாகும்.

இவ்வீதி பிரதான வீதிகளின் இடையில் இருப்பதால் நல்லூர் பிரதேச சபையினதும்வலி.கிழக்குபிரதேச சபையினதும் எல்லையில் உள்ளது. எனவே வீதியின் அரைப்பகுதி ஒவ்வொரு பிரதேச சபைகளுக்கும் உரியதாகவுள்ளது. இதனால் இவ்வீதியைச் செப்பனிடுவதற்கு தமது பிரதேச சபைகள் பொறுப்பு அல்ல என விலகிவிடாமல், முழுமையாக மழைகாலம் ஆரம்பிக்கும் முன் செப்பனிடுவதற்கு உரிய நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பார்களென இவ்வீதியைப் பயன்படுத்துவோர் எதிபார்க்கின்றார்கள்.

இவ்வீதி அண்மையில் ''கொட்டைக்காட்டு சுடலை வீதி'' எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது தவறானதாகும். ஏனெனில் இவ்வீதிக்கு அருகில் ஒரு மயானம் இருப்பது உண்மையே. ஆனாலும் அந்த வீதி மயானத்துக்கு மட்டும் சொந்தமான வீதியல்ல. எனவே இது பொது வீதி ஆகும். ஆகவே எமது வீதியை ''கொட்டைக் காட்டு வீதி'' என மறு பதிவு செய்து பெயர்ப்பலகையும் பொருத்துமாறு மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

மக்கள் சார்பில்:
எம்.திஷா.
கோண்டாவில் கிழக்கு.

# பன்முகத்தன்மையின் பலத்தை பயன்படுத்தி தமிழை செழுமைப்படுத்தியவர் சுவாமி விபுலானந்தர்

## செம்மொழி விழாவில் பேராசிரியர் தில்லைநாதன் உரை

அம்பாறை,ஜூலை 23

''வேற்றுமைகளை மதிக்க வேண்டும். வேற்றுமைகளின் பன்முகத்தன்மை என்பது ஒரு பலமாகும். அதனைப் பயன் படுத்தி தமிழ் மொழிக்கும், கல்விக்கும் செழிப்பை ஏற்படுத்தியவர் உலகின் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்த அடிகளார் ஆவார்.''

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற கிழக்கு மாகாண தமிழ் செம்மொழி விழாவில் மூத்த பேராசிரியர் கா.தில்லைநாதன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் திங்கட்கிழமை மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிசாம் தலைமையில் மேற்படி செம்மொழி விழா கோலாகலமாக நடைபெற்றது.

பேராசிரியர் தில்லைநாதன் மேலும் பேசுகையில்:-

''அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்ட சுவாமி விபுலானந்தருக்கு முன்னர் உலகின் எப்பாகத்திலும் எந்த ஒரு தமிழ்ப் பேராசிரியரும் இருக்கவில்லை.

இலங்கையில் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டபோது சுவாமியை அழைத்து இங்கும் பேராசிரியராக்கினார்கள். இலங்கைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட அன்று அப்போதைய முதல் உபவேந்தர் டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் இலவச கல்வியின் தந்தை சி.டபிள்யூ டபிள்யூ கன்னங்கரா, ரி.பி. ஜயா, சு. நடேசபிள்ளை ஆகியோர் சுவாமி விபுலானந்தரை உச்சக்கட்டத்தில் வைத்தும் பாராட்டினர்.

சிங்களப் பேராசிரியர் ஒருவர் சுவாமியின் குரல் வசீகரம், அவரது கம்பீரமான தோற்றம் பற்றி வியந்து கூறுகிறார். இஸ்லாமிய அறிஞர் ஏ.எம்.அசீஸ் சுவாமியைப் பற்றி மணிக்கணக்கில் பேசுவார்.

1925 இல் யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸ் மாநாட்டில் சுவாமி விபுலானந்தர் உரையாற்றுகையில், இருவிடங்களை வலியுறுத்தினார். ''தேசிய மொழியுடன், தாய் மொழியையும் கற்கவேண்டும். சாதி முறைமை, தீண்டாமை ஆகியவற்றை கைவிட வேண்டும்.'' என்று அவர் கூறியிருந் தார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணிகள் அபரிதமிதமானவை. கலைச் சொல்லாக்கம் பற்றி அவர் அன்றே கூறியவர்.

இன்று தொழில்நுட்பம் உலகைச் சீரழிக்கிறது என்கிறார்கள். தொடர்பாடல் திறன் உச்சக்கட்டத்தில் தாண்டவமாடுகிறது. பல மாற்றங்கள் நடக்கின்றன. அவற்றை எம்மால் தடுத்து நிறுத்த முடியாது.

மாற்றங்களுக்கேற்ப நாமும் மாறாவிட்டால் கால ஓட்டத்தில் அள்ளுண்டு போவோம். நாம் நவீன தொழில்நுட்பங்களை ஒதுக்கி விட்டு பழையனவற்றை மட்டும் பேணிக் கொண்டிருக்க முடியாது.

இதனை அன்றே உணர்த்தியவர் சுவாமி விபுலானந்தர் ஆவார். எடுத்த காரி யத்தை செம்மையாக செய்யவேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பு. சத்தியம், சிவம், சுந்தரம் எனும் உள்ளம், நன்மை, அழகுடன் ஒழுகுவது சீர்மையாக இருக்கும்'' என்றார்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரை**

பேராசிரியர் அ.சண்முதாஸ் உரையாற்றுகையில் -

''கோவை செம்மொழி விழாவிற்கு நிகர்த்ததாய் காரைதீவு செம்மொழி விழா இடம்பெற்றிருப்பது குறித்துப் பாராட்டுகிறேன். உலகிலே 8 மொழிகள் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுள்ளன. கிரேக்கம், லத்தீன், கீபுறு, பாரசீகம், சமஸ்கிருதம், ஆங்கிலம், சீனம் மற்றும் தமிழ்மொழி எனலாம்'' என்றார். (ளி)

# பேராசிரியர்கள் சங்கமம்; பேராளர்கள் கௌரவிப்பு

அம்பாறை, ஜூலை 23

வரலாறு காணாத வகையில் கிழக்கு மாகாண தமிழ் செம்மொழி விழா திங்கட்கிழமை காரைதீவில் ஆரம்பமாகியது. வீதியெங்கும் தோரணங்கள், சோடனைங்கள், வாழைகள், பதாகைகள், பல்சமய மாணவரின் ஒத்துழைப்புகள் சகிதம் காரைதீவு விழாக் கோலம் பூண்டிருந்தது.

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 63ஆவது சிரார்த்ததினத்தையொட்டி அவரைக் கௌரவிக்குமுகமாக ஜூலை 19ஆம் திகதி இத் தமிழ்செம்மொழி விழா நடத்தப்பட்டது.

காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயச் சந்தியில் அதிதிகள், பேராசிரியர்கள், பேராளர்கள் ஆகியோர் பாண்ட் வாத்தி யம், இன்னியம் முழங்க ஆளுயுர மாலைகள் இட்டு, திலகமிட்டு வரவேற்கப்பட்டனர்.

இதற்கு முன்னர் கிழக்கின் 9 தமிழ்க் கல்வி வலயங்களையும் சேர்ந்த 10 அலங்கார ஊர்திகள் பெரிய நீலாவணையிலிருந்து புறப்பட்டு காரைதீவை வந்தடைந்தன. அவ் அலங்கார ஊர்திகள் தமிழின் சிறப்பையும், சுவாமி விபுலானந்தரின் பெருமையையும் எடுத்துக் காட்டுபவையாக வடிவமைக்கப் பட்டிருந்தன.

அவை, காரைதீவு நுழைவாயிலை அடைந்ததும் அங்கிருந்து இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மாணவ, மாணவியரின் ஊர்வலம் ஆரம்பமாகி கண்ணகை அம்மனாலயத்தை வந்தடைந்தது.

அங்கு அதிதிகளும் பேராளர்களும் பாண்ட் வாத்தியம் சகிதம் வழிநெடுகிலும் நிறமுட்டி மாவிலைத் தோரணங்களினூடாக வரவேற்கப்பட்டனர்.

இடையில் இவர்கள் வித்தகமாமுனி விபுலானந்த அடிகளாரின் பிறந்த வீட்டிற்குச் சென்றனர். அங்கு அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. அடிகளார் பிறந்த வீடு, மணி மண்டபம் முதலானவற்றை அதிதிகள் பார்வையிட்டனர்.

சுவாமிகளது நூல்கள், சுவாமி பாவித்த அங்கவஸ்திரம், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் அணிவித்த மாலை, யாழ். நூல், அவர் எழுதிய கடிதங்கள் முதலானவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றை அதிதிகள் மிகவும் உன்னிப்பாக அவதானித்தனர்.

ஊர்வலம் அங்கிருந்து மீண்டும் மத்திய வீதியினூடாக நகர்ந்துசென்று கொம்புச் சந்தியை அடைந்தது. அங்கு சண்முகா தோரணத்தினூடாக செல்கையில், இசிமி சாரதா இல்லமருகில் நிறுவப்பட்டிருந்த தண்ணீர்ப் பந்தலில் ஊர்வலத்தில் சென்றோர் தாகசாந்தி செய்து கொண்டனர்.

பின்னர் ஊர்வலம் நேராக விழா நடைபெற்ற விபுலானந்த மத்திய கல்லூரியை அடைந்தது. அங்கு குத்து விளக்கேற்றல், தமிழ் மொழி வாழ்த்துப்பா, தமிழ்த் தாய் வணக்கம், வரவேற்புரை ஆகியவை சகிதம் மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் தலைமையில் விழா கோலாகலமாக ஆரம்பமாகியது.

விபுலானந்த மத்திய கல்லூரி பலவித அலங்காரங்களால் களை கட்டியிருந்தது. விபுலானந்தர் அரங்கு மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு வெற்றி பெற்ற மாணவரின் நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. பேராளர்களும் பேராசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

கலாநிதி ந.நடராசாவின் 'விபுலாந்த பொன்மொழிகள்' என்ற நூலும், கலாநிதி இ.பாலசுந்தரத்தின் 'விபுலானந்தம்' என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன. பேராசிரியர்களின் உரைகள் இடம்பெற்றன.

**அதிதிகள் வருகை**

தமிழ் செம்மொழி விழாவில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து சிறப்பித்தார்.

விசேட விருந்தினர்களாகத் தமிழ்நாடு பாண்டிச்சேரி புதுவை பல்கலைக்கழக சுப்பிரமணிய பாரதி தமிழியற் புலத் தலைவர் பேராசிரியர் ஏ.அறிவுநம்பி, சிங்கப்பூர் முனைவர் இ.வெங்கடேசன் ஆகியோருடன் மட்டு. இ.ஜிகி.சுவாமி அஜராத்மானந்தா ஜீ வருகை தந்திருந்தார்.

கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் க.பிரேம்குமார், தென்கிழக்கு வேந்தர் கலாநிதி இஸ்மாயில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வ.பொ.பாலசிங்கம், கிழக்கு மாகாண பிரதிக் கல்விச் செயலாளர் எஸ். தண்டாயுதபாணி ஆகியோருடன் கௌரவம் பெற்ற பேராசிரியர்களாக எஸ்.தில்லைநாதன், அ.சண்முகதாஸ், சி.சிவலிங்கராசா, திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் வருகை தந்திருந்த னர்.




# கொழும்பில் பணிபுரிவோர் குறித்து அசட்டை வேண்டாம்: பிள்ளைகள், பெண்களின் விவரம் கோருகிறது இ.தொ.கா.

கொழும்பு, ஜூலை 23

பதுளை - நமுனுகலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் கொழும்பு புதுச் செட்டித்தெரு வீடொன்றில் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை இ.தொ.கா.வன்மையாகக் கண்டித்துள்ளது.

அத்துடன் கொழும்புக்கு வேலைக்குச் செல்லும் பிள்ளைகள் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களையும் அது கோரியுள்ளது.

இதுகுறித்து கட்சியின் அமைப்பாளரும், ஊடகப் பேச்சாளருமான எஸ்.ஜெகதீஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகள் வேலை செய்கிறார்கள்.

எனினும், அண்மைக்காலமாகப் பெண்கள் அடித்துக் கொல்லப்படும் கொடூரக் கலாசாரம் பரவிவருகின்றது.

இத்தகைய சம்பவங்களுக்கு முடிவு கட்டும் பொருட்டு இ.தொ.கா. நான்கு மாதங்களுக்கு முன்னரே நடவடிக்கை எடுத்திருந்தது. அதன்படி மலையகத்திலிருந்து வேறிடத்திற்கு தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் அதுகுறித்த விவரங்களை முற்கூட்டியே அறிவிக்குமாறும் கோரியது.

ஆனால் பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பில் அக்கறை காட்டினரா எனத் தெரியவில்லை. பிள்ளைகள் மீது கரிசனையற்று இருந்துவிட்டுப் பின்னர் அழுவதில் பயனில்லை.

எனவே, இனியும் இத்தகைய செயல்கள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. இ.தொ.கா. பிராந்திய அலுவலகத்திலும், கொழும்பு தலைமை அலுவலகத்திலும் இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

இதனடிப்படையில் மலையகத்திருந்தும் கொழும்புக்கு வேலைக்கு அனுப்பப்படுவோரின் விவரங்கள் எமக்கு முழுமையாக வழங்கப்பட வேண்டும். அதே வேளை, பிள்ளைகள் எவர் மூலமாக - எங்கே அனுப்பப்படுகிறார்கள் என்ற விவரமும் அறவிக்கப்பட வேண்டும்.

பெண்கள், பிள்ளைகளின் பெயர், வயது, அவர்களின் பெற்றோர் பற்றிய விவரங்கள், முகவரி, தொலைபேசி இலக்கம், அ' அட்டை இலக்கம் ஆகியன எமது காரியாலயங்களில் பதிவு செய்யப்படும்.

வேலைக்குச் சென்ற பிள்ளைகளிடமிருந்து தகவல்கள் கிடைக்காத பட்சத்தில் பெற்றோர் உடனடியாக இ.தொ.கா. தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு நிர்வாக செயலாளர், இ.தொ.கா. தலைமைக்காரியாலயம், தொலைபேசி 0112301359 அல்லது 071 7379583 என்ற இலக்கங்களோடு தொடர்புகொள்ளவும். - இப்படி ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ளி)

# சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மோசடி: விசாரணை நடத்த அமைச்சர் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 23

சப்ரகமுவ பல்கலைக்கழக அபிவிருத்திப் பணிகளில் இடம்பெற்ற மோசடிகள் பற்றி தீவிர விசாரணைகள் நடத்தப்படும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அமைச்சர் கடந்த ஞாயிற்றுக் கிழமை பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தார். விரிவுரையாளர், மாணவர் மற்றும் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடிய போதே அவர் இந்த தகவலைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம், மாணவர் ஒன்றியம், சேவையாளர் சங்கம் ஆகியவை கூட்டாக விடுத்த கோரிக் கைக்கு அமையவே விசாரணை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

65,000 ரூபாவுக்கு வாங்கக்கூடிய 'கட்டிங்' இயந்திரமொன்றுக்கு பல்கலைக்கழகம் 3,86,400 ரூபாவைச் செலவிட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்ட ரீசேட் ஒன்றின் விலை 2,500 ரூபா. அத்துடன், சிறிய வாசிக சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு 21 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

விரிவுரையாளர் விடுதி கழிவறைகளுக்கு ஏழரை லட்சம் ரூபா செலவாகியுள்ளது. பல்கலைக்கழக சுற்றுச்சுவர்களில் இருந்து கழற்றப்பட்ட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான றப்பர் கம்பி வலை மாயமாகிவிட்டது.

இந்த மோசடிகள் பற்றிய விசாரணை பாராபட்சமின்றி நடைபெறும். சம்பந்தப் பட்டவர்களுக்கு எதிராக சட்ட நட வடிக்கை மேற்கொள்ளப்படும் - இப்படி திஸாநாயக்க தெரிவித்தார்

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் இரவு 8 மணிவரை அமைச்சர் பல்கலையில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ளி)

# தலதாமாளிகை வீதி திறப்பில் இழுபறி

கண்டி, ஜூலை 23

கண்டி தலதாமாளிகை வீதியைத் திறப்பது தொடர்பாக மதத் தலைவர்களும், அரசி யல் வாதிகளும் முரண்பட்ட கருத்துகளைக் கூறிவருகின்றனர். இதனால் பொதுமக்கள் பெரிதும் குழப்பமடைந்துள்ளனர்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் திகதி தலதாமாளிகையில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு காரணமாக தலதாவீதி டீ.எஸ். சேனநாயக்க வீதிச் சந்தியிலிருந்து மலபார் சந்திவரை மூடப்பட்டது.

இதனால் லேவல்ல, நத்தரம்பொத்த, குண்டசாலை, தெல்தெனிய, குருதெனிய, தென்னக்கும்புர, பூவலிகடை மக்கள் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் சுற்றியே பய ணம் செய்தனர்.

இதனால் பெரும்சிரமங்கள் ஏற்படுகின்றன என அவர்கள் சுட்டிக்காட்டி வந்தனர். வீதியைத் திறக்குமாறும் கோரினர்.

அப்போது அரசியல்வாதிகள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி மடுத்தனர். எனினும், மகாநாயக்கர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தற்போது மல்வத்த மகாநாயக்கர் வீதி திறப்புக்கு ஆதரவு தெரிவித்து கருத்துகளை வெளியிடுகின்றார். மாகாண ஆளுநரும், முதலமைச்சரும் மாற்றுக் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர்.

கண்டி மாநகரசபை இரண்டுமுறை வீதி திறப்புக்கு ஆதரவாகப் பிரேரணையை முன்வைத்திருந்தது. மாகாண சபையிலும் பலமுறை இதுபற்றிப் பேசப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ளி)



# கேள்வி கோரல்

கிளிநொச்சி கல்வி வலயத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலைகளில் ESDP நிதியீட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கட்டடத் திருத்த வேலைகளுக்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| இல. | பாடசாலை | வேலை | ஒப்பந்தகாரரின் தகைமை | மீளளிக்கப்படும் வைப்பு | மீளளிக்கப்படாத வைப்பு |
|---|---|---|---|---|---|
| 01 | கிளி/ஸ்கந்தபுரம் இல.2 அ.த.க.பாடசாலை | 40'x20' கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-29 | C9 | 5000.00 | 1000.00 |
| 02 | கிளி ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை | 110'x20' கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-30 | C9 | 6100.00 | 1000.00 |
| 03 | கிளி/வன்னேரிக்குளம் ம.வி. | CRR கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-31 | C9 | 3000.00 | 1000.00 |
| 04 | கிளி/அக்கராயன் ம.வி. | 40'x20'கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-32 | C9 | 5100.00 | 1000.00 |
| 05 | கிளி/ஆனைவிழுந்தான் குளம் அ.த.க.பா. | 2/70'x20'கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-33 | C9 | 6000.00 | 1000.00 |
| 06 | கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க.பாடசாலை | 137'x27', 40'x27', 40'x20' கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-34 | C9 | 4000.00 | 1000.00 |
| 07 | கிளி/பரந்தன் அ.த.க. பாடசாலை | CRR கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-35 | C9 | 4000.00 | 1000.00 |
| 08 | கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்தியாலயம் | 120'x25', 70'x20', கட்டடத் திருத்தம் NP/03/05/ESDP/2010-36 | C9 | 4000.00 | 1000.00 |

01.மேற்படி வேலைகளுக்கு இக்ராட் பதிவுள்ள C9 தரத்தினையும், அதற்கு மேற்பட்ட தரத்தினையும் கொண்ட ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பிக்க முடியும்.

02.கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை வேலைநாள்களில் வலயக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் பரிசோதகருடன் தொடர்புகொண்டு பார்வையிட முடியும்.

03.கேள்விப்பத்திரங்களை 23.07.2010 தொடக்கம் 03.08.2010ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை வேலை நாள்களில் கணக்குக்கிளையில் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத வைப்புக்களைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், பாடசாலை வேலைகள் கிளையில் தொடர்புகொண்டு கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

04. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்களை 03.08.2010ஆம் திகதி முற்பகல்10 மணிக்கு முன்னதாக மூலப்பிரதி, இணைப்பிரதி என்பவற்றினைத் தனித்தனித் தபாலுறைகளிலிட்டு மூடிச்சீலிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி என முகவரியிட்டு பாடசாலை வேலைகள் கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

05.கேள்விப்பத்திரங்கள் 04.08.2010 முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் 11 மணியளவில் வலயக் கல்வி அலுவலக கேள்விச் சபையால் ஆய்வு செய்யப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ கலந்துகொள்ளமுடியும்.

06.மேற்படி வேலைகள் குறித்த பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ள முடியுமாயின் அந்தந்த பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் கேள்வி சமர்ப்பிக்க முடியும். பா.அ. சங்கத்தினருக்கு மீளளிக்கப்படும் வைப்புச் செலுத்துவதிலிருந்து விலக்களிப்புச் செய்யப்படும்.

07.தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர்கள் Performance Security செலுத்தல் வேண்டும்.

த.குருகுலராஜா,
தலைவர் கேள்விச்சபை/ வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.

(சி/569383)

## பொது இடங்களில் புகைத்தலுக்குத் தடை

அண்மைக்காலமாக பெருகிவரும் புகைத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்.மாவட்டப் புகையிலை கட்டுப்பாட்டுச்சபை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

பொது இடங்களிலும் புகைத்தலுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது என்ற பதாகைகளைப் பொருத்துதல், 21 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்யத் தடைசெய்தல் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டுச்சபை மேற்கொண்டு வருகின்றது. (50-317-318)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.
றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

VISA - வீசா
Consultancy Service
UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,
Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas
Call : 0776 209 887
SIC, 734, Hospital Road, Jaffna.


# மரண அறிவித்தல்

## அமரர் பொன்னம்பலம் இராஜசிங்கம்



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் இராஜசிங்கம் லண்டனில் (17.07.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-அன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராஜா (முன்னாள் அதிபர், இணுவில் மத்திய கல்லூரி) மற்றும் யோகராணி தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் (லண்டன்) அன்புக் கணவரும் நவீனின் பாசமிகு தந்தையும் திருமதி குலசிங்கம் தவமலர் (கனடா), காலஞ்சென்ற தவபாலசிங்கம் (லண்டன்) மற்றும் ஜெயராஜ் (லண்டன்), திருமதி பத்மமலர் (தாவடி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குலசிங்கம் (இணுவில்) மற்றும் வாகீஸ்வரி (லண்டன்), கௌசலியா (லண்டன்), காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் (தாவடி) மற்றும் சச்சிதானந்தன் (லண்டன்), திருஞானசோதி (லண்டன்), திருமதி சுசிலாதேவி செல்வரட்ணம் (இணுவில்), சிவசோதி (லண்டன்), ஞானபண்டிதன் (லண்டன்), ஜெயராஜா (லண்டன்), வரதராஜா (லண்டன்), குகதாசன் (கனடா), சிவதாசன் (லண்டன்), திருமதி வசந்தி சிவா (கனடா), திருமதி நிறஞ்சினிதேவி திருக்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நதளை மறுதினம் (25.07.2010) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று லண்டன் நேரப்படி 12 மணிக்கு HENDON CRIMATORIUM, HOLDERS HILL, LONDON NWTINB, U.K. இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:
பத்மமலர் சிவபாதசுந்தரம்.

(100813)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 22 . 04 . 1942



விண்ணில் 19 . 07 . 2005

## திருமதி சிவபாலாம்பிகை சுந்தரலிங்கம்

திதி: ஆடி பூர்வபக்க திரயோதசி [23.07.2010]

உற்றார்க்கும் உறவினர்க்கும் உரிமையாய்க்
கடமையாற்றி
பெற்றோர்க்கும் உடன் பிறந்தோர்க்கும் சீராகப்
பணிகளாற்றி
கணவருக்கும் மற்றோர்க்கும் கடமைகள்
சிறப்பாயாற்றி
விண்ணோர்க்கு விதந்துரைக்க நீ விரைவாய்ச்
சென்றாயோ

ஐந்தாண்டு கடந்த பின்னும் ஆறாது
எம் துயரம்
செந்தாளம் பூவின் மணம் மாறாது
எப்போதும்
வெந்தழலில் புழுப்போலத் துடிக்கின்றோம்
நாமெல்லாம்
எங்கிருந்தாலும் நீ ஏற்றமாய் வாழவென
வாழ்த்துவோமே.

உன் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவர், உடன்பிறப்புக்கள், பேரமகன் சஞ்ஜீவன், பேரமக்கள், மருமக்கள், மைத்துனர்மார், மைத்துனிமார்.

ஆ.சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்),
85, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0094212225112

(101110)




# தன்மானம்

தன்மானம் எப்படி என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே. அப்படி என்றால் என்ன என்று கேட்டுக்கொண்டு ஒருவர் என்னிடம் வந்தார்.

அப்படிக் கேட்டதும் எனக்கு ரொம்ப கஷ்டமாய்ப் போச்சு.

தன்மானம் என்றால் என்ன என்று கேட்கும் அளவுக்கு இப்ப நிலைமை வந்துவிட்டது என்று நினைக்கும்போது மனதுக்கு வேதனையாக இருந்தது.

இருந்தாலும் அந்த வார்த்தையின் அர்த்தம் என்னவென்று யாரையாவது கேட்டு தெரிஞ்சுக்கனும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

நண்பன் ஒருவர் வந்தார். அவர் புத்தகம் ஒன்று கொடுத்துவிட்டுப் போனார். தற்செயலாக அதைப் புரட்டிப் பார்த்தபோது பி.தியாகராஜர் வாழ்க்கையில் நடந்த சம்பவம் கண்ணில் பட்டது.

தன்மானம் மிகுந்த ஓர் அரசியல் தலைவராக அவர் இருந்திருக்கிறார். பதவிக்காக ஏற்றுக் கொள்கிற மனோபாவம் அவரிடம் இருந்ததில்லை. எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும் சரி தன்னுடைய சுய மரியாதையை இழந்து அந்தப் பெரிய மனிதன் தயவுக்காகக் காத்துக்கொண்டு நிற்பது இவரிடம் கொஞ்சம் கூடக் கிடையாது.

ஒரு சமயம் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்தாராம். அந்தச் சமயம் சென்னை மாநகராட்சியின் தலைவராக இருந்தவர் பி.தியாகராஜர். அப்போது சென்னை மாகாண ஆளுநர் லார்டு வில்லிங்டன்.

இளவரசரை வரவேற்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. லார்டு வில்லிங்டன் தியாகராஜரைப் பார்த்துச் சொன்னார் சென்னை மாநகர முதல்வர் என்பதல் நீங்கள்தான் இளவரசரை முதலில் வரவேற்க வேணும் என்று. அவரும் சரியென ஒப்புக் கொண்டார்.

இளவரசரைச் சந்திக்கும் நீங்கள் இன்னென்ன மாதிரி உடைதான் உடுத்த வேணும் அப்படி என்று சொன்னார்கள்.

அப்போது என்ன நடந்தது தெரியுமா? என்னுடைய வெள்ளை வேட்டி, வெள்ளைக் கோட்டு, வெள்ளைத் தலைப்பாகை இந்த ஆடைகளுடன் இளவரசர் என்னைப் பார்க்க விரும்பினால் நான் அவரை உளமார வரவேற்கிறேன். அவரை இந்த ஆடைகளோடு பார்க்க நீங்க அனுமதிக்காவிட்டால் இளவரசரை வரவேற்கும் பாக்கியம் எனக்கில்லை. அவரை வரவேற்பதற்காக வழக்கமான எனது ஆடைகளை மாற்றிக் கொள்ள முடியாது என்றார்.

வெள்ளைக்கார அரசே அதற்குப் பணிந்து வந்தது - வழக்கமான உடையுடனே இளவரசரை வரவேற்கலாம் என்று அனுமதி கொடுத்தது.

இந்தச் சம்பவத்தை தன்மானம் பற்றி விளக்கம் கேட்டவருக்குச் சொன்னேன்.

அது சரி உங்களுக்கு ஏன் திடீரென சந்தேகம் வந்தது என்று கேட்டார்.

அது ஒன்றும் இல்லை. நேற்று எனது வீட்டில் ஒரு திடீர் தீர்மானம் எடுத்தேன். அதற்கு என் மனைவி தன்மானம் என்றால் என்னவென்று தெரியுமா? தெரியாது என்றால் யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொண்டு வாங்க என்றாள். அதுதான் உங்களிடம் கேட்டேன் என்றான்.

அப்படி என்ன திடீர் தீர்மானம் எடுத்தீர்கள் என்று கேட்டார்.

தனியாகக் குடும்பம் நடத்த கஷ்டமாக இருக்கிறது. மாமனார் வீட்டுக்குப் போய் தங்கலாம் என்று சொன்னேன், அவ்வளவுதான்.

இவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இன்னொருவர் வந்தார். அவர் சொல்லுவதில் தப்பில்லை. நான் கூட அப்படித்தான் நினைத்தேன். துரதிஷ்டவசமாக அது முடியாமல் போய்விட்டது. ஒரு நாள் வித்தியாசத்தில் ஏமாந்துவிட்டேன் என்றார்.

எப்படி என்று கேட்டேன்.

நான் மாமனார் வீட்டுக்குப் புறப்படுவதற்கு முதல்நாள் அவர் என் வீட்டுக்கு வந்து நிரந்தரமாகத் தங்கப் போகிறேன் என்றார். தன்மானம் பற்றி விளக்கம் கேட்டவர் அவசரமாய்ப் புறப்பட்டு அவர் வீட்டுக்கு ஓடினார்.

• சொன்னவர்: தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

# போலிக் கௌரவம் ஆபத்தானது

அமெரிக்க ராணுவத்தில் 'மேஜர்' ஆகப் பணி புரிந்த ஒருவருக்கு 'கர்னல்' ஆகப் பதவி உயர்வு கிடைத்தது. அவர் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்ட அன்று அவரைக் காண ஒருவன் வந்தான். வந்தவனை உள்ளே அனுப்புமாறு தன் உதவியாளரிடம் உத்தரவிட்ட அவர் அவன் கதவை திறந்தபடி நுழைவதைப் பார்த்ததும் போனை எடுத்துக் காதில் வைத்துக் கொண்டு 'ஹலோ... யாரது? ஓ.. ஜனாதிபதி புஷ்ஷா? ஏதாவது அவசரச் செய்தியா... எதுவாக இருந்தாலும் சீக்கிரம் சொல்லுங்கள். நான் இன்றுதான் பொறுப்பேற்றுக் கொண்டேன். அவசரமான ஃபைல்களை நிறையப் பார்க்க வேண்டும்'' என்று பேசியபடி இருந்தார்.

அப்புறம் போனை வைத்துவிட்டு-''இந்த ஜனாதிபதி வேறு என்னோட வேலைப்பளு தெரியாமல் அடிக்கடி போனில் பேசிக் கழுத்தை அறுக்கிறார்!'' என்றபடி புதிதாக அறைக்குள் நுழைந்த நபரை அப்போதுதான் பார்ப்பது போலக் கவனித்தார். அவன் மிகவும் பணிவுடன் அங்கே நின்றிருந்தான். ''ம்.. உனக்கு என்ன வேண்டும்?'' என்று மிடுக்கான குரலில் கேட்டார் கர்னல்.

வந்தவன் மிகவும் பணிவான குரலில் பதில் தந்தான். ''புதிதாகப் பதவியேற்ற உங்களுக்கு போன் தரச் சொல்லி நேற்றுத்தான் எனக்கு உத்தரவு வந்தது. போனை நேற்று வைத்து விட்டேன். ஆனால் அதற்கான இணைப்பு தரவில்லை. உங்களிடம் என்ன நம்பர் வேண்டும் என கேட்டுக் கொண்டு இணைப்புத்தர வந்தேன்'' என்றான்.

இந்த இடத்தில் யார் முட்டாள் ஆனது? இது போலதான் தற்பெருமை பேசுவதே குறியாக இருப்பவர்கள் தினமும் பலமுறை பலர் முன்னால் முட்டாள் ஆகிறார்கள். அதைப் பல சமயம் அவர்கள் அறிவதில்லை.

சொன்னவர்: இ.ரெ.சண்முகவடிவேல்.

# பொய் சொல்லக்கூடாது பாப்பா

ஐம்பது ரூபாய்க்கு அப்பா வாங்கித் தந்த சட்டையைப் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போன காலம் யாராவது சட்டையை வியந்து எங்கே வாங்கியது? என்ன விலை என்று கேட்டால் நாம் உண்மையைச் சொல்லியிருக்கிறோமா?. ''எங்கே வாங்கியதென்று தெரியாது...'' இது முதல் பொய். அந்த இடத்திற்குப் போய் அதே மாதிரி வாங்கி விடக் கூடாதே என்று முதல்கவலை. ஐம்பது ரூபாய் என்று சொல்லி நம்மைக் குறைவாக நினைத்துவிட்டால்... எண்பது ரூபாயோ... என்னமோ சொன்னாங்க என்று விலையைக் கூட்டிச் சொல்லி ஐம்பது சேர்த்துக் கொள்வோம்.

சின்ன வயது தொடங்கி கிழம் கட்டை வரை எத்தனை எத்தனை பொய்கள்? எத்தனை வகை வகையான பொய்கள்... அடே அப்பா பயம், வீண் பெருமை, குழப்பம், திமிர், தலைக்கனம், அசட்டுத்தனம்... இப்படி எத்தனை எத்தனையோ காரணங்கள். எத்தனை எத்தனை பொய்களையோ நம்மைப் பேச வைத்திருக்கின்றன. பொய் சொல்லுவது ஆரம்ப கட்டத்தில் தோல் நோய் உள்ளவர்கள் சொறிந்து கொள்வது மாதிரி சுகமாகத் தொடங்கும். நாளாக நாளாகப் புண்ணாகிவிடும், வலியெடுக்கும். ஆரம்ப காலத்தில் நமது பொய்கள் நம்மை நாமே வியந்து கொள்ள வைக்கும். அடே அப்பா.. நமக்கு இத்தனை சாமர்த்தியமா? என்று லேசான கர்வத்தைக் கூடக் கொடுக்கும்.

சின்னச் சின்னப் பொய்களில் ஒருவகை கிளுகிளுப்பு இருக்கத்தான் செய்கிறது. அது சாராயத்தின் சிலிர்ப்பு மாதிரி... ஆரம்பத்தில் சிலிர்த்து நாளாக நாளாகத் தளர்ந்து சரிய வைத்துவிடும். அற்ப சந்தோஷத்தில் தொடங்கி அதித துக்கத்தில் முடியும். அதிசயிக்கத்தக்க பொய். விளையாட்டுக்குக்கூட பொய் சொல்லாதவர்கள் சிலர் இருந்திருக்கிறார்கள். அரிச்சந்திரனைப் பற்றி அப்படி ஒரு சம்பவம் உண்டு. மதிய உணவு முடிந்ததும் எல்லோருக்குமே தூக்கம் வரும். அப்படித் தூங்கி வழியும்போது, கண்செருகும்போது ''என்ன தூக்கமா?'' என்று கேட்டால், ''இல்லையே... ம்ஹீம் நான் தூங்கலையே... நீங்க சொல்லுகிறதைக் கவனமாகத்தான் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்.'' என்று எச்சில் வழியப் பொய் சொல்வார்கள்.

அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைப்பதற்காகச் சபதம் போட்டிருந்த விஸ்வாமித்திர மகரிஷி இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தார். உணவுக்குப் பின் விஸ்வாமித்திரருடன் பேசிக் கொண்டிருந்தபோது அரிச்சந்திரனது கண்கள் லேசாகச் சொருகின. ''அரிச்சந்திரா... என்ன தூக்கமா'' என்றார் மகரிஷி. ''என்னையறியாமல் உறக்கம் என்னைத் தீண்டியது'' என்று உண்மை சொன்னானாம் அரிச்சந்திரன். இப்படி இருக்க முடியுமா என்ன? இருந்திருக்கிறார்கள். அதுதான் முக்கியம். பாவபுண்ணியம் என்பதை எல்லாம் கடந்து சிந்திப்போம். பொய் சொல்வதன் மிகப் பெரிய சிக்கல் என்ன தெரியுமா? சொல்கிறேன்.

பத்திரிகையார் ஒருவர் இறந்து மேலே போனார். சொர்க்கத்தில் நுழைய விரும்பினார். ஆனால் அவரைக் காத்திருப்போர் பட்டியலில் சேர்த்து வெளியே தங்க வைத்தனர். பத்திகையாளருக்கான கோட்டா சொர்க்கத்தில் நிரம்பி விட்டது. யாராவது காலி செய்து வெளியேறினால் சொர்க்கத்தில் புகலாம் என்று காவல்காரர் சொல்லிவிட்டார். பரபரப்பானார் பத்திரிகையாளர். குயுக்தியாக சிந்தித்தார். நரகத்தில் புதிய பத்திரிகை தொடங்க இருப்பதாகவும் தகுதி படைத்த பத்திகையாளர்கள் அதிக சம்பளத்தில் நியமிக்கப்படுவார்கள். தேவை மிக அதிகம் என்றும் ஒரு பிரமாண்டமான பொய்யைச் சொர்க்கத்தின் காவல்காரனிடம் தெரிவித்தார். அவர் எதிர்பார்த்த பலன் கிடைத்தது.

காவல்காரன் உள்ளே சொர்க்கத்தில் சொல்ல அங்கே இருந்த மூத்த பத்திரிகையாளர்கள் நரகத்தை நோக்கி வேகமாகப் பாய்ந்தனர். காவல்காரன் சொர்க்கத்தில் இடம் காலியாவதால் புதிய பத்திரிகையாளர் உள்ளே போகலாம் என சமிக்ஞை காட்டினான். ஆனால் வதந்தி பரப்பிய புதிய பத்திரிகையாளர் 'ம்ஹீம்' என்று மறுத்தபடி இவ்வளவுபேர் போகிறார்கள் என்றால் இதில் ஏதோ உண்மை உள்ளது. நாமும் போய் பார்த்துவிடுவோம் என நகரத்தில் பிரவேசித்தார்... எப்படி கதை பார்த்தீர்களா?

ஆரம்பத்தில் பிறரை ஏமாற்ற அல்லது நம்ப வைக்கப் பொய் சொல்லத் தொடங்குவோம். நாளாக நாளாக நமது பொய்களை நாமே நம்ப ஆரம்பித்து விடுவோம். அதுதான் ஆரம்பத்தின் உச்சக்கட்டம்.

''நமது பொய்களை நாமே நம்பி ஏமாந்து போவது தான் பொய்யின் மிகப்பெரிய ஆபத்து''

இதைப் புரிந்து கொண்டால் இந்த நாள் ஓர் இனிய நாள்.

சொன்னவர் : சுகி.சிவம்




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 12


## வினாத்தாள் - I


நேரம் : 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**


* கீழே சிலசொற்களும், குறியீடுகளும் தரப்பட்டுள்ளன. எனினும், உரிய சொல்லின் கீழ் அதற்குப் பொருத்தமான குறியீடு காட்டப்படவில்லை. சொற்களையும், குறியீடுகளையும் புரிந்துகொண்டு 1-3 வரையான வினாக்களுக்குரிய விடைகளுக்கான குறியீடுகளைத் தெரிவுசெய்க.









01. பூனை என்பதைக் குறிக்கும் குறியீடு எது?




02. எலி என்பதைக்குறிக்கும் குறியீடு எது?






03. பிடிக்கும் என்பதைக் குறிக்கும் குறியீடு எது?




04. இவ்வுருவில் உள்ள சதுரங்கள் எத்தனை?
1) 9
2) 10
3) 14




05. வானரம் எனும் சொல்லை  எனக் குறியீட்டில் எழுதலாம் எனின், காரணம் எனும் சொல்லைக் காட்டும் குறியீடு எது?

1)  2) 

3) 

06. A,B ஆகிய இரு உருக்களிலும் உள்ள சதுரங்கள் ஒரே பருமனுடையவை எனின், அவற்றின் பரப்பளவுகள் பற்றி யாது கூறலாம்?



1) A யின் பரப்பளவு B யின் பரப்பளவை விடக்குறைவு.
2) A யின் பரப்பளவு B யின் பரப்பளவை விட அதிகம்.
3) A யின் பரப்பளவும் B யின் பரப்பளவும் சமம்.

* பின்வரும் விவரத்தை வாசித்து இல 7-9 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ் கோடிடுக.

> நிமாலினதும், குமாரினதும் நிறை 75 கிலோகிராம்
> விஜயினதும், நிமாலினதும் நிறை 80 கிலோகிராம்
> சியாமினதும், விஜயினதும் நிறை 90 கிலோகிராம்
> நிமாலினதும், பசீரினதும் நிறை 90 கிலோகிராம்
> இவர்களில் சியாமின் நிறை 45 கிலோகிராம்

07. நிறை குறைந்தவர் யார்?
1) நிமால். 2) குமார். 3) பசீர்.

08. நிறை கூடியவர் யார்?
1) நிமால். 2) குமார். 3) பசீர்.

09. நிமாலினதும், சியாமினதும் நிறைகளின் கூட்டுத்தொகை யாது?
1) 90 கிலோகிராம். 2) 80 கிலோகிராம். 3) 75 கிலோகிராம்.

* பின்வரும் கோட்டுப்படங்களுக்கு ஏற்ப வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்ணைத் தரப்பட்டுள்ளவற்றில் இருந்து தெரிவுசெய்க.

10. 5, 2, 3, 3 → LESS ................ → SELL
1) 2355 2) 3255 3) 2533

11. 787 → 878 → 989 → ....................
1) 898 2) 998 3) 889

12. 3542 → 4532 → 6352 → ....................
1) 5263 2) 3562 3) 5362

* 13 ஆம், 14 ஆம் வினாக்களில் கருத்துப் பிழையான வாக்கியத்தைத் தெரிவு செய்க.

13. 1) ஒவ்வொரு அமாவாசையன்றும், பூரண சந்திரனைக் காணமுடியும்.
2) மனிதனுக்கும், சுற்றாடலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு.
3) பாடசாலை ஒன்றில் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பானது பாடசாலையின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும்.

14. 1) ஆமைகள் யாவும் நிலத்தில் முட்டையிட்டு நீரில் வாழக்கூடியன.
2) மீன்கள் வளியிலுள்ள ஒட்சிசனைச் சுவாசித்து வாழ்கின்றன.
3) முள்ளம்பன்றியின் கூரான முட்கள் அதனை எதிரிகளிடமிருந்து பாதுகாக்கின்றன.

* இல.15-18 வரையிலான வினாக்களில் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

15. விவசாயிக்கு எதிரியான நான் ஒரே தடவையில் சுமார் நூறு முட்டைகள் இடுவேன். தாவர உண்ணியாக இருக்கும் என்னைப் பிடிக்கவருபவர்களிடமிருந்து தப்புவதற்காக நான் என் ஓட்டுக்குள் ஒளிந்துகொள்வேன். நான் யார்?
1) ஆமை. 2) மண்புழு. 3) நத்தை.

16. நான் தாவரங்களின் சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் பழக்கமுடையவன். என்னைச் சேர்ந்த பெண் விலங்குக்கு மனிதர்களது இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதில் தான் விருப்பம். நான் யார்?
1) இலையான். 2) நுளம்பு. 3) வண்ணத்துப்பூச்சி.

17. எனக்கு முள்ளந்தண்டு கிடையாது. வெயில் காலங்களில் இலைச்சருகுக்குள் ஒளிந்து வாழும் நான் ஈரலிப்பான இடங்களில் வெளியே வந்து மனிதர்களிலும், மாடுகளிலும் ஒட்டிக் கொள்வேன். நான் யார்?
1) பாம்பு. 2) அட்டை. 3) மயிர்கொட்டி.

18. எனது வாழ்க்கை வட்டத்தில் இளமைப்பருவம் முழுவதும் நீரிலேயே கழியும். படிப்படியாக நான் வளர்ந்து முழுவுடலியானதும் நீருக்கு வெளியே வந்து வாழத் தொடங்குவேன். எனக்கு நீரிலும் நீந்தத்தெரியும். நான் யார்?
1) தவளை. 2) ஆமை. 3) மீன்.

* 19-22 வரையான வினாக்களில் கீறிட்ட இடத்துக்கு வரவேண்டிய விடையைத் தெரிக.

19. கப்பல் - துறைமுகம் எனின், விமானம் ......................................
1) வானம். 2) ஓடுபாதை. 3) விமானநிலையம்.

20. சூரியன் உதிக்கும் - வெப்பம் அதிகரிக்கும்: மழை பெய்யும் ....................
1) குளிர்ச்சியைத்தரும்.
2) வெள்ளம் பெருகும். 3) வயல்விளையும்.

21. வாகன அதிகரிப்பு - விபத்து அதிகம் ; பாடசாலைகள் அதிகரிப்பு ....................
1) அறிவு வளரும்.
2) கட்டடங்கள் பெருகும். 3) சூழல் அழகுபெறும்.

22. மரம் நடுவோம் - நலம்பெறுவோம்; காடழிப்போம் ....................................
1) கட்டடம் கட்டுவோம்.
2) சூழலைப் பாதுகாப்போம். 3) கவலைப்படுவோம்.

23. பாதைக்குக் குறுக்காக கடவை மூடப்படாதிருந்த சந்தர்ப்பத்தில் வந்த வாகனம் ஒன்று புகையிரதத்துடன் மோதியதில் வாகனத்தில் வந்த மூவர் பலியாகினர். இதற்குக் காரணமாக இருக்கக்கூடியது,
1) வாகனமாம் அதிக வேகமாக வந்திருக்கலாம்.
2) பாதுகாப்பான கடவை ஒன்று இல்லாதிருக்கலாம்.
3) கடமை புரிபவரின் கவனக்குறைவாக இருக்கலாம்.

24. மிதுனா மாலைநேரத்தில் கடற்கரையில் நின்றபோது அவளது வலக்கைப்பக்கமாக அவளது நிழல் இருந்ததைக் கண்டாள். மிதுனா பார்த்துக்கொண்டிருந்த திசை யாது?
1) மேற்கு. 2) வடக்கு. 3) கிழக்கு.

25. இருபது ரூபாவை சில்லறையாக மாற்றி 8 நாணயங்களில் எடுக்கக்கூடிய முறைகளில் தவறானது எது?
1) ஐந்துரூபாக் குற்றிகள் 2; இரண்டுரூபாக் குற்றிகள் 4; ஒருரூபாக் குற்றிகள் 2.
2) ஐந்து ரூபாக்குற்றிகள் 3; ஒரு ரூபாக்குற்றிகள் 5.
3) இரண்டு ரூபாக்குற்றிகள் 5; ஐந்து ரூபாக்குற்றி 1; ஒரு ரூபாக்குற்றிகள் 2.

26. நேற்று திங்கட்கிழமை. நாளை மறுநாள் 18 ஆம் திகதி எனின், 20 ஆம் திகதி என்ன கிழமை?
1) சனிக்கிழமை. 2) வியாழக்கிழமை.
3) செவ்வாய்க்கிழமை.

* 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவுடன் மிகவும் தொடர்புடைய கருத்தைத் தரும் விடையைத் தெரிவுசெய்க.


27. 1) காலைப்பொழுது புலர்கின்றது.
2) சூரியன் நடுவானில் நிற்கிறது.
3) சூரியன் மறைகின்றது.




28. 
1) உழைப்பினால் உயர்வு உண்டாகும்.
2) பொழுதுபோக்கு மனமகிழ்ச்சியைத்தரும்.
3) நேரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவது நன்மை தரும்.


(13 ஆம் பக்கம் பார்க்க)

29. உருவில் காட்டப்பட்டுள்ள சதுரமுகியை கோடுகளின் வழியே உள்நோக்கி மடித்தால் கிடைக்கும் சரியான வடிவம் எது?





30. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதிக்குச் சமனான உரு எது?







✱ பின்வரும் எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்களைக் கண்டுபிடித்து அடைப்புக்குள் எழுதுக.


31.





32.




33.




34.




✱ 35ஆம், 36ஆம் வினாக்களில் சரியாக பிரிக்கப்படாத சொற்களைக் கொண்ட வாக்கியம் உள்ளது. அதைக் கருத்துப் புலப்படும் வாக்கியமாக பிரித்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

35. வண்ணா த்திப்பூ ச்சிகள்சூ ழலைஅழ குபடுத்தும்.

......................................................................................

36. பெரியோ ர்சொற்கேட் டுநடப்ப துசிறி யோர்கட மையாகும்.

......................................................................................

✱ 37-40 வரையான சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

37. 0.5, 0.05, 0.005 எனும் எண்வரிசையில் அடுத்துவரவேண்டிய எண்ணை எழுதுக.

......................................................................................

38. இது ஒரு மூன்றெழுத்துச் சொல்லாகும். முதல் எழுத்து மரத்தில் உண்டு; கரத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து நிலத்தில் உண்டு; நீரில் இல்லை. மூன்றாம் எழுத்து உயிரில் உண்டு; உடலில் இல்லை. அம்மூன்றெழுத்துச் சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.

......................................................................................

39. உருவிலுள்ள எழுத்துக்களோடு இணைத்து வாசிக்கும்போது சரியான கருத்துக்களைத் தரக்கூடிய சொற்களை அமைக்கப் பொருத்தமான எழுத்து எது?

......................................................................................

40. ஒரு வரிசையில் 10 கத்தரிச்செடிகள் நடப்பட்டுள்ளன. இரு செடிகளுக்கு இடையிலான இடைவெளி 40 செ.மீற்றராகும் எனின், முதலாவது செடியிலிருந்து 5 ஆவது செடி வரையிலான மொத்த நீளம் என்ன?

......................................................................................

(நிறைவுற்றது)

ஆசிரியர்: கலாபூசணம் புன்னியாமீன்,
மஸீதா புன்னியாமீன், கண்டி.
தொலைபேசி இலக்கம்: 081-2493746

கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035

# கல்விச்சாலைக் காட்சிகள்....




திருநெல்வேலி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வினோத உடை நிகழ்வில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவி செல்வி கலாநிதி அருளானந்தனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



ஊரெழு சைவ பரிபாலன முன்னேற்றக் கழகத்தின் கீழ் இயங்கும் கலைவாணி முன்பள்ளியின் மழலைகளுக்கான விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வில் விருந்தினர்கள் முன்பள்ளி மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:கலைஞன்)






அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அளவெட்டி தபாலக அதிபர் திருமதி சு.ஞானேஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை கோட்டக் கல்வி அதிகாரி ச.கைலாசநாதன் உரைநிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்....



திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவின்போது அம்பாள் தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேரில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)



புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மத்தாளோடை கருமாரி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவின்போது அம்மன் பக்தர்கள் புடைசூழ வருவதைப் படத்தில் காணலாம்.

(படம்: கலைஞன்)



சாவகச்சேரி, சங்கத்தானை முருகமூர்த்தி ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழாவின்போது சுவாமி தேருக்கு எழுந்தருளுவதையும் தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)


## ஏழாலை தெற்கு சூராவத்தை சுன்னாகம்
## முத்துமாரி அம்மன் ரதோற்சவம்/தீர்த்தோற்சவம்

பல நூற்றாண்டு காலமாக ஏழாலை தெற்கு, சூராவத்தை கிராமத்தின் பிரபஞ்ச சக்தியாக திருக்குடி அமர்ந்து சகல ஐஸ்வரியங்களையும் அப்பிரதேச மக்களுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் அருளி சரித்திரப் பிரசித்திபெற்றுள்ள அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாளின் ரதோற்சவம், தீர்த்தோற்சவம் இவ்வருடமும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

**ரதோற்சவம்:-**

நாளை (24.07.2010) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு உற்சவம் ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூஜையுடன் அருள்மிகு முத்துமாரி அம்பாள் முற்பகல் 10.45 மணிக்குத் தேரில் ஆரோணித்து அதன்பின் பச்சை சார்த்திய அலங்காரத்துடன் இருப்பிடம் வந்து சேர்வாள்.

**விசேட நாதஸ்வர இசையுடனான உற்சவம்**

**தீர்த்தத்திருவிழா:-**

அருள்மிகு முத்துமாரி அம்பாளின் தீர்த்தத் திருவிழா காலை 7.30 மணிக்கு அபிஷேகத் துடன் ஆரம்பமாகி முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூசையுடன் முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிக்கு நிறைவுறும்.

**விசேட இசைக் கச்சேரி**

இசைஞான திலகம் ராதா கிருஷ்ணன் குழுவினரின் கூட்டு வாத்திய இசை.

10.30-12.30 மணிவரை இடம்பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் அம்பாள் திருவூஞ்சலுடன் தொடங்கி கொடியிறக்கம் தொடர்ந்து சண்டேஸ்வரி உற்சவம், ஆச்சாரிய உற்சவத்துடன் நிறைவுபெறும்.

உற்சவ தினங்களில் விசேட மகேஸ்வரபூஜை (அன்னதானம்) நடந்தேற அம்பாள் அன்னபூரணியாக அருள்பாலித்துள்ளார்.

விளம்பர அனுசரணை:-

துரை வெதுப்பகம், துரை தொலைத் தொடர்பகம், துரை பல்பொருள் வாணிபம்

சூராவத்தை, சுன்னாகம்.

தொ.பே.இல:- 0212240378, 0212240344

100794


## ஞானத்தை அடைவதே வாழ்வின் உயர் இலட்சியமாக அமைய வேண்டும்

ஞானக்கதிர்

பிறவிக்கு வித்தாக இருப்பது ஆசையே ஆகும். உலகில்வாழும் மனிதர்கள் பலவிதமான பண்புகளை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். சிலர் மனித உடல்களை எடுத்திருக்கிறார்களே தவிர மனிதப் பண்புகள் சிறிதும் இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் ஆசை மனிதர்களாக-விலங்கு மனிதர்களாகவே இருக்கிறார்கள். மனிதாபிமானத்துடன் மனிதத் தன்மையைப் பேணி வாழ்பவர்கள் அன்பு மனிதர்களாக மிளிர்கிறார்கள். தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகப் பிரதிபலன் எதையும் எதிர்பாராமற் பணியாற்றுபவர்கள் அருள் மனிதர்களாகத் தெய்வீக புருஷர்களாகத் திகழ்கிறார்கள். ஆசை என்னும் பாசத்தினாற் கட்டுண்டு கிடப்பவர்கள் மக்களுள் கடைத்தரமானவர்கள். இம்மையிலும் மறுமையிலும் இந்திரிய சுகங்களை நாடுதல் ஒன்றிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். அவர்களது கல்வியும் கேள்வியும் சொல்வன்மையும் சிற்றின்பத்துக்கென்றே கையாளப்படுகின்றன. உலகியல் இன்பங்களைப் பெறுவது மட்டும் வாழ்க்கையின் இலட்சியமாக அமையக் கூடாது. பரிபூரண ஞானத்தைப் பெறுவதே வாழ்வின் உயர் இலட்சியமாக இருக்க வேண்டும்.

உலகில் உள்ள எல்லாச் சமுத்திரங்களையும் கடந்து விடலாம். ஆனால் பிறவிப் பெருங்கடலைக் கடப்பது மிகவும் சிரமமான காரியம் ஆகும். ஏழு கடல்களைப் போலவே தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய ஏழுவகைப் பிறப்புகளும் காணப்படுகின்றன. தனு, கரண, புவன, போகங்கள் உட்பட முப்பத்தாறு தத்துவங்களும் மாயையில் இருந்தே தோற்றம் பெற்றன என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

செல்வம், மனைவி, புத்திரர்கள் என்பவற்றின் மீது வரும் பற்றினாலேயே ஏழுவகைப் பிறப்புகளும் உண்டாகின்றன. அநுபூதிக்கு ஆசைகள் தடை. ஆதலால், ஆசைகளை விட்டு முருகன் அநுபூதியைப் பெறமுயற்சிக்க வேண்டும் என்று கந்தரநுபூதியில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

ஏழு வகையான பிறவிகளும் நீங்கவும், மாயையினால் தோன்றிய மூன்று வகையான ஆசைகளும் அடியவனாகிய தன்னைப் பற்றாது அகலவும் முருகப் பெருமானின் திருவருள் துணை கிடைக்கவேண்டும் என்று அருணகிரிநாதர் பிரார்த்திக்கிறார். உலகங்களெல்லாம் அரசராகவும், குறவர் குலத்தில் வளர்ந்த மின்னற் கொடிபோன்ற வள்ளி நாயகியின் தோள்களைத் தழுவுகின்ற தெய்வமாகவும், மங்கள மூர்த்தியும், சுகத்தைச் செய்பவருமான சிவமூர்த்தியின் குருநாதராகவும் திகழ்கின்ற கந்தவேள் பெருமானின் அருட்கடாட்சம் கிடைத்துவிட்டால் உலகியற் பற்றுக்களை நீக்கி சிவாநுபூதியைப் பெற்று விடலாம் என்கிறது கந்தரநுபூதி.

நன்றி:- முருகசந்திரன்.




# மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் திருத்தலம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

தம்பு தம்பிராசா நிர்வாகப் பொறுப்பினை ஏற்றபின்னர் ஆலய பூஜைகள் குறிப்பிட்ட நேரங்களில் நடைபெற்றன. இதனால் வழிபடுவோர் தொகை அதிகரித்து ஊர் மக்களின் உபயங்களும் அதிகரித்தன.

இவர் காலத்திலேயே ஆலயத்தின் உட்பிரவாகம் முழுவதும் ஓட்டினால் வேயப்பட்டது. உட்பிரவாகத்தில் முருகன், சந்தானகோபாலர் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. கணபதி ஹோமம் ஆரம்பிக்கப்பட்டு வருடம் தோறும் நடத்தப்பட்டன. மாத சதுர்த்தி தினத்திலும் வெள்ளிக்கிழமையிலும் விஷேட பூஜைகளுடன் எம்பெருமான் உள்வீதி வலம்வர ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவரின் பின் பொறுப்பேற்ற சி.இராமலிங்கம் என்பவர் இன்றுவரை ஆலய நிர்வாகத்தை நடத்தி வருகிறார். இவரது காலத்தில் ஆகம விதிப்படி வசந்த மண்டபம், யாக மண்டபம், வைரவர் கோயில், சண்டேஸ்வரர் கோயில், வெளிப் பிரவாக மதில் போன்றன அமைக்கப்பட்டன.

சுமார் 120 வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகியது. இன்றும் கொடியேற்றத் திருவிழா முகமாலை யோகரத்தின முதலியாரின் வழித் தோன்றல்களால் மேற்கொள்ளப்படுகிறது.



ஆலய எட்டாம் திருவிழாவை கொடிகாமம் கட்டைப் பண்டாரம் என அழைக்கப்படும் கோவிந்தர் பொறுப்பேற்று அதனை வேட்டைத் திருவிழாவாக மாற்றினார். வேட்டைத் திருவிழாவுக்குரிய சிவப்பு நிற குதிரை, செம்மறி ஆட்டுக்கடா, சிங்கம், வெள்ளை நிற கோடிக்குதிரை ஆகியவை கோவிந்தரின் வழித்தோன்றல்களான வேலுப்பிள்ளை அவரது மகன் சோமசுந்தரம் அவரின் பின் அவரது மகன் கணேசலிங்கம் ஆகியோரால் ஆலயத்திற்கு வழங்கப்பட்டன.

1916ஆம் ஆண்டு நீதிமன்றினால் வழங்கப்பட்ட உறுதிகளின் பிரகாரம் ஆலயத் திருவிழா அதற்கு முன்னரே ஆரம்பித்திருக்கலாமென நம்பப்படுகிறது.

இந்த ஆலயத்தில் இதுவரை பல குடமுழுக்குகள் இடம்பெற்றுள்ளதாக பதிவேடுகள் மூலம் அறிய முடிந்தது. 1947, 1957, 1981, 1997, 2010 ஆகிய காலங்களில் குடமுழுக்கு இடம்பெற்றுள்ளதாக அறியமுடிந்தது.

இப்பகுதியைச் சேர்ந்த சரவணமுத்து என்பவர் தனது நேர்த்திக் கடனாக சகடையொன்றை வழங்கியுள்ளார். அருட்பெரும் வள்ளல் ஆண்டாரும் அவரது வழித் தோன்றல்களும் ஆலயத்தில் அருட்பணிகளை மேற்கொண்டுள்ளனர். ஆலயத்திற்கு தமது செலவில் சப்பரம் அமைத்துக் கொடுத்ததுடன் ஆலய வெளி வீதியின் வடக்குப் புறத்தில் தீர்த்தக் கேணியையும் அதன் கரையில் சுவாமி இளைப்பாறும் மண்டபமும் அமைத்துக் கொடுத்து இன்றும் அவற்றினைப் பராமரித்து வருகின்றனர்.

ஆண்டார் வழித்தோன்றலில் ஒருவரான வேலுப்பிள்ளையும் அவரது மனைவியும் தமது சொத்துக்களை விற்று ஆலய திருப்பணிக்கு செலவிட்டனர். ஆலய வளாகத்தில் வாகனசாலை, மடப்பள்ளி, வில்வளை, களஞ்சிய அறை, குழுக்கள் அறை ஆகியவை கட்டப்பட்டன.

சிதம்பரத் தேசிகர் ஆலயத்துக்கு அருகில் குருபூசை மடத்தினை அமைத்து சமயகுரவர் நால்வரினதும் குருபூசை தினங்களை ஆலயத்தில் சிறப்பாகக் கொண்டாடி அன்னதானமும் வழங்கி வந்தார்.

கொடுக்கல் விதானை வழித்தோன்றல்களும் ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளனர். இவரது வழித்தோன்றல்களில் ஒருவரான தங்கமுத்து என்பவர் ஆலய இராஜகோபுரம் அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஐ.மாணிக்கவாசகர் என்பவரின் குடும்பத்தினரால் வசந்த மண்டபம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. மேலும் குஞ்சையா என்னும் கணபதிப்பிள்ளை சண்டேஸ்வரர் ஆலயம் அமைத்துக் கொடுத்துள்ளார்.

பிரபல வர்த்தகரும் கொடை வள்ளலுமான மு.தா.சுப்பிரமணியம் தலைமையில் அமைக்கப்பட்ட தேர்த் திருப்பணிச் சபையினால் சித்திரத்தேரும் இவரின் தலைமையில் அமைக்கப்பட்ட தேர்முட்டித் திருப்பணிச் சபையினால் தேர்முட்டியும் அழகுற அமைக்கப்பட்டன.

ஆலயத்திற்கான வழிபடுவோர் சபை 1992.03.23ஆம் திகதி கலாசார அமைச்சினால் பதிவு செய்யப்பட்டு இயங்குகிறது. 1994ஆம் ஆண்டு தென்மராட்சிப் பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை முன்னிலையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி வழிபடுவோர் சபையின் நிர்வாக சபை உறுப்பினர் இருவர் மரபு வழியாக தர்மகர்த்தா சபையில் இடம்பெறுவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தொடரும்)

# சாவகச்சேரி புவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையம்

தொகுப்பு: ஐயந்தன்




(சென்றவாரத் தொடர்ச்சி)

பாலர் பாடசாலையின் வளர்ச்சியைக் கண்ட ஸ்தாபகரின் தம்பியான டென்மார்க்கில் வதியும் நல்லையா சண்முகசுந்தரம் ஓலைக் கொட்டிலில் இயங்கும் பாலர் பாடசாலையைக் கட்டடமாக மாற்ற நிதி உதவி வழங்கியதால் கட்டடம் கட்டப்பட்டு 1996 - 01 - 15 ம் திகதி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு ஆசிரியைகளுக்கு வழங்கிய வேதனத்தை புனர்வாழ்வு கழகம் நிறுத்தியதால் சாவகச்சேரி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையினால் பாலர் பாடசாலையை பொறுப்பெடுத்து ஆசிரியைகளின் வேதனத்தை வழங்கி வந்தனர்.

ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையின் நிர்வாகப் பொறுப்பினை வை.இராசரத்தினம், ம.விவேகானந்தன், க.இரத்தினசோதி ஆகியோர் ஏற்ற பின்னர் பாடசாலையின் வளர்ச்சி முன்னேற்றம் கண்டது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 1998-11-28 இல் சிறார்களுக்கான முதலாவது இல்ல மென்வன்மைப் போட்டிகள் டச்சு வீதி தென்னகத் தாரகை வி.க.மைதானத்தில் நடைபெற்றது. புவேந்தன், பாபு என இரு இல்லங்களாக சிறார்கள் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிக்கான பரிசில்களை சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரும், நகர்ப்பகுதி வர்த்தகர்களும் நலன்விரும்பிகளும் வழங்கியிருந்தனர்.

புவேந்தன் பாலர் பாடசாலையை பாலர் பகல் பராமரிப்பு நிலையமாக மாற்ற தலைவர் வை.இராசரத்தினம் நடவடிக்கை மேற்கொண்டதன் பயனாக 1999 - 11 - 27 ஆம் திகதி சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வர்த்தகர்கள், அலுவலர்கள், நலன்விரும்பிகளை உள்ளடக்கி 'சாவகச்சேரி புவேந்தன் பாலர்' பகல் பராமரிப்பு நிலைய நிர்வாகக் குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சுக்கு பதிவுக்கான விண்ணப்பம் அனுப்பப்பட்டது. இலங்கை சோசலிச குடியரசின் 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வலிந்துதவு சமூக சேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு இல்லம் 2000.03.02 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. தென்மராட்சி பிரதேச செயலக வலிந்துதவு சமூக சேவைகள் ஒருங்கமைப்பு பதிவாளரும் தென்மராட்சி பிரதேச செயலருமான புண்ணியர் சுந்தரம்பிள்ளை இதற்கான பதிவுச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் மக்கள் இடம்பெயர்ந்து 2002ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்தபோது நிலையக் கட்டடம் முற்றாக சேதமடைந்த நிலையில் காணப்பட்டது.

நிலைய ஸ்தாபகரான சி.மகாலிங்கம் தனது வீட்டினை திருத்தி அதன் ஒரு பகுதியை நிலையம் இயங்க வழங்கியதுடன் சேதமடைந்த கட்டடத்தினையும் புனரமைத்து வழங்கினார். புனரமைக்கப்பட்ட கட்டடம் 2003.01.18ஆம் திகதி அப்போதைய தென்மராட்சி பிரதேச செயலராக கடமையாற்றிய க.கேதீஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு நிலையத்திலேயே கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

1996ஆம் ஆண்டு தொடக்கம் நிலையத்தை நிர்வகித்து வந்த சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் பரிபாலன சபையிடமிருந்து பொறுப்புக்களை நிலைய பராமரிப்புக் குழுவினர் பொறுப்பேற்று இன்றுவரை நடத்தி வருகின்றனர்.

தற்போது 3 ஆசிரியைகளுடன் 106 மாணவர்களுடனும் இந்நிலையம் சிறப்புற இயங்கி வருகிறது.

(தொடரும்)

தென்மராட்சி வலம்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்



அயலாரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆட்படலாம். பிள்ளைகள் வழியில் கூட எதிர்பாராத செலவுகளை அல்லது மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த காரியம் ஒன்றில் எதுவும் கிடைக்காமல் போகலாம். வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டிய நாள். மன அமைதி பாதிக்கும்.

### இடபம்



எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நடக்கலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். உங்களின் யோசனைகளுக்கு குடும்பத்தினர், நண்பர்கள் ஆதரவு தெரிவிப்பர். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையலாம். உறவினர்களை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடியலாம். மனதில் சந்தோஷம் குடிகொள்ளும்.

### மிதுனம்



நல்லவர், கெட்டவர் என பார்க்காமல் நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர் ஒருவரின் செலவில் உங்களின் விருப்பங்கள் நிறைவேறலாம். உடன் பிறப்புக்களிடம் கடும் பேச்சுவார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும் நாள். அனுகூலமான நாள்.

### கடகம்



மூத்த உடன் பிறப்புக்களால் ஆதாயம் பெறலாம். நண்பர்கள் சிலருடன் மனம் விட்டு சொந்த விடயங்கள் பற்றி பேசுவீர்கள். பால்ய நண்பர் ஒருவரை பாதையில் சந்திக்கலாம். கடும் பிரயத்தனம் மேற்கொண்டும் சில வேலைகள் முடியாமல் போகலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். சோர்வு கூடும்

### சிங்கம்



பெண்கள், கணவர் வழியில் பணவரவுகளைப் பெறலாம். சிலரிடம் தொலைபேசியில் பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். எந்த விஷயத்திலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவிகள் கேட்கலாம். கடும் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

### கன்னி



புத்திசாலித்தனமாக செயற்பட்டு மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். பல நாட்களாக காத்திருந்தும் கிடைக்காத வாய்ப்பு ஒன்று இப்போது கிடைக்கலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். அதிக சிரமப்பட நேரிடும் என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிவுக்கு வரலாம். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள்.

### துலாம்



வழக்கமான சில வேலைகளை நாளை செய்யலாம் என தள்ளி வைப்பீர்கள். குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். சக ஊழியர்கள் சிலரிடம் கேலி, பேசி அவர்களை வெறுப்பேற்றலாம். சிலர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம். போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம்.

### விருச்சிகம்



சிக்கலில் இருக்கும் சிலருக்கு அவர்கள் எதிர்பாராத வகையில் உதவி செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். விரும்பிய ஒரு பொருள் கிடைக்காமல் போனாலும், கிடைக்கும் பொருள் நல்லதாகவே இருக்கும். பிள்ளைகள் பொறுப்பாக செயற்பட்டு உங்களுக்கு பெருமை சேர்ப்பர். கனிவான பேச்சால் காரியம் சாதிப்பீர்கள்.

### தனுசு



தம்பதியர் இடையே சிறு பிரச்சினைகள் ஏற்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பெண்கள் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். வரவாக வந்த பணம் ஒன்றை வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்க செலவு செய்வீர்கள். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றை கேட்க நேரிடலாம்.

### மகரம்



கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றி கவலைப்படாமல், மனதில் நினைத்ததை வெளிப்படையாகச் சொல்வீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் தொய்வின்றி சுறுசுறுப்பாக முடிவுக்கு வரும். உறவினர்களால் சந்தோஷம் அடைவீர்கள். மனதில் ஊக்கம், உற்சாகம் குடிகொள்ளும்.

### கும்பம்



மற்றவர்கள் செய்யத் தயங்கும் வேலை ஒன்றை நீங்கள் துணிச்சலாக செய்வீர்கள். சொத்து விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். உங்களின் வார்த்தைக்கு மற்றவர்கள் மத்தியில் மரியாதை இருக்கும். கடனுதவி, பண உதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். பெண்கள் வழியில் எதிர்பாராத நன்மைகள் அடையலாம்.

### மீனம்



குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை கேட்டு செயல்படுவீர்கள். சில வேலைகளை முடிக்க நீண்ட நேரம் காத்திருக்கலாம். உங்கள் மீது உண்மையான அன்பு கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். சில நாட்களுக்கு முன் சண்டை போட்ட ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். வேண்டாத சிலரால் தொழிலில் பிரச்சினை உருவாகும்.


## நன்றி நவிலல்

எமது பாடசாலையின் தலைமை மாணவி செல்வி புலேன்ரா யோசப் இன் திடீர் இழப்பினால் எமது பாடசாலைச் சமூகம் அதிர்ச்சியடைந்து துயரில் மூழ்கி நின்றவேளை எமது துயரினைப் பகிர்ந்து ஆறுதல் சொன்னவர்களுக்கு எமது நன்றிகளைக் கூறி நிற்கின்றோம். குறிப்பாக, எமது பாடசாலையில் நடைபெற்ற இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டோர் அனைவருக்கும் சிறப்பாக கௌரவ பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், அஞ்சலி செலுத்திய யா/பத்திரிசியார் கல்லூரி, யா/மத்திய கல்லூரி, யா/புனித ஜேம்ஸ் வித்தியாலயம், யா/பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம், யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், யா/வைத்தீஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்கும் அஞ்சலி உரை நிகழ்த்திய யாழ். கல்விக் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் வன்னியசிங்கம், சகோதர பாடசாலையாகிய யா/பத்திரிசியார் கல்லூரியின் பகுதித் தலைவர் அருட்திரு.அருட்செல்வன், ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் அதிபர்.புஸ்பரட்ணம், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.கனகரட்ணம், பழைய மாணவி செல்வி வயலற் இம்மானுவேல் ஆகியோருக்கும் தந்தி மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறிய அனை வருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.

(100832)


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை 23

அறிவாளி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அறிவொளி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

மை.எழில்ரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்குப் பிரதேச சபைச் செயலாளர் திருமதி முருகநேசன் சுலோச்சனா கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஞானவேல்ராஜா, தென்னை, பனைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.மெய்யழகன், புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலய அதிபர் இ.ஜெயக்குமார், யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத் தலைவர் என்.இன்பநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர். (50-204)


## கருத்தரங்கு இடமாற்றம்

Mathuram Institute
Dutch Road, Kopay South, Inupalai

எமது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆசிரியர் ந. சந்திரகுமார் அவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு இடநெருக்கடி காரணமாக இருபாலை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பிரமாண்ட திருமண மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

சனிக்கிழமை 24.07.2010 மு.ப. 10.30 மணிக்கு இக்கருத்தரங்கு ஆரம்பமாகும்.

தொடர்புகளுக்கு :-
0779122918
0775581626

பதிவு செய்த மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

மண்டப முகவரி :-
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருமண மண்டபம்,
பருத்தித்துறை வீதி,
கட்டைப்பிராய்,
இருபாலை,
கோப்பாய் தெற்கு.

நிர்வாக இயக்குநர்.

(100818)



## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
17★02★1913

இறப்பு:
21★07★2002

அமரர்
அமிர்தலிங்கம் துரைசிங்கம்

திதி: பூர்வபக்க திரயோதசி (23.07.2010)

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த அன்புத் தெய்வமே!
மீளாத்துயரில் கொண்டு எட்டு ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்.

நிரந்தர முகவரி:-
'லிங்கநேய',
எழுதுமட்டுவாழ்.
தற்காலிகமுகவரி:
மருதடி,
பிரதான வீதி, பருத்தித்துறை.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(100833)



## 15ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் தம்பிராஜா கனகரட்ணராஜா

திதி: திரியோதசி (23.07.2010)

வையத்துள்அறிமுகம்
19★10★1935

தெய்வத்துள்சங்கமம்
08★08★1995

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பதினைந்து ஆண்டுகள் அல்ல எத்தனை
ஆண்டுகள் தான் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் மறாதையா!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மைத்துனர்கள்,
சகோதரிகள், மைத்துனிகள்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்தையடி, மானிப்பாய்.

(100829)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சற்குரு சத்தியலிங்கம்

திதி: துவாதசி

பிறப்பு
19★12★1943

இறப்பு
02★03★2009

எம்மைத் தவிக்கவிட்டுச் சென்று ஆண்டொன்று
ஆனதுவோ அப்பாவே!
என்றும் ஆறாத்துயரில் மாறாத காயங்கள்
என்றென்றும் எம் மனதில் ஓயாத அலைகளாய்
ஓயாமல் பொங்கிய வண்ணம் உள்ளது அப்பாவே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மருமகள்.

(100810)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்திருந்த ஒரு லட்சம் பேரில் 45 ஆயிரம் பேர் மீள்குடியமர்வு

## கண்ணிவெடி அகற்ற அகற்ற மக்கள் மீள்குடியமர்த்தப்படுவதாக அரச அதிபர் தகவல்

முல்லைத்தீவு,ஜூலை23

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து கடந்த வருடம் இடம்பெயர்ந்த ஒரு லட்சத்து 12 ஆயிரம் பேரில் இதுவரை 45 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு எம்மிடம் பிரதேசங்கள் கையளிக்கப்பட்டதும் வவுனியா நலன்புரி நிலையங்களில் இருப்பவர்கள் அழைத்துவரப்பட்டு மீள் குடியமர்த்தப்படுவர்.

முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் மேற்கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மீள்குடியமர்ந்த மக்களுக்கு உலக உணவுத்திட்ட நிறுவனம் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றது. அந்த மக்களின் மீள்குடியமர்வு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு வைத்தியசாலை முழுமையாக இன்னமும் செயற்படாதபோதும், முடிந்தளவு சேவையை வழங்குகிறது.

எந்த வங்கியும் தமது கிளைகளை இன்னமும் திறக்கவில்லை. எனினும் வவுனியாவில் இருந்து வந்து நடமாடும் சேவையை




வழங்குகின்றன.

மீள்குடியமர்ந்த மக்களின் தேவைகள் குறித்து அரச அதிகாரிகள் மதிப்பீடுகளை செய்து வருகின்றனர். அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தேவைகள் இனங்கண்டு உதவிகள் வழங்கப்படும் - என்றார். (1)

# மன்னார் இலங்கை வங்கிக் கிளை ஏற்பாட்டில் தரம் 5 மாணவர்களுக்கு ஞாயிறன்று செயலமர்வு

மன்னார்,ஜூலை 23

மன்னார் மாவட்டத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான ஒரு நாள் செயலமர்வு மன்னார் இலங்கை வங்கியின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.

அத்துடன் மாவட்ட ரீதியில் அதிக மதிப்பெண்கள் பெறும் பத்து வெற்றியாளர்களுக்கும் தலா ஆயிரம் ரூபாய் வரையில் பரிசில் வழங்கவும் முன்வந்துள்ளது.

எதர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் பயிற்சிச் செயலமர்வில் கலந்துகொள்ளும் மாணவ மாணவிகள் மன்னார் இலங்கை வங்கிக் கிளையில் ரூபா 2500 இற்குக் குறையாத வகையில் சிறுவர் பொன்னரும்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

மன்னார் சித்தி விநாயகர் இந்துத் தேசியக் கல்லூரியில் நடைபெறவுள்ள செயலமர்வில் கலந்து கொள்ள விரும்பும் மாணவ மாணவிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் அன்று காலை எட்டு மணிக்கு முன்பதாக செயலமர்வு நடைபெறும் கல்லூரிக்கு சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலும் தகவல் தொடர்புகளுக்கு மன்னார் இலங்கை வங்கி தொலைபேசி எண் 023 222 2337 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளும்படி வங்கி முகாமை வேண்டுகின்றது. (1-80)

# மாங்குளம்- கரிப்பட்ட முறிப்பு வீதி மோசம்; பயணிப்போருக்கு சுவாச நோய் ஏற்படும் அபாயம்

ஒட்டுசுட்டான், ஜூலை 23

முல்லை மாவட்டத்தின் பிரதான வீதியான முல்லை மாங்குளம் வீதி கரிப்பட்ட முறிப்பில் இருந்து முல்லைத்தீவு வரை செம்பாட்டுக் கிரவல் வீதியாக உள்ளது.

இதனால் அந்த வீதியால் பயணிப்பவர்கள் அனைவரும் பெரும்சிரமப்படுகின்றனர்.

இவ்வீதியில் வாகனப்போக்குவரத்தும் இப்போது அதிகரித்துள்ளது. ஒரு வாகனம் சென்றால் பெரும் படையாகக் கிளம்புகிறது செம்பாட்டுப் புழுதி.

வாகனம் விலகிச் சென்றதும் கண் முழிக்க முடியாது. சுவாசிக்கவும் முடியாதுள்ளது.

அத்தோடு விபத்து ஏற்படுவதற்குக் கூடிய வாய்ப்பும் அதிகம். அத்தோடு வீதியின் இருபக்கமும் உள்ள குடியிருப்பாளர்களும் தொடர்ந்து புழுதியைச்சுவாசிப்பதால் சுவாச நோய் வரக்கூடிய வாய்ப்பும் அதிகரிக்கிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு வேண்டுகின்றனர் அந்தப் பகுதி மக்கள். (1)







கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு சிடிஎம்ஏ தொலைபேசிகள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தொலைபேசியை அதிபர் ஒருவருக்கு வழங்குவதை முதலாவது படத்திலும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அங்குள்ள நிலைமைகள் குறித்து சிறிதரனுக்கு விளக்கமளிப்பதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம்.

# வன்னியில் மனச்சுமையுடன் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியும் ஆரோக்கியமும் முதன்மைப்படுத்தப்பட வேண்டும்

## தொலைபேசி கையளிப்பு நிகழ்வில் சிறிதரன் எம்.பி

கிளிநொச்சி,ஜூலை23

வன்னியில் பெரும் மனச்சுமையுடன் கல்வியைத் தொடரும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்துவதை முதன்மைப்படுத்தவேண்டும்.

இப்படிக் கூறியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 50 பாடசாலைகளுக்கும் இரண்டு கோட்டங்களுக்கும் சிடிஎம்ஏ தொலைபேசிகளை வழங்கும் நிகழ்வில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகமான பாடசாலைகள் பெரும் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் இருக்க தளபாடங்கள் இன்றியும், வகுப்பறைகள் இன்றியும் ஆசிரியர் பற்றாக் குறைகளுடன் இருப்பதை அவதானித்துள்ளோம். மாணவர்கள் ஏராளம் மனச் சுமைகளுடன் கல்வியைத் தொடர்கின்றனர். எனவே அவர்களின் கல்வி வளர்ச்சியிலும் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்த வேண்டியிருக்கின்றது. அதற்காக நான் பாடுபடுவதை முதன்மை எண்ணமாகக் கொண்டுள்ளேன்.

கல்விச் சமூகம் கல்வி தொடர்பான அக்கறையுடன் மட்டுமன்றி தாம் வாழ்கின்ற சமூகத்தின் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் அக்கறை கொள்வதுடன் அவை தொடர்பான தீர்வுகளை நோக்கிய முன்னெடுப்புகளில் பங்காற்ற வேண்டும் - என்றார்.

### கூரைகளின்றித் தவிக்கும் பள்ளிகளும் பிள்ளைகளும்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

கிளிநொச்சி வலயத்தில் இருக்கின்ற பெரும்பாலான பாடசாலைகளின் கட்டடங்கள் முழுமையாக அழிவடைந்திருக்கின்ற அதேவேளை எஞ்சியிருக்கின்ற கட்டடங்கன் பெரும்பாலானவை கூரைகள் இன்றிக் காணப்படுவதால் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி நிலை தொடர்ந்தும் சீர்குலைந்து வருகிறது.

கிளிநொச்சி வலயத்தில் 22500 இற்கு மேற்பட்ட கற்றலில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் 40 வீதமானவர்களுக்கு மட்டுமே தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை, அதிகரித்துவரும் மாணவர் தொகைக்கு ஏற்ப 20 இற்கு மேற்பட்ட கீற்றுக் கொட்டகைகளை பாடசாலைகளில் உடன் வேயவேண்டிய தேவை இருக்கிறது. இக் குறைபாடுகள் உடன் தீர்க்கப்படாத விடத்து எதிர்வரும் பருவ மழைகாலம் கல்விச் செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் என அச்சப்படுகிறோம். - என்றார். (1)

# 50பாடசாலைகளின் தொலைபேசி இலக்கங்களின் விவரம்

கிளிநொச்சி,ஜூலை23

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 பாடசாலைகளுக்கும் இரண்டு கோட்டங்களுக்கும் சிடிஎம்ஏ தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றின் இலக்கங்கள் பாடசாலை ரீதியாக வருமாறு:-

| பாடசாலை | தொ.பேஇல. | பாடசாலை | தொ.பேஇல. |
|---|---|---|---|
| கிளிநொச்சி மத்திய கல்லூரி | 213208201 | புனித அந்தேனியார் றோ.க.த.க.பா | 213208227 |
| கிளிநொச்சி இந்துக் கல்லூரி | 213208202 | பாரதி வித்தியாலயம | 213208228 |
| புனித திரேசா பெண்கள் கல்லூரி | 213208203 | சிவபாதகலையகம் அ.த.க.பா | 213208229 |
| வட்டக்கச்சி ம.வி | 213208204 | ஐயனார்புரம் அ.த.க.பா | 213208230 |
| முருகானந்தா ம.வி | 213208205 | சிவநகர் அ.த.க.பா | 213208231 |
| முழுங்காவில் ம.வி | 213208206 | அக்கராயன் அ.த.க.பா | 213208232 |
| பூநகரி ம.வி | 213208207 | இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா | 213208233 |
| பளை மத்திய கல்லூரி | 213208208 | கலவெட்டித்திடல் நாகேஸ்வரா | 213208234 |
| இராமநாதபுரம் ம.வ | 213208209 | புன்னைநீராவி அ.த.க.பா | 213208235 |
| அக்கராயன் ம.வி | 213208210 | இரணைதீவு றோ.க.த.பா | 213208236 |
| உருத்திரபுரம் ம.வ | 213208211 | நாச்சிக்குடா அ.த.க.பா | 213208237 |
| திருவையாறு ம.வி | 213208212 | செல்லியாதீவு அ.த.க.பா | 213208238 |
| கிளிநொச்சி ம.வ | 213208213 | ஜெயபுரம் ம.வி | 213208239 |
| கனகபுரம் ம.வி | 213208214 | முக்கொம்பன் அ.த.க.பா | 213208240 |
| பரந்தன் இந்து ம.வி | 213208215 | மாசார் அ.த.க.பா | 213208241 |
| கண்டாவளை ம.வி | 213208216 | பளை றோ.க.த.க.பா | 213208242 |
| தர்மபுரம் ம.வி | 213208217 | சோரன்பற்று கணேசா வித்தி | 213208243 |
| பிரமந்தனாறு ம.வி | 213208218 | கண்ணகைஅம்மன் வித்தி | 213208244 |
| வேரவில் இந்து ம.வி | 213208219 | தமிழ்ச்சோலை வித்த | 213208245 |
| கறுக்காய்த்தீவு ம.வி | 213208220 | கிராஞ்சி அ.த.க.பா | 213208246 |
| பூநகரி நல்லார் ம.வி | 213208221 | பூநகரி ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தி | 213208247 |
| வன்னேரிக்குளம் ம.வி | 213208222 | கல்லாறு தமிழ் வித்த | 213208248 |
| இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா | 213208223 | இயக்கச்சி அ.த.க.பா | 213208249 |
| புனித பற்றிமா றோ.க.த.க.பா | 213208224 | ஊற்றுப்புலம் அ.த.க.பா | 213208250 |
| கனகாம்பிகைக்குளம் அ.த.க.பா | 213208225 | கோட்டக்கல்வி அலுவல்கம் - பளை | 213208251 |
| புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித | 213208226 | கோட்டக்கல்வி அலுவலகம்- கண்டாவளை | 213208252 |







யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பத்தாம் ஆண்டு நிறைவுவிழா நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் 'செஞ்சொற் செல்வர்' ஆறு திருமுருகன், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் மணிவாசகர், யாழ்.மறை மாவட்டக் குருமுதல்வர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார், வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி பீடாதிபதி ஆர்.பேணார்ட் ஆகியோர் உரையாற்றுவ தையும்,

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் 'கலாசுரபி' சஞ்சிகையை வெளியிடுவதையும் அதனை லயன் டாக்டர் வை.தியாகராஜா பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: ஓங்காரன், ரட்ணம்)*

# சிறைகளிலுள்ள 40 சதவீதமான கைதிகள் போதைப்பொருள் குற்றம் சம்பந்தமானோர்

## டி யூ.குணசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

சிறைச்சாலைகளிலுள்ள 40 சதவீதமானவர்கள் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் சம்பந்தப்பட்டோராவர்.

இப்படி புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர்மேலும் கூறியவை வருமாறு:-

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் இன்றளவில் சுமார் 30 ஆயிரம் கைதிகள் உள்ளனர். வருடாந்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் சிறைகளுக்கு வருவதும் போவதுமாக உள்ளனர். கைதிகளில் 65 சதவீதமானோர் திருமணமானவர்கள்.

இவர்களுக்குச் சிறைகளில் உணவு கிடைக்கிறது. ஆனால், இவர்களது குடும்பத்தினர் சிறையில் இருப்பவரை விட அதிக தண்டனையை அனுபவிக்கின்றனர். அந்தக் குடும்பங்கள் உணவு இன்றி கஷ்டப்படுகின்றன. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. இது குறித்தும் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

ஒரு சிறைக் கைதிக்கு நாளொன்றுக்கு 261 ரூபாவை அரசு செலவிடுகின்றது. 1,500 ரூபா அபராதம் செலுத்தமுடியாத நபருக்கு நீதிமன்றம் மூன்று மாத சிறைத் தண்டனை விதிக்கின்றது. ஆனால் அரசு இவருக்கு அபராதத் தொகையைவிட பல மடங்கை அதிகமாகச் செலவிடுகின்றது.

சிறைச்சாலைக் கைதிகளில் 50 சதவீதமானோர் மீண்டும் மீண்டும் சிறைக்கு வருபவர்கள். ஒரு சிலர் 10 தடவைகளுக்கு மேல் தண்டனைபெற்று சிறைக்கு வந்துள்ளனர்.

கைதிகளில் பத்து சதவீதமானோர் படிப்பறிவு இல்லாதோராவர். சரணடைந்த புலி உறுப்பினர்களிலும் பத்து சதவீதமானோர் படிப்பறிவற்றோர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

- இவ்வாறு அவர் சொன்னார். (சி)

# வேலை தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையருக்காக புதிய காப்புறுதித்திட்டம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்வோருக்காக புதிய காப்புறுதித் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இரத்தினபுரிக் கிளையை அங்குராார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் ஏதேனும் இடர்களை எதிர்நோக்கினால் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் நிவாரணங்களை வழங்கும் நோக்கில் இந்தக் காப்புறுதித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தக் காப்புறுதித் திட்டம் முழுக்க முழுக்க சேவை நோக்கத்தை முதன்மையாகக் கொண்டது.

காப்புறுதித் திட்டத்தை முன்னெடுப்பது குறித்து இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் தலைவருடன் ஏற்கனவே பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார். (சி)

# 17 ஆவது திருத்தச் சட்டத்தை அரசு அமுல்படுத்துமாயின் ஐ.தே.க. ஆதரவு

## லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை, 23

17 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை அரசு வெற்றிகொள்ளமுடியும் - என்று ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச இவ்வாறு செயற்படுமாயின் எதிர்காலத்தில்பொதுத் தீர்மானங்கள் குறித்து எமதுகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஐ.தே.கவுக்கும் - அரசுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து கருத்துரைத்த அவர், இந்தச் சந்திப்பானது ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இடம்பெற்ற பண்பாட்டின் நிமிர்த்தம் இடம்பெற்றது என்றும்கூறினார்.

இதனடிப்படையிலேயே ஐ.ம.சு. கூட்டமைப்புடனான சந்திப்பாக முன்னைய சந்திப்பு இடம்பெற்றது.

எனினும், எதிர்காலத்தில் இவ்வாறான கலந்துரையாடல்கள் திட்டமொன்றின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படும் வகையிலேயே இடம்பெறும்.

இந்த நிலையில் அரசு 17 ஆவது அரசமைப்பு சீர்திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாயின் அதற்கு ஐ.தே.க. முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

# இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட கண்ணனை திருப்பியழைக்கக்கோரி கனடாவில் வழக்கு

கொழும்பு, ஜூலை 23

கனடாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ஏ.கே.கண்ணன் என அழைக்கப்படும் ஜோதிரவி சிற்றம்பலம் (வயது - 40) அவரது வீட்டில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்றும் அவரைத் திருப்பியழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கனேடிய சமஷ்டி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கனடியப் பத்திரிகையொன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

40 வயதான ஜோதிலிங்கம் சிற்றம்பலம் ஜூன் 11ஆம் திகதி கனடாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தார். ஜூன் 26ஆம் திகதி இவரின் சொந்த ஊரான யாழ். கரவெட்டியிலுள்ள வீட்டிற்குச் சென்ற குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் அவரையும் அவரது தந்தையையும் கைது செய்துள்ளனர். தந்தை பின்னர் விடுவிக்கப்பட்ட போதும் ஜோதிரவி குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவர் பலத்த சித்திரவதைக்கு ஆளாகியிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது அவர் கனடாவிலுள்ள அவரது மனைவியுடன் தொலைபேசியில் உரையாட அனுமதிக்கப்பட்டபோதும் பொலிஸாரின் முன்னிலையிலேயே உரையாட அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டப்பட்டிருக்கிறது.

கனேடிய குடிவரவு - குடியகல்வு அமைச்சரினதும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினதும் மோசமான நடவடிக்கைகள் தனக்கு உயிராபத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஜோதிலிங்கம் ரவி தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோதிரவி சிற்றம்பலம் நாடு கடத்தப்படுவதற்கு முன்னதாக இலங்கை சென்று வந்த கனேடியத் தூதுக்குழு ஒன்று இவர் நாடுகடத்தப்படும் சந்தர்ப்பத்தில் அவருக்கு ஆபத்து ஏதும் நேராது என்று கொடுத்த பரிந்துரையின் பேரிலேயே இவ்விரு அமைச்சர்களும் ஜோதிரவி சிற்றம்பலத்தை நாடு கடத்துவதற்கான அனுமதியை வழங்கினர் என ஜோதி ரவி சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி பார்பரா ஜக்குலின் தெரிவித்துள்ளார்.

ஜோதிரவி சிற்றம்பலம் விடுதலைப் புலிகளுக்கு பணம் சேகரித்ததவர் என இலங்கை அரசால் குற்றம்சாட்டப்படிருந்ததை இலங்கைக்கு விஜயம் செய்த கனேடியக்குழு, அமைச்சர்களுக்கு மறைத்துவிட்டது என்றும் பார்பரா ஜக்குலின் குற்றம் சாட்டியுள்ளார். இதனடிப்படையில் அமைச்சர்கள் எடுத்த தூரநோக்கற்ற மோசமான முடிவு ஜோதிரவி சிற்றம்பலத்திற்கு உயிராபத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குற்றம்சாட்டி உள்ளார்.

(சி)

ஜயவிரு
ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 520
சீட்டிழுப்பு திகதி: 21.07.2010

வெற்றி எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 08 39 58 66

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 17,060,006.40 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 215 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 429 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10825 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6187 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 155888 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 24898 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,204,700.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவை : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,268,733.60

# கனிஸ்ரன், சர்மிகன் அபார ஆட்டம்; 210 ஓட்டங்களால் சென்றல் வென்றது!

யாழ்ப்பாணம்,ஜூலை 23

யூலியஸ் கனிஸ்ரன், சர்மிகன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 210 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ்.மத்திய கல்லூரி அணி.

பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 15 வயதிற்கு உட்பட்டோருக்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றனர்.

யூலியஸ் கனிஸ்ரன் 70 ஓட்டங்களையும், சர்மிகன் 53 ஓட்டங்களையும், சஞ்சயன் 44 ஓட்டங்களையும், செளமிதரன் 26 ஓட்டங்களையும், அலன்டிலோன் 10 ஓட்டங்களையும் அலெக்ஸ், நிறோசன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 22, 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 51 ஓட்டங்கள் கிடைத்தன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்களான கஜன் பத்து ஓவர்கள் பந்து வீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் பிரதீபன் 10 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிலக்ஷன் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் டினேஸ்வரன் 7 ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் நிதர்சன் ஐந்து ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 315 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 32.4 ஓவர்கள் நிறைவில் 104 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

கஜன் 25 ஓட்டங்களையும், நிதர்சன் 21 ஓட்டங்களையும், பிரதீபன் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். உதிரிகளாக 31 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்.மத்திய கல்லூரி அணி வீரர்களான செளமிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், நிரூபன் 5 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் நிரோஷன் 5 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் ஜெயந்திரன் 5 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும், யூலியஸ் கனிஸ்ரன் 6.4 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (1-23)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை23

'எவர்சைன்' சிறுவர் உலகம் தனியார் கல்வி நிறுவன விளையாட்டு விழா, நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நிறுவனத்தின் இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் முதல்நாள் சனிக்கிழமை நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் கு.பிரதீபனும், சிறப்பு விருந்தினராக முன்பள்ளி பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதனும் கலந்து கொள்வர்.

இரண்டாம் நாள் ஞாயிறு நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிவரவியல் துறைத் தலைவர் சி.சிறிசற்குணராசா கலந்து கொள்வார். முதல்நாள் நிகழ்வில் திருமதி அன்பரசி பிரதீபனும் மறுநாள் நிகழ்வில் திருமதி சிவராணி சிறிசற்குணராசாவும் பரிசில்களை வழங்குவர். (ஒ-323)

## தியாகிகள் தின உதைபந்தாட்டம்; பாடும் மீன் வி.க.வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூலை 23

தியாகிகள் தினத்தையொட்டி நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி களமிறங்கியது.

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (1-23)

## பெஞ்சமின் 34 பந்துகளில் 59 ஓட்டங்கள் விளாசல்; யாழ்ப்பாணக் கல்லூரி 2 விக்கெட்டுக்களால் வெற்றி

வலி.வடக்கு,ஜூலை 23

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வீரன் பெஞ்சமின் 34 பந்துகளில் பெற்ற 59 என்ற விரைவான ஓட்டங்களின் மூலம் யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தி வரும் 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஓர் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும், யாழ்.இந்துக் கல்லூரியும் மோதின.

இதில் யாழ்ப்பாணக் கல்லூரி 2 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 38.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது.

ஜஸ்மினன் 41, சங்கீதன் ஆட்டமிழக்காது 21, பார்த்தீபன் 21 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 45 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த கோபி 9.2 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பெஞ்சமின் நிரோசன், டிலக்சன் முறையே 7 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 23, 24 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களையும் கஜேந்திரன் 6 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் நிலக்ஷன் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

153 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 19 ஓவர்கள் நிறைவில் 155 ஓட்டங்களை 8 விக்கெட்டுக்களை இழந்து பெற்றது.

பெஞ்சமின் நிரோசன் 34 பந்துகளில் 9 பௌண்டறிகள் 3 சிக்ஸர்களுடன் 59 மதுசன் 36, ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்கள் கிடைத்தன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த துளசிராம் 7 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் சங்கீதனன் ஒரு ஓவர் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஜஸ்மினன் 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை 23

யாழ்.மத்திய கல்லூரியின் நிறுவுநர் தினத்தினை முன்னிட்டு யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 2010ஆம் ஆண்டுக்கான ஆறு பேர் பங்குகொள்ளும் 5 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் 25இற்கு மேற்பட்ட கழகங்கள் பங்கு கொள்கின்றன. (1-23)

## கராத்தே போட்டி ஞாயிறன்று சென்றலில்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான கராத்தே சுற்றுப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் சங்கத் தலைவர் கபிரியல் றோமனிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (1-23)

## ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் பிரதேச செயலகங்கள் பெற்ற புள்ளிகள்

வலி.வடக்கு,ஜூலை 23

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான தடகளப் போட்டிகளில் பெறப்பட்ட புள்ளிகளின் விவரம் வருமாறு:

யாழ்ப்பாணம் - 42 புள்ளிகள், தெல்லிப்பழை - 36 புள்ளிகள், ஊர்காவற்றுறை - 28 புள்ளிகள், நல்லூர் - 19 புள்ளிகள், மருதங்கேணி - 15 புள்ளிகள், சண்டிலிப்பாய் - 11 புள்ளிகள், பருத்தித்துறை - 8 புள்ளிகள், கோப்பாய் 7 புள்ளிகள், சாவகச்சேரி - 3 புள்ளிகள், கரவெட்டி - 3 புள்ளிகள், சங்கானை - 1 புள்ளி. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## மென்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 23

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் கோல்டன் ஸ்றாஸ் விளையாட்டுக் கழகம் உள்ளூர் அணிகளுக்கிடையே நடத்தும் அமரர் யோகேந்திரன் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான மென்பந்துச் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

இதில் 20இற்கு மேற்பட்ட அணிகள் பங்குகொள்ளவுள்ளன. (1-23)



கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறார்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மாணவர்கள் போட்டிகளில் ஈடுபடுவதை முதல் மூன்று படங்களிலும், சிறார்களின் விநோத உடைப் போட்டியை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்)




கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி முன்னாள் அதிபர் ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த முத்திரைவெளியீடு நேற்று கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

'பாண்ட்' வாத்தியம் சகிதம் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் ஹன்டி பேரின்பநாயகத்தின் திருவுருவப்படத்துக்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை உறுப்பினர் ஆர்.இரத்தினப்பிரகாசம் மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதையும் ஞாபகார்த்த முத்திரையை பிரதித் தபால்மா அதிபர் காமினி வெளியிட்டு வைக்க ஹன்டி பேரின்பநாயகத்தின் புதல்வி திருமதி பூம்பாவை சத்தியசீலன் பெற்றுக்கொள்வதையும் முதல்வரிசைப் படங்களில் காணலாம்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் டாக்டர் கே.கேதீஸ்வரன், கல்லூரியின் முன்னாள் அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான அ.பஞ்சலிங்கம், கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ், யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரட்ணம், பிரதித் தபால் மா அதிபர் ஆர்.டி.பி.காமினி ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் கீழ்வரிசைப் படங்களில் காணலாம்.

(படங்கள் :உமா, டிலீப், நேசன்)


## அறிவித்தல்

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க!

துளிர்களின் 'மின்மினி' -குறுந்திரைப்பட CD யை யாழ். நகரில் அன்னை புத்தகசாலையில் மட்டுமே நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

*இல. 07, ஆஸ்பத்திரி வீதி,*
*நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

குறிப்பு: வேறுயாருக்கும் விற்பனை செய்யும் உரிமை வழங்கப்படவில்லை.

பணிப்பாளர்,
துளிர்கள் நிறுவனம்.

*(சி/569102)*



## தவறிவிட்டது

18.07.2010 அன்று பி.ப. 6 மணியளவில் பிரவானிச் சந்தி, வாதரவத்தை, புத்தூர் என்ற இடத்தில் இருந்து சரஸ்வதி வித்தியாசாலை, சரசாலை என்னும் இடத்திற்கு ஸ்கூட்டியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை முக்கியமான ஆவணங்கள் அடங்கிய பிறவுண் கலர் வியாபாரத் தூக்குப்பை (Seales Kit)மேற்படி இடங்களுக்கிடையில் தவறிவிட்டது. இதனால் பரிதவிக்கும் நிலையிலுள்ள எனக்கு அதில் உள்ள ஆவணங்களை மட்டும் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகள் : முரளிகிருஷ்ணா தொலைத்தொடர்பு நிலையம், புத்தூர் சந்தி, புத்தூர்.

தொ.பே. 0775835356, 0772208167, 0213737911


## சமய அறிவுப் போட்டி

வடமராட்சி,ஜூலை 23

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை ஒட்டிய சமய அறிவுப் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலய ஆசிரியர் காரை எம்.பி. அருளானந்தம் பெருந்திருவிழாக் காலத்தில் நிகழ்த்திவரும் தெய்வீகப் பேருரையிலிருந்து இச்சமய அறிவுப் போட்டி இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இப்போட்டி நடைபெறும். (50-236)


# SPOT ADMISSION

## without IELTS

UK யில் உயர் கல்வியைத்தொடர விரும்புகின்ற யாழ்.மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

**Hurry for the next Intake**

இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதி வழங்கலும்

# STUDY IN UK

ஆக கூடுதலான **UK visa**க்களைப் பெற்று கொடுத்துவரும் எமது நிறுவனம் **IELTS** இல்லாமல் ஒரே நாளில் யாழ்.மாணவர்களுக்கு உடனடி அனுமதிகளை வழங்க இருக்கிறது.

முதல் பதிவு செய்யும் 20 மாணவர்களுக்கு அனுமதிகளுக்கு எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது

| | |
|---|---|
| காலம் | 25th July 2010 - 10.30am - 1.30pm |
| இடம் | கர்ரியாலயம்-102 2/2,Navalar Road,Jaffna |

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

பதிவுகளுக்கு

Colombo - 0117 555514 Jaffna - 021 7538395 Hotline - 0714150995

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்கள் VISA தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

September/February மாதங்களுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**Free IELTS Class**

பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்கிய எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்

EXPONET
Overseas Consultants

Head office -
379-1/2, Galle Road,
Colombo 6, Sri Lanka.

Jaffna Branch -
102 2/2, Navalar Road,
Jaffna.

London Branch -
No:56,The Gradens
Harrow Middlessex
Ha1 4EY,UK

www.expogroup.lk Email:nimal@expogroup.lk

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-வ.து

கால்நடை தீவனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| பொருள்கள் | அளவு |
|---|---|
| சிந்தாமணிக்கடலை | 70 Kg |
| மஞ்சள் பருப்பு | 1320 Kg |

மேற்படி கூறுவிலைகளுக்கான விண்ணப்பங்கள் 29.07.2010 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இல. 127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கால்நடைத் தீவனத்திற்குப் பயன்படுத்தக்கூடிய பொருள்களுக்கான கூறுவிலை கோரல் என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
23.07.2010 யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.).



## சிவகாளியம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவின் பிரபல ஜோதிடர்

**கங்காதர ஆச்சாரி சுவாமிகள்**

திருப்பதியில் இருந்து வந்துள்ள சுவாமிகள்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமிகள் அவர்கள் வம்சாவழியாக காளியம்மனின் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, தொழில் வியாபாரம், லட்சுமிகர விடயமான பொருத்தம், பிள்ளைகளின் படிப்பு, பிள்ளைகள் குடும்ப ஒற்றுமையாகப் பெற்றோர்களுடன் நிலைத்திருத்தல் போன்ற விடயங்களையும் கணவன் மனைவி ஒற்றுமையின்மை, கோட்டு வழக்கு, உடல் நலமின்மை போன்றவற்றிற்குப் பரிகாரம், பிரிந்தவர்கள் ஒன்று கூடல், வெளியூர் பயணங்கள், நாம நட்சத்திரம், கல்வி, உத்தியோகம், இலட்சுமி வசிகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், வாஸ்து சாஸ்திரம், வதிவிடப் பிரச்சினைகள், எதிரிகள் கண் திருஷ்டி இவற்றுடன் எதிர்காலப் பலாபலன்களைத் தெரிவிப்பார். ஒருமுறை சந்தியுங்கள்.

**தொ.பே.: 077 6337702 / 077 6335621**

**கைரேகை, ஜோதிடம் பார்க்கும் நேரம்:**
**காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை.**

**பீப்பில்ஸ் இன்**

இல.112/1, மானிப்பாய் வீதி,
(பிள்ளையார் சோடாக் கம்பனி முன்பாக).
யாழ்ப்பாணம்.

(100666)

## திருமுறைப்பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை23

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் திருமுறைப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு நல்லூர் ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாசநாத சுவாமி கோயிலில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் நா.வி.மு நவரத்தினம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் இசைக்கலைஞர்கள் கௌரவிப்பு, இலவச தேவார பண்ணிசை வகுப்பில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்குதல் நாயன்மாரின் திருமுறைச்சுவடிகளுக்கு விசேட சோட சோபசார பூசை வழிபாடுகள் என்பன இடம்பெறும். (50-236)

## ஆள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. (யாழ்.மாநகரப் பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது).

தொடர்பு: 0787885268

CHEC அனுமதி இலவசம்

## Colombo Higher Education Consultancy your CAREER GATEWAY

UK இல் சென்று பட்டப்படிப்பை பூரணப்படுத்துவதற்கு Colombo Higher Education Consultancy (CHEC) நடத்தும் கல்விக் கருத்தரங்கு நாளை (24.07.2010) மு.ப. 10.00 - ந.ப. 12.00 வரை சுன்னாகம் புகையிரத வீதியில் அமைந்துள்ள சக்தி Institute இல் நடைபெறவுள்ளது. மாணவர்கள் பெற்றோர்களுடன் வந்து பயனைப் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு - அனுமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்பு: 0779265447

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில், புதிதாக கட்டப்பட்ட மேல்மாடி கடை விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை.

தொடர்புகளுக்கு > 0115672282

## மரண அறிவித்தல்

### திருமதி கனகசபாபதி மங்கையர்க்கரசி

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தாளையடி தெற்கு, திருநெல்வேலியில் வசித்தவரும் தற்போது கோண்டாவிலில் வசித்துவந்தவருமான திருமதி கனகசபாபதி மங்கையர்க்கரசி நேற்று (22.07.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புலேந்திரராசா மற்றும் ஜெயரஞ்சினி (ரஞ்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ் வரி, அருணாசலம் (அதிபர், கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூதவராயர் கோயிலடி, **அருணாசலம்**
கோண்டாவில். (100845) (மருமகன்)

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 01 ★ 06 ★ 1938



உதிர்வு 03 ★ 08 ★ 2009

### திருமதி சரவணமுத்து சிவபாக்கியம்

உதிரத்தை உறைவித்து ஊனாக்கிப் பெற்றவளே!
உயர்வாக நாம்வாழ தந்தைக்கு துணை நின்று
மதிநிறை இல்லாலாகி கல்வியிலே நாம் மிளிர
மிடியகற்றி பண்போடு வளர்த்த அம்மாவே!
பதிதேடி வருவோர் யாராகினும் வரவேற்று
பல்மொழி புலமையாலே பெருமைகள் தந்தவளே!
விதி வழியே ஏகினாலும் விட்டகலாவுன் நினைவுகளும்
வாழையடி வாழையென தொடர்ந்தே போகுமம்மா! போகுமம்மா!

விராவோடை,
அல்வாய் வடக்கு, அல்வாய். - குடும்பத்தினர்.


"புகைப்படக்கலைஞர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஓர் நற்செய்தி."

PRIYANKA Digital Colour Lab

# பிரியங்கா

டிஜிற்றல் கலர் லாப்

பருத்தித்துறை வீதி. நெல்லியடி. 021 5 670 210

வடக்கு கிழக்கில் முதன் முறையாக
NORITSU QSS-37HD (High Definition) 640 DPI, எனும் இயந்திரத்தை
அறிமுகப்படுத்தியவர்கள் பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப்பினரே!

எம்மிடம் 3R-தொடக்கம் 12X36 வரையான அளவில்
புகைப்படங்களை பிரதியாக்கம் செய்துகொள்ளவும், பாஸ்போட்,
NIC, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் அனைத்து அளவிலான
புகைப்படங்களையும் உடன் பெற்று கொள்ளவும்
உட்புற வெளிப்புற படப்பிடிப்பு, வீடியோ எடிற்றிங்,
போட்டோ டிசைனிங் & ஸ்கானிங்
Cool&Hot லெமனேற்றிங், அல்பம்மேக்கிங்,
டியூறோபிறேம் ஆகிய சேவைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்...



பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

# 800 விக்கெட்டுக்களுடன் விடைபெற்றார் முரளி



நேற்று சாதனையுடன் டெஸ்ட் போட்டிகளில் இருந்து விடை பெற்ற முரளிக்கு ஜனாதிபதி நினைவுப் பரிசு வழங்குகிறார்



இறுதிநாளான நேற்று ஆடுகளம் புகுந்த முரளி தரனுக்கு செங்கம்பளம் விரித்து வரவேற்பளிக் கப்பட்ட போது...



800ஆவது விக்கெட்டை வீழ்த்தியபின்னர்...



முரளியின் மகன் மற்றும் மனைவியுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.



ஓய்வுக்கான விருது வழங்கப்பட்டபோது...

## சாதனை துளிகள்

✱காலியில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்டில் (தனது 134 ஆவது டெஸ்டில்) விளையாடிய முரளிதரன் அந்தப்போட்டியுடன் விடை பெற்றார். இந்தப் போட்டியில் ஒயாவின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம், மொத்தமாக 800 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது வீரர் என்ற சாதனையைப் படைத்தார்.

✱ நேற்றுமுன்தினம் முதலாவது இன்னிங்ஸில் முரளிதரன் 5 விக்கெட்டுகளைச் சாய்த்து அசத்தினார். அவர் ஓர் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் எடுப்பது இது 67ஆவது முறையாகும்.

✱இந்தியாவுக்கு எதிராக 100 விக்கெட்டு கள் வீழ்த்திய முதல் வீரர் என்ற பெருமையை யும் முரளிதரன் பெற்றுள்ளார். நேற்றைய விக்கெட்டுகளையும் சேர்த்து அவர் இந்தியாவுக்கு எதிராக இதுவரை 103 விக்கெட்டுகள் (22 டெஸ்ட்கள்) கைப்பற்றி இருக்கிறார்.

✱இந்தியவீரர்ஷேவாக் அடித்த சதம் அவரது 20ஆவது சதமாகும். அவரது மொத்த சதத் தில் 19 சதம் முதல் இன்னிங்ஸில் பெறப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இது இலங்கைக்கு எதிரான 4ஆவது சதமாகும்.

# சகல துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகி வரும் ஈழ முகாம்களிலுள்ள தமிழ்ப் பெண்கள்



## ஜெயலலிதா குமுறல்

சென்னை, ஜூலை 23

இலங்கை முகாம்களிலுள்ள ஈழத் தமிழ்ப் பெண்கள் அனைத்து விதமான கொடுமைகளுக்கும் - அவமானங்களுக்கும் - துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள் - என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையிலுள்ள தமிழ் மக்களைச் சொல்லொணாத் துயரத்திற்குத்தள்ளிய இனப்போர் ஓராண்டிற்கு முன்பே முடிந்து விட்டது.

ஆனால், வீடுகளை இழந்த அப்பாவித் தமிழர்கள் இன்னமும் முகாம்களில் முள் கம்பி வேலிகளுக்குப் பின்னால் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்குள்ள இளைஞர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேக முத்திரையுடன் துன்புறுத்தப்படுகிறார்கள்.

ஊடகங்களால் வெளியிடப்பட்ட கோரமான வீடியோக் காட்சிகளிலிருந்து பெரும்பாலானோர் கொடிய முறையில் கொல்லப்பட்டிருப்பது தெரிகிறது. இன்று கூட மீதமுள்ள மற்றவர்களின் கதி என்ன வாயிற்று என்பது நிச்சயமற்ற நிலையில்தான் இருக்கிறது.

முகாம்களிலுள்ள தமிழ்ப்பெண்கள் அனைத்து விதமான கொடுமைகளுக்கும், அவமானங்களுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களைப் பாதுகாக்க தந்தையர்களும், கணவர்களும், சகோதரர்களும் இல்லாத சூழ்நிலையில், இலங்கை இராணுவத்தின் கண் முன்னேயே பொது இடங்களில், வெட்ட வெளியில், இயற்கை உபாதைகளை கழிக்க வேண்டிய நிலைமைக்கும், குளிக்கவேண் டிய நிலைமைக்கும் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

மிக அருகிலுள்ள நமது தமிழ்ச் சகோதர, சகோதரிகளின் இத்தகைய நெஞ்சைப் பிளக்கும் நிலைமை மனிதஉரிமை ஆர்வலர்கள், முற்போக்கு நாடுகளின் அரசுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நியாயமான கிளர்ச்சியை - கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலிருந்து பத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்குச் சென்று பார்த்தனர். இந்தக்குழு இலங்கை ஜனாதிபதியைச் சந்தித்தது. இந்தக் குழு, இலங்கையில் தமிழர்கள் எல்லோரும் நலமாக இருக்கிறார்கள் என்ற செய்தியுடன் இந்தியா வந்தடைந்தது.

ஆனால் கடந்த மூன்றாம் திகதி இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பாரதப் பிரதமருக்குக் கருணாநிதி கடிதம் எழுதினார். அப்படியானால் பத்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் பொய்யான தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பது இதிலிருந்தே தெளிவாகத் தெரிகிறது.

பிரதமர் மன்மோகன் சிங் கடந்த 9 ஆம் திகதி கருணாநிதிக்கு எழுதிய பதில் கடிதத்தில், இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய மத்திய அரசு தயாராக இருக்கிறது என்ற உறுதியை பாரதப் பிரதமர் அளித்தார். இதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருணாநிதியின் ஆலோசனையையும் கேட்டார்.

கடந்த 16 ஆம் திகதி பாரதப்பிரதமருக்கு எழுதிய பதில் கடிதத்தில், இலங்கை நாட்டிற்குள் இடம்பெயர்ந்த தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது அதிமுக்கியமானது, அவசரத்தன்மை வாய்ந்தது என்று கருணாநிதி தெரிவித்தார்.

இதிலிருந்து, இலங்கையில் உள்ள தமிழர்கள் இன்றும் கூட மிகவும் கடுமையான துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள் என்பது தெரிகிறது. உண்மை நிலையைக் கண்டறிவதற்காக மற்றுமொரு குழுவை அனுப்புமாறு பாரதப் பிரதமரை கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார். இதன் மூலம் இதற்கு முன்பு அனுப்பப்பட்ட குழுவின் மதிப்பீடு உண்மைக்குப் புறம்பானது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை அரசை இந்தியா ஏன் இன்றுவரை கண்டிக்கவில்லை?

## ஈழத்தமிழர் ஆதரவுப் பீரங்கி வைகோ கேள்வி

கோவை, ஜூலை 23

ஐ.நா. செயலரின் ஆலோசனைக் குழுவை அனுமதிக்க மாட்டோம் எனக் கூறும் இலங்கை அரசை இந்தியா ஏன் கண்டிக்கவில்லை - என்று ஈழத் தமிழர் ஆதரவுப் பீரங்கி வைகோ கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கையில் நடைபெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலரால் நியமிக்கப்பட்ட குழுவை, இலங்கை அனுமதிக்க மாட்டோம் எனக் கூறியுள்ளது. இதை ஏன் இந்திய அரசு கண்டிக்கவில்லை. இலங்கை அரசுக்கு ஆதரவாக இந்தியா செயற்படுகிறது. மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் இந்திய அரசு செய்கிறது.

ஐ.நா. அலுவலகத்தையே இழுத்து மூடுவோம் என்று அங்குள்ள அமைச்சர் ஒருவர் கூறினார் எனச் செய்தி வெளியானது. அவர் தலைமையிலான குழுவினர், அங்குள்ள ஐ.நா. அலுவலகத்தில் பணியாற்றியோருக்கு இடையூறாக நடந்து கொண்டனர். அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்தியா இதுவரை ஏன் கண்டிக்கவில்லை?

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து வேதாரண்யத்தில் எனது தலைமையில் ம.தி.மு.க. சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# இந்தியக் கடற்படையால் கைதாகிய இலங்கை மீனவர் ஐவர் விடுதலை!

மண்டபம், ஜூலை 23

இந்தியக் கடற்பகுதியில் மீன்பிடித்து கைதாகி மதுரைச் சிறையில் அடைக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் ஐந்து பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

புத்தளம், நீர்கொழும்புப் பகுதிகளைச் சேர்ந்த சாஜித் நிக்ஷன் (வயது - 35), யோகான் (வயது - 32) சுமித் (வயது - 36) ரோஹித் குரைரா (வயது - 46) பிரதீப்சுந்தாணா (வயது - 30) ஆகிய மீனவர்கள் ஐந்து பேர் திருகோணமலையிலிருந்து கடந்த மே 18 ஆம் திகதி மீன் பிடிக்கப் புறப்பட்டனர்.

திசை தெரியாமல், இந்தியக் கடற்பகுதியான நாகப்பட்டினத்தில் மீன்பிடித்தனர். ரோந்துப் பணியில் ஈடுபட்ட இந்தியக் கடலோரக் காவல்படையினர், ஜூன் 5 ஆம் திகதி அவர்களைப் பிடித்து மண்டபம் கொண்டுவந்தனர். விசாரணைக்குப் பின்னர் மதுரைச் சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில், கடந்த செவ்வாயன்று இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

மண்டபம் பொலிஸ் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இவர்கள், மறு உத்தரவு வந்ததும் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் நடைபெற்றுவரும் உற்சவத்தில் நேற்றுமுன்தினம் படையினரின் திருவிழாவாகும். உற்சவத்தில் விசேட அபிஷேகம் இடம்பெறுவதையும் படையினர் வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதையும் அர்ச்சனைப் பொருள்களுடன் ஆலயத்திற்குள் வருவதையும் பெண்சிப்பாய்கள் வழிபாட்டில்ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

### வெளிநாடுகளில் இருந்து வந்தோரும் பதியலாம்

# தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வாக்காளர் இடாப்பில் இடம்பிடிப்பது கட்டாயம்

### சிவஞானம், சிவசந்திரன் இருவரும் கூட்டாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் வாக்காளர் இடாப்பில் தம்மை வாக்காளர்களாகப் பதிவுசெய்ய வேண்டியது அவசியம். தற்போது வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கியுள்ளவர்களும் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும்.

இவ்வாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர் இலங்கை. தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வீ.கே.சிவஞானம், பேராசிரியர் இரா.சிவசந்திரனும்.

பவ்ரல் அமைப்பினர் நேற்று பேராசிரியர் சிவசந்திரனின் இல்லத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தமிழ்மக்கள் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்தல் அவசியமாகும். வெளிநாடுகளில் வசிப்பவர்களின் பெயர்களையும் வாக்காளர்களாகப் பதிவுசெய்ய வேண்டும். எமது மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தவும், பல்கலைக்கழக அனுமதி போன்றவற்றுக்கும் வாக்காளர் விகிதம் அடிப்படையாகக் கருத்திற்கொள்ளப் படுவதால் அனைவரும் இந்தப் பதிவைத் தவறாமல் செய்வது கட்டாயமும் அவசியமும் ஆகும்.

நாம் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்தவும் ஏனைய பல்வேறு தேவைகளுக்கும் வாக்களர் பதிவு அவசியம் என்பதையும் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதேவேளை தமிழர் பிரதேசங்களில் வாக்காளர் பதிவுகள் குறித்து அரசியல் கட்சிகள் அக்கறை ஏதுமின்றி ஏனோ தானோ என்று நடந்து கொள்வது வருந்தத் தக்கது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஒ-6-86-319)

### மெதடிஸ் திருச்சபையின் 189 ஆவது ஆண்டு நிறைவுவிழா

வடமராட்சி, ஜூலை 23

இலங்கை மெதடிஸ் திருச்சபை பருத்தித்துறை கட்டைவேலி சேகர பருத்தித்துறை திருச்சபையின் 189 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இலங்கை மெதடிஸ் திருச்சபையின் தலைவர் அருட்திரு டபிள்யூ.பி.எபநேசர் ஜோசப்பின் திருப்பணி கௌரவிப்பு விழாவும் நாளை 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைமெதடிஸ் தேவாலய மண்டபத்தில் சேகர முகாமைக்குரு அருட்திரு என்.அருள்நாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வெஸ்லியக் வழிபாட்டுக்குழுவினரின் தமிழிசை தோத்திர வழிபாடு இடம்பெறும்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை வளாகத்தில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட மெதடிஸ் சிற்றாலயம் அருட்திரு எபநேசர் ஜோசப் அடிகளாரினால் திறந்து வைக்கப் படவுள்ளது. (236)

### தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம்,ஜூலை23

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நெருப்புக்காச்சல் தடுப்பூசி ஏற்றல் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய், மானிப்பாய் ஆகிய பொது சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட இடங்களில் உள்ள உணவகங்களின் ஊழியர்கள் இதில் தவறாது கலந்துகொண்டு தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அ.முருகானந்தன் அறிவித்துள்ளார். (எ-9)

# யாழ்ப்பாணத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த 500 பொலிஸார் நாளை முதல் சிரமதானப்பணி

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை24

யாழ்.மாவட்டத்தில் பரவிவரும் உயிர் கொல்லி நோயான டெங்கை கட்டுப் படுத்தும் முகமாக சுமார் 500 பொலிஸார் நாளை முதல் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நேவின்பத்ம தேவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின்போது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் பரவிவரும் உயிர் கொல்லி நோயான டெங்கு நோயைக் கட்டுபடுத்தும் வகையில் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரி யாவின் ஆணையின் கீழ் வடபிராந்திய சிரேஷ்ட பிராந்தியப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி அமரக்கோன் ஆகியோரின் வழி நடத்த லின் கீழ் நாளை சனிக்கிழமை முதல் பொலி ஸார் சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாக யாழ்.மாநகரப் பகுதிகள் அனைத்திலும் சுமார் 500 பொலிஸாரும் 250 சிவில் நிர்வாக உதவியாளர்களும் யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களும் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன் அடுத்த மாதம் முதல் மானிப்பாய்,சுன்னாகம், ஊர் காவற்றுறை, நெடுந்தீவு, வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, கொடிகாமம், கோப்பாய் ஆகிய ஒன்பது பிரதேசங்களிலும் தொடர்ந்து இப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிரமதானத்துடன் டெங்கு ஒழிப்பு முறை தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் சிரமதானம் மேற்கொள்ளல், துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து டெங்கு தொடர்பான விழிப்புணர்வுகளையும் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தவுள்ளோம்.

யாழ்.மாவட்டதிலுள்ள அனைத்து தியேட்டர்களிலும் திரைப்படங்களின் இடையில் டெங்கு விழிப்புணர்வு காட்சிகள் ஒலி,ஒளிபரப்பவுள்ளதோடு பிரதான வீதிகளின் அருகிலும் டெங்கு ஒழிப்பு தொடர்பான 'கட்டவுட்டுக்களை' காட்சிப்படுத்தவுள்ளோம்.

எனவே பொதுமக்களின் நன்மை கருதி எம்மால் எடுக்கப்படுகின்ற இந்த நடவடிக்கைகளுக்கு அனைத்துப் பொதுமக்களும் மற்றும் வர்த்தகர்களும் தமது பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-16)

### இளம்பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம்;

# நீதிவான் மீதான முறைப்பாடு தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

### பிரதம நீதியரசர் பணிப்பில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 23

நீதிவான் ஒருவரால் வீட்டுப்பணிப் பெண் ஒருவர் உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் இம்சைப்படுத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டின் மீதான முறைப்பாடு தொடர்பாக என்னவிதமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதித்துறை ஆணைக்குழுவின் தலைவரும் பிரதம நீதியரசருமான சி.ஜே.அசோக டி சில்வா பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.

பிரதம நீதியரசரின் இப்பணிப்பினைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் புலனாய்வுப் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ள ஒரு அறிவிப்பில் மேற்படி இளம்பெண் செய்துள்ள முறைப்பாட்டின் மீது பெண்கள் மற்றும் சிறுவர்கள் பொலிஸ் பிரிவு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை ஆராய்ந்து அறிவிக்குமாறு கேட்டுள்ளார்.

குறித்த நீதிவான் இல்லத்தில் பணிபுரிந்த 22 வயதான நுவரெலியாவைச் சேர்ந்த இளம்பெண் துன்புறுத்தல் காரணமாக அங்கிருந்து தப்பியோடி பொலிஸ் பெண்கள் சிறுவர்கள் பிரிவில் தமக்கு நேர்ந்த கதியைப் புகாராகத் தெரிவித்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

நுவரெலியா சாந்திபுரத்தைச் சேர்ந்த அப்பெண்ணின் சகோதரனும் நுவரெலியாப் பொலிஸ் தமது சகோதரி பலவந்தமாகத் தடுத்துவைக்கப்பட்டு, பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கப்பட்டும் தாக்கப்பட்டுமுள்ளாா என்று புகார் செய்திருந்தார்.

அப்பெண் சட்ட மருத்துவரின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு நீதிவான் நீதிமன்றம் ஒன்றில் நிறுத்தப்படாமல் இரட்சண்ய சேனையின் பாதுகாப்புக்கு பொலிஸார் அனுப்பியுள்ளனர். சட்ட மருத்துவரின் அறிக்கையின் பிரகாரம் அவர் சரீர ரீதியிலும் பாலியல் ரீதியிலும் இம்சிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சட்டத்தரணியொருவரின் அனுசரணையுடன் அப்பெண்ணைப் பிறிதொரு நாள் சந்தித்த அந்த நீதிவான், மேற்கொண்டும் பிரச்சினையைத் தொடர்வதில்லையெனக் கடிதம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு அவர் சுதந்திரமாகச் செல்லலாம் என்று தெரிவித்திருந்ததாகவும், அதனால் அப்பெண் நுவரெலியாவுக்குத் திரும்பி பொலிஸில் புகார் செய்ததாகவும் கூறப் படுகின்றது.

குறித்த நீதிவானின் நடத்தை தொடர்பான கடிதம் ஒன்று ஜனாதிபதி, பிரதம நீதியரசர், நீதி அமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் பிரதிகள் ஐ.நா.தூதரகம், இந்தியா, பிரிட்டன் போன்ற தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ப)


### 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

தெல்லிப்பழை துர்க்காபுரம் சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவியவரின் பேரனாகிய எனது தகப்பனாருமாகிய

## தி.சுந்தரமூர்த்தி ஐயரின்

18 ஆவது ஆண்டு நினைவாக சுன்னாகம் மயிலனி வடலி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் இசைக் கல்லூரி 24.07.2010 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

சங்கீதம் - சங்கீத வித்துவான் ஏ.கே.கருணாகரன்
மிருதங்கம் - சு.வரதராஜசர்மா
வீணை - செல்வி மதுமிதா வரதராஜன்

சு.வரதராஜா (தலைவர்),
தெல்லிப்பழை ஞானோதய சபை.
0717524218


### உதயன் ஊடக அனுசரணையுடன்

# தரம்-5 மாணவர்களுக்கு ஞாயிறன்று கோப்பாயில் இலவசக் கருத்தரங்கு

தரம்-5 புலைமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான உதயன் ஊடக அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவசக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முதல் அமர்வு காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரையும் இரண்டாம் அமர்வு பிற்பகல் ஒரு மணிமுதல் மாலை 5 மணிவரையும் இடம்பெறும்.

இச் செயலமர்வை கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை நெறிப்படுத்தவுள்ளார்.

வளவாளர்களாக திருகோணமலை மாவட்ட ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.கணேசலிங்கமும் கோப்பாய் ஆசிரியக் கலாசாலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரனும் புலைமைப்பரிசில் பரீட்சை தொடர் சாதனை யாழ்.முன்னணி ஆசிரியர் கே.தவயோகராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் அனைத்து மாணவர்களும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஒ -1)

# கொடியேற்றம்

கொழும்புத்துறை, ஜூலை 23

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நற்கருணை வழிபாடு 31 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் திருவிழாத் திருப்பலி மறுநாள் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கும் நடைபெற்று திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளது. (எ-135)

## சுழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 5ஆவது நாளான நேற்று இந்திய அணி வீரர் ஓஜாவின் விக்கெட்டைக் கைப்பற்றி, அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த 800 டெஸ்ட் விக்கெட்டுகள் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று காலி சர்வதேச மைதானத்துக்கு நேரடியாகச் சென்று முரளிக்கு வாழ்த்துக்கூறி, ஞாபகச் சின்னம் ஒன்றை வழங்கினார்.

இதேவேளை-

எமது வாழ்நாளில் முறியடிக்க முடியாத சாதனையை நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் நிலைநாட்டியுள்ளார். இவருக்கு அரசு தனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் பூரிப்புடன் தெரிவித்துக்கொள்கின்றது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டின் ஆரம்பத்தில் மகிழ்ச்சியுடன் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

சர்வதேச கிரிக்கெட்டில் 800 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தியதன் மூலம் முத்தையா முரளிதரன் உலகுக்கு இலங்கையை இனங்காட்டியுள்ளார். இந்த வரலாற்று நாயகனால் இலங்கையின் கௌரவம் உயர்ந்துள்ளது. இலங்கையர் என்ற ரீதியில் நாம் அனைவரும் இவரையிட்டுப் பெருமிதம் அடைகின்றோம்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.(ஒ-சி)

## டெங்குநோயால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சி அமைச்சும், சுற்றாடல் அமைச்சுமே காரணமாகும்.

டெங்கு நோய் பரவுவதற்கான நுளம்புகளின் உற்பத்தி பெருகுவதற்குக் காரணமான குப்பை - கூழங்களை முறையாக அகற்றாதமைக்கு உள்ளூராட்சி சபைகளே காரணம்.

இதேவேளை, சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்க வழிசெய்ய வேண்டிய பொறுப்பு சுற்றாடல் அமைச்சுக்கு உண்டு. இவை இரண்டும் முறையாகச் செய்யப்பட்டால் டெங்கு நுளம்பு பரவும் ஆபத்து இல்லை.

இதுவரையில் இலங்கையில் 20 ஆயிரம் பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நோய் காரணமாக 150 பேர் உயிரிழந்துள்ளனர்.

உயிராபத்து விளைவிக்கும் இந்நோய் பரவுவதைத் தடுக்க அரசு முழு வீச்சுடன் நடவடிக்கை எடுத்துவருகின்றது. இத்திடத்திற்கு நாட்டிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படும்-என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.நாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்மை கொண்ட ஜனாதிபதிக்கு வலுசேர்க்கக் கிடைத் தமை மகிழ்ச்சியானது எனவும் இதனால் ஜனாதிபதியின் மரணம் சம்பவிக்கும் போது தனது மரணமும் நிகழும் எனவும் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

ஐ.நா. செயலர் பான் கீ மூன், இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருவதால் அவருக்கு தகுந்த பாடம் கற்பிக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை வரலாறு தொடர்பான வம்சக் கதைகளை பான் கீ மூனுக்கு அஞ்சலில் அனுப்பி வைக்க போகிறார் எனவும் -

மொழிமாற்றம் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் அதிலிருந்து தகுந்த பாடம் கற்றுக்கொள்ளும் பான் கீ மூன், இலங்கையிடம் மண்டியிடுவார் என்றும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். (அ-சி)

## தேர்தல்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடமே புதிய பதிவுகள் தேர்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

18 வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் வாக்காளர் இடப்பில் தவறாது தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தமது சொந்த மாவட்டத்தில் பெயர்களைப் பதிவு செய்பவர்கள்தாம் வசிக்கும் பிரதேச செயலகங்களிலோ அல்லது கிராம அலுவலகரிடமோ பதிவு செய்ய முடியும் வேறு பிரதேச செயலகங்களுக்கோ அல்லது கிராம அலுவலகரிடமோ அலைந்து திரிய வேண்டிய தேவைஇல்லை.

மக்கள் அனைவரும் தாம் வசிக்கும் கிராம் சேவகரின் பிரிவிலேயே தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என் பதனை யாழ்ப்பாணம் உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் உறுதிப் படுத்தியுள்ளார்.

### வெளிநாடு சென்றவர்களின் பெயர்களை பதியலாம்

தற்போது வெளிநாடுகளில் வாழ்பவர்கள் மற்றும் கல்வி, தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றவர்கள் அந்நாடுகளின் குடியுரிமை பெறாதவர்களையும் இங்கு வசிக்கும் குடும்ப அங்கத்தவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியும்.

சிறந்த ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் நோக்கி நாம் செல்வதற்கு அனைவரும் வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். எனவே அனைவரும் தமது அரசியல் உரிமையை காப்பதற்கும் ஜனநாயகத்தை நிலை பெறச் செய்யவும் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக தம்மை வாக்காளர்களாக பதிவு செய்து பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6-86-319)

## 17 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குத் தீர்வாக 17ஆவது திருத்தச் சட்டத்தின் நடைமுறை அமையும் என நாம் உறுதியாக நம்புகிறோம் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

17ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இல்லாமையால் பல முக்கிய ஆணைக் குழுக்கள் செயல்இழந்துள்ளன. இதனால் ஜனநாயகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு, லஞ்ச, ஊழல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்றவை செயலிழந்து காணப்படுகின்றமையால் இந்நாட்டு மக்களுக்கு ஜனநாயக ரீதியில் நீதி கிடைப்பது தடுக்கப்பட்டுள்ளது. இதனால், 17ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதனூடாக மேற்படி ஆணைக்குழுக்கள் மீள ஸ்தாபிக்கப்படுவது அவசியமாகின்றது.

17ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக நாம் சில யோசனைகளை முன்வைத்துள்ளோம். இது தொடர்பாகக் கலந்து ஆலோசிப்பதற்காக எமது கட்சிப் பிரதிநிதிகளுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்குமிடையில் இன்று (நேற்று) சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இவ்வாறான சந்திப்புகள் தொடர்ந்தும் இடம்பெறும். - என்றார்.


**Certificate course in Off-set Printing**

அச்சக துறை சம்பந்தமான கற்கைநெறி செயன்முறை விளக்கங்களுடன் பிரிவு-2 ஆரம்பம்.

தொடர்புகளுக்கு:-

இல- 82/13, செட்டித்தெரு, நல்லூர்.
யாழ்ப்பாணம். T.P: 021 2221388.

குறிப்பு ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.



**முகவர் தேவை**

வடமராட்சியில் இயங்கிவரும் கொங்கிறீட் தொழிற்சாலையின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு விற்பனைப் பிரதிநிதிகளும் விற்பனை முகவர்களும் உடன் தேவை.

தொடர்புக்கு : 0217222333


## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோர்க்கில் இருந்து இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இந்தநிலையில், இவர் நேற்று நியூயோர்க் திரும்பியமைக்கான காரணம் தெரியவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான தொடர்பு அதிகாரி மொஹான் சமரநாயக்கா தெரிவித்தார்.

எனினும், நீல் புஹ்னே ஒரு மாதகால விடுமுறையில் செல்ல இருந்தார் என்பதைத் தாம் அறிந்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி அமைச்சர் ரொபர்ட் ஓ பிளேக் நேற்றுக் காலை இலங்கையில் இருந்து மாலைதீவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஒருநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சு நடத்தியமை குறிப்பிடத் தக்கது. (அ-சி)

## வடபகுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிக்கு விஜயம் செய்து, அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கையின் இன்னல்களை நேரடியாகக் கண்டறிந்தனர். யுத்தம் முடிவடைந்து தற்போது 15 மாதங்கள் கடந்துவிட்டன. யுத்தத்தில் துயரங்களை அனுபவித்த மக்கள் இன்றும் துன்பமான வாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர். வடபகுதியில் மீள்குடியேற்றங்கள் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளன என அரசு கூறுவது பொய் என்பதை ஜே.வி.பியினர் நேரில் அவதானித்தனர்.

இன்னும் முகாம்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தங்கியுள்ளனர். தாக்குதல்கள் காரணமாக சொத்துக்களை இழந்த இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு குறைந்தது இழப்பீட்டையாவது வழங்குமாறும் நாம் அரசிடம் வலியுறுத்துகிறோம். முக்கியமாக இளைஞர் சமூகம் தொடர்பில் விசேட கவனத்தைச் செலுத்தி, இடம் பெயர்ந்துள்ள அவர்களின் எதிர்காலத்திற்கு உதவுமாறும் நாம் அரசை கேட்டுக்கொள்கிறோம் - இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரத்நாயக்க. (அ-சி)

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை இராஜசிங்கம்



வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இராஜசிங்கம் நேற்று (22.07.2010) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- சின்னாச்சி தம்பதியரின் மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் இராசதீபனின் (பிரான்ஸ்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் (ஆசிரியர்), துரைராசசிங்கம் மற்றும் விவேகானந்தன் புஸ்பராணியின் பாசமிகு சகோதரனும் தர்மராசா, தங்கராசா, வரதராஜன், செல்வரத்தினம், விவேகானந்தன் காலஞ்சென்ற தர்மசிகாமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவமனை, வதிரி.

தகவல்: குடும்பத்தினர்.

## 25 ஆவது ஆண்டு நினைவில்

(அப்பா) தோற்றம் 12 ★ 12 ★ 1940 — மறைவு 14 ★ 11 ★ 2001



வேதநாயகம் பீற்றர் தேவதாஸ்

(அம்மா) தோற்றம் 07 ★ 06 ★ 1940 — மறைவு 23 ★ 07 ★ 1985



திருமதி லூட்ஸ் மாகிறெட் பீற்றர் தேவதாஸ் (சரோஜினி)

ஆண்டு பலவாகினும் அன்பு உள்ளம் மறப்போமோ
அன்பொழுக வாழ்ந்த நிலை உரையாது இருப்போமோ
என்புருக வாடுகின்றோம் உங்கள் நினைவாலே
அன்பான இறைவன் பதம் அடைந்திட மன்றாடுகின்றோம்.

28, சோமசுந்தரம் அவெனியு,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
**பிள்ளைகள்.**




## முக்தி தீட்சை

நேரம் :- காலை 8.30- பி.ப 01.30.
திகதி :- சனிக்கிழமை -24.07.2010
இடம் :- யாழ்.இந்துக்கல்லூரி
குமாரசாமி மண்டபம்.
யாழ்ப்பாணம்.

**சிறப்பு நிகழ்ச்சி**

இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள
**ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவானின்**
சிடராகிய
**உமாதாசாஜி**
அவர்களால் ஆனந்த வாழ்விற்கான
வழிமுறைகளை காட்டும்
பயிற்சி பட்டறை மற்றும் முக்தி தீட்சை.

தங்களின் சைத்தன்ய நிலை உயர்ந்து அன்பு மலர்ந்து இறைவனை உணரவும்,ஆனந்தமும் அமைதியும் நிறைந்த வாழ்க்கை அமைய தங்கள் குடும்ப சகிதம் கலந்து பகவத் சாக்ஷாத்காரம்,ஜிவன் முக்தி பெறுவீராக.

ஏகத்துவ பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.